பூமியின் குடிகளே, எல்லாரும், கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள் (சங் 100:1)

# ஜெய கீதங்கள்

# (SONGS OF VICTORY)

## அசெம்பிளி ஒப் கோட்

(தேவ சபை)

சாவகச்சேரி

இது HOMSA வின் அன்பளிப்பு
(தனியார் பாவனைக்கு அல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

சரணங்கள்

அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் ஏசுவைத் துதியுங்கள்

பல்லவி

ராஜாதி ராஜனும் இயேசு ராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா, அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
ரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்

சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கன்மலையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்

பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்

ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே, முன்னோடிகளே, தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை மீட்கப்பட்டோர் நிரப்புவார் துதியுங்கள்

# 2

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்

சரணங்கள்

பண்புறு ஞானம் - பரம நம்பிக்கை
இன்ப விசுவாசம் இவைகளிலெல்லாம்-அன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பல பாஷை - படித்தறிந்தாலும்
கல கல வென்னும் - கைம்மணியாமே - அன்பே

என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பில்லையானுல் - அதிற்பயனில்லை - அன்பே

துணிவுடனுடலைச் - சுடக்கொடுத்தலும்
பணிய அன்பில்லால் - பயனிதிலில்லை - அன்பே

சாந்தமும் தயவும் - சகல நற்குணமும்
போந்த சத்தியமும்-பொறுமையுமுள்ள-அன்பே

புகழிறு மாப்பு - பொழிவு பொருமை
பகைய நியாயப் - பாவமுஞ் செய்யா - அன்பே

சினமடையாது - தீங்கு முன்னுது
தின மழியாது - தீமை செய்யாது - அன்பே

சகலமும் தாங்கும் - சகலமும் நம்பும்
மிகைபட வென்றும், மேன்மை பெற்ருேங்கும்
- அன்பே

## 3

பல்லவி

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

அனுபல்லவி

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்

சரணங்கள்

காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே
இவ் வனுந்திரத்தில் நயங்காட்டி உன்னே
இனிதாய் வருந்தி அழைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே

கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன் படிக்கைகளை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக்கொள்வார்

இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே

வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்

ஆனந்தம் பாடி திரும்பியே வா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய்

4

அறுவடை மிகுதி ஆளோ இல்லை
அன்பரின் கதறல் கேட்டிடுதே

நாளிலம் முழுதும் நானூறு கோடி
நாசத்தின் வழியை நாடிடுதே
இயேசுவின் அன்பு தம்மையும் நெருக்க
எழும்பிடுவோம் நாம் வாலிபரே - அறு...

அமைதி இல்லை நம்பிக்கை யில்லை
அழுகையும் கண்ணீரும் வாழ்க்கையிலே
உறக்கமும் இல்லை முழு உணவில்லை
உணர்ந்திடுவீர் இதை வாலிபரே - அறு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகம்போல் உழைத்தும்வறுமையில் தொல்லை
வாதையில் வாடிடும் கூட்டத்தைப்பார்
ஆற்றுவாரில்லை தேற்றுவாரில்லை
அன்பினைக் காட்டவும் யாருமில்லை — அறு...

நம்பிக்கையற்ற கல்லறை நாடி
நாளினில் லட்சங்கள் செல்கிறதே
திறப்பினில் நிற்க ஆளில்லை என்று
திகைத்துக் கதறிடும் இயேசுவைப்பார் – அறு...

அலறிடும் பிள்ளைகள் குறலினைக் கேட்டும்
அழுவதன்றி வேறென்ன செய்வார்
யாரை அனுப்புவேன் யார் போவார் என்றூர்
கதறலை உன் உள்ளம் கேட்டிடாதோ - அறு...

அன்பரே வந்தேன் அழுகையை கண்டேன்
அற்பணித்தேன் எந்தன் வாழ்க்கையினை
பாரினில் கழுதையாய் சுமந்துமை சென்று
பாதத்தில் விடுவேன் என் ஜீவனையே — அறு...

## 5

பல்லவி

அக்கினி அபிஷேகம் - தந்து
ஆவி பொழிந்திடும்

அனுபல்லவி

பின்மாரியுடன் பரிசுத்தாவி
பலமாக இறங்கிடவே

சுட்டெரிக்கும் தம் அக்கினி
சுத்தி கரிக்க எம்மையும்
குற்றம் குறைகள் மற்றுங் கறைகள்
முற்றிலும் நீக்கிடுமே எம்மில் – அக்கினி

பற்றினதே வான் அக்கினி
பக்தன் எலியா கூப்பிட
வேண்டுதல் கேட்டு வானந்திறந்து
வல்லமை ஊற்றிடுமே அதை – அக்கினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசேயுங் கண்ட அக்கினி
முட்செடி மேலே பற்றிட
அற்புதக் காட்சி தற்பரன் மாட்சி
அண்டிட தந்திடுமே அதை - அக்கினி

மேலறை வந்த அக்கினி
சீஷரை அன்று சந்திக்க
பற்பல பாஷை பேசி மகிழ்ந்த
பக்தி வரந்தாரும் தேவா - அக்கினி

நாதாப் அபியூ அக்கினி
நாடி அழிந்தால் நஷ்டமே
அந்நிய தீயை பட்சிக்கும் தேவ
ஆவியே வந்தாளும் நல்ல - அக்கினி

இரண்டு மடங்கு அக்கினி
இந்தக் கடைசி நாட்களில்
மாமிசமான யாவரின் மேலும்
மாரியுடன் பொழியும் பின் - அக்கினி

## 6

பல்லவி

அத்தி மரம் துளிர் விடாமல் போனாலும்
திராட்சைச்செடி பழம் கொடாமல் போனாலும்
ஒலிவ மரம் பலனற்றுப் போனாலும் ........ நான்
இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்

சரணங்கள்

வயல்களிலே தானியமின்றிப் போனாலும்
மந்தையிலே முதலற்றுப் போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்....
நான் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் //
...அத்தி

நதிகளிலே தண்ணீர் வற்றிப் போனாலும்
நாவறண்டு நான் மயங்கிப் போனாலும்
உடலழிந்து உயிர் பிரிந்து போனாலும்........நான்
இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிப்பேன் //....அத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

பல்லவி

அவர் என் சங்கீதமானவர்
பலமுள்ள கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான அவரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்துவேன்

சரணங்கள்

துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
திக்கற்ற பிள்ளைகளின் தேவன் அவரே - அவர்

இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்தினுல்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன்
இருகரம் தட்டி என்றும் வாழ்த்திடுவோம் - அவர்

வானவர் கிறிஸ்தேசு நாமமதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்திடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம்
- அவர்

## 8

சரணங்கள்

அருள் ஏராளமாய்ப் பெய்யும் உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும் சபையை உயிர்ப்பிக்குமே

பல்லவி

அருள் ஏராளம் அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாய் அல்ல
திரளாய்ப் பெய்யட்டுமே

அருள் ஏராளமாய் பெய்யும் மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும் செழிப்பும் பூரிப்புமாம் - அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் ஏராளமாய் பெய்யும் யேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும் கிரியைசெய்தருளுமே - அருள்

அருள் ஏராளமாய்ப் பெய்யும் பொழியும் இஷணமே
அருளின் மாரியைத் தாரும் ஜீவதயாபரரே - அருள்

# 9

அன்பே தம் உருவாகி வந்தார்
அன்பே தம் மொழியாகத் தந்தார்
அன்பே தம் வழியாக நடந்தார்
இயேசு இயேசு இயேசு

அறவாழ்வு நெறிமீறி அலைகின்ற மனிதன்
அழிகின்ற பெரும் பாவம் புரிந்தான்
அதுகண்டு பேரன்பு இறைவன் தன் மைந்தன்
அருள் செய்ய மனுவேடம் கொண்டார்

மறைஞான மொழி பேசி பணியாவும் செய்தார்
மக்கள் தம் பாவம் சுமந்தார்
மறு வாழ்வு நமக்கெல்லாம் தர மீட்டுக்கொண்டார்
நம் மனக் கோயில் உறை தெய்வமானார்.

# 10

அந்தோ கல்வாரியில் - அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்கினார்

சரணங்கள்

மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமைக் குருசைத் தெரிந்தெடுத்தாரே
மாய லோகத்தோடழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே - அந்தோ

அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றோர் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே - அந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்கினார்
வருந்திமடிவோரையும் மீட்டிடவே - அந்தோ

அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதினும் இன்பம் அன்பரின் தியானம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே - அந்தோ

சிலுவை காட்சியைக் கண்டு முன்னேறி
சேவையே புரிவேன் ஜீவனும் வைத்தே
என்னைச் சேர்த்திட வருவேனென்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன் - அந்தோ

# 11

அக்கினி அபிஷேகம் ஈந்திடும் //
தேவ ஆவியால் நிறைத்திடும்
தேவா ........ தேவா......இக்கணமே ஈந்திடும் //

பரமன் இயேசுவை நிறைத்தீரே ...... பரிசுத்த
ஆவியால் நிறைத்திடும்.
உந்தன் சீஷருக் களித்தீரே - அன்பின்
அபிஷேகம் ஈந்திடும் - தேவா ...தேவா...

சிம்சோன் கிதியோனை நிறைத்தீரே -கர்த்தரின்
ஆவியால் நிறைத்திடும்
தீர்க்கன் எலிசாவுக் களித்தீரே - இரட்டிப்பின்
வல்லமையால் நிறைத்திடும் தேவா...தேவா...

மீட்பர் இயேசுவின் வருகையிலே நானும்
அவரைப் போல் இருக்கவே
மீட்பின் நாளுக் கென்று முத்திரையாய்
பரிசுத்த ஆவியால் நிறைத்திடும் - தேவா... தேவா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

அனு பல்லவி

அதிகாலையில் பாலனைத் தேடி
செல்வோம் நாம் யாவரும் கூடி
அந்த மாட்டடையும் குடில் நாடி
தேவ பாலனைப் பணிந்திட வாரீர்.

பல்லவி

அதிகாலையில பாலனைத் தேடி
வாரீர் வாரீர் வாரீர் நாம் செல்லுவோம்

அன்னை மரியின் மடி மேலே
மன்னன் மகவாகவே பாட
விண் தூதர்கள் பாடல்கள் பாட
விரைவாக நாம் செல்வோம் கேட்க
- அதிகாலையில்

மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே
அந்த முன்னணை முன்னிலே நின்றே
தம் சிந்தை குளிர்ந்திட போற்றும்
நல் காட்சியை கண்டிடவாரீர் - அதிகாலையில்

## 13

அருளின் மாமழை பெய்யும்
என்று வாக்களித்தாரே
மாரியாய்ப் பெய்திடச் செய்யும்
உலகத்தின் இரட்சகரே

பல்லவி

தேவன்பின் வெள்ளம்
தேவன்பின் வெள்ளம் தேவை
கொஞ்சம் ருசித்த என் உள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை

கற்பாறைபோற் பாவி உள்ளம்
கடினப்பட்டதையா
பரிசுத்த ஆவியின் வெள்ளம்
கரைக்க வல்லதையா தேவன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டாந்தரை நிலந்தானும்
ஏதேன் போல் மாறும் என்றீர்
சாபத்துள்ளான முட்பூண்டும்
கேதுருவாகும் என்றீர் தேவன்பின்

ஏழை என் குறைகள் யாவும்
தீர்த்திடும் இரட்சகரே
யுத்தத்தில் முன் செல்ல ஏவும்
சேனைத்தள கர்த்தரே தேவன்பின்

## 14

பல்லவி

அன்பே, அன்பே, அன்பே
ஆருயிர் உறவே
ஆனந்தம் ஆனந்தமே

சரணங்கள்

ஒரு நாள் உம்தயைக் கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உம் தயை பெரிதையா என்மேல்
உம் தயை பெரிதையா

பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரில் அன்பேனையா
ஆழம் அறிவேனோ – அன்பின்
ஆழம் அறிவேனோ

அலைந்தேன் பல நாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே - எனையும்
அணைத்தீர் அன்பாலே

பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப்போல்
வாடாதே ஐயா – அன்பு
வாடாதே ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ - பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ

## 15

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை யேசுவே
உமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் — திரு

என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே — திரு

என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே — திரு

உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
உமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே — திரு

## 16

ஜீவாதிபதியே — எம்
இதயத்தினுள் வாரும்
ஜீவனும் ஒளியின் அனுபவத்தை
எல்லாருக்கும் தாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூதனமான பிறப்பை ஈந்து
நூதன சிருஷ்டிகளாக்கும்
நூதனமான ஆவியுடனே
உம்மைத் துதிப்பவராக்கும் ... ஜீவாதி

நூதனமான ஜனங்களாக்கி
லோகத்தார் பார்க்கச் செய்யும்
நூதனமான வஸ்திரம் தந்து
நோக்குவோர் முன் வையும் ... ஜீவாதி

நூதனமான இரக்கங்களையே
காலைதோறும் பெறுவோம்
நூதனமான எண்ணெயாலே
அபிஷேகம் கோருவோம் ... ஜீவாதி

# 17

திருக்கரத்தால் தாங்கி என்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வனைந்திடுமே

உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும் // — திருக்......

ஆழ் கடலில் அலைகளினால்
அசையும்போது என்படகில்
ஆத்ம நண்பன் இயேசு உண்டே
சேர்ந்திடுவேன் அவர் சமூகம் // — திருக்......

அவர் எனக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கின்றேனே
இன்ப கானான் தேசமதை // — திருக்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

உள்ளம் ஆனந்த கீதத்திலே
வெள்ளமாகவே பாய்கின்றதே
எந்தன் ஆத்தும நேசரையே — என்றும்
வாழ்த்தியே பாடிடுவேன்

பாவப் பாரம் நிறைந்தவராய்
பல நாட்களாய் நான் அலைத்தேன் — அந்தப்
பாரச் சிலுவையிலே — எந்தன்
பாவத்தைச் சுமந்தவரே — உள்ளம்

பல ஆசையின் ஆழியிலே
அழிந்தே மனம் சோர்ந்திடுதே — அந்த
பாசக் கரங்களிலே
அணைத்தே என்னைத் தூக்கினரே — உள்ளம்

அந்தகாரத்தின் வாழ்க்கையிலே
தடுமாறியே நான் அலைந்தேன்
நிறைவானதோர் பேரொளியாய்
எந்தன் பாதையில் தோன்றினரே — உள்ளம்

## 19

உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூருவாயா
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவையைச் சுமப்பாயா

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்

உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தினின்று கூறுவாயா?
ஊழியம் செய்ய வருவாயா? // — உனக்காக

மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேய்கின்றார் பாவ புல்வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்து நீயும்
மேன்மையை நாடி ஓடுவாயா? // — உனக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு என்றால் என்ன விலை
என்றே கேட்டிடும் எத்தனை பேர்
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா — உனக்காக

ஐந்து சகோதரர் அழிகிறாரே
யாரையாவது அனுப்பிடுமே
யாரை நானும் அனுப்பிடுவேன்
யார்தான் போவார் எனக்காக — உனக்காக

## 20

ஓ! மனிதனே — நீ
எங்கே போகிறாய்?
காலையில் மலர்ந்து மாலையில் மறையும்
மலராய் வாழ்கிறாய்!

மண்ணில் பிறந்த மானிடனே
மண்ணுக்கே திரும்புவாய்
மரணம் உன்னை நெருங்கும்போது
எங்கே ஓடுவாய்?
மரணத்தின் பின்னால் நடப்பது என்ன
என்பதை அறிவாயா? ...ஓ! மனிதனே

பாவியாய்ப் பிறந்த மானிடனே
பாவியாய் மரிக்கிறாய்!
இயேசுவை உள்ளத்தில் பெற்றால் இன்றே
மரணத்தை வென்றிடுவாய்!
நித்திய ஜீவனைப் பெற்று மோட்சத்தில்
என்றும் வாழ்ந்திடுவாய்! ...ஓ! மனிதனே

## 21

எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னைச் சந்திக்க வந்திடுவாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு போதுமே! போதுமே!
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே!

பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்துப்போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே -இயேசு

புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார் -இயேசு

மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும் -இயேசு

# 22

இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன் படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொருங்குண்ட மனதாய் முன் செல்வோர் யார்?

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன் செல்வோர் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

தரிசு நிலங்கள் அநேகமுண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினால் எழுந்து செல்வீர் திறவுண்ட

எத்தனை நாடுகள் இந்த நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன் படுத்தும் மக்கள் ஞானவான்கள் -திறவுண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசிகள் எனும் கூட்டமுண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒரு மனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும் - திறவுண்ட

இனி வரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே!
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே - திறவுண்ட

இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பென்னும் ஆவியால் நிறைத்திடுமே
இலங்கையின் எல்லா தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே - திறவுண்ட

# 23

இயேசு எந்தன் வாழ்வில் பெலனானார்
எனக்கென்ன ஆனந்தம்

எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையில் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் வாழுவேன் உமக்காக

எந்தன் இதயமே உம்மைப்பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும் — இயேசு

பெருந் தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வரும் காலங்கள் உமதாகும்

எந்தன் இதயமே உம்மைப்பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும் — இயேசு

இந்த உலகத்தை நீர் படைத்தீர்
எல்லா உரிமையும் எனக்களித்தீர்
உம் நாமமே தழைத்தோங்க
நான் வாழுவேன் உமக்காக

எந்தன் இதயமே உம்மைப்பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும் — இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

### பல்லவி

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம்பாதம் தொழுகிறோம்

### அனுபல்லவி

இயேசுவே உம் திவ்ய நாமத்திலே
இன்பமுடன் கூடி வந்தோமே

### சரணங்கள்

வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குணிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மைக் கண்பாருமே — தேவா

சாரோனின் ரோஜா லீலிபுஷ்பம்
சாந்த சொரூபி என் இயேசுவே
ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம் — தேவா

கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத்து எண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகரைத் தொழுகிறோம் — தேவா

கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தை கொண்டாடுகிறோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே — தேவா

நூற்றிருபது பேர் நடுவே
தேற்றரவாளனே வந்தீரே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
மன்னவனே இந்நேரமே — தேவா

எப்போ வருவீர் என் இயேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத்தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் இயேசுவே — தேவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

சரணங்கள்

ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்

பல்லவி

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படிக் கிருபை செய்யும் .... ஜெபமே

ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம் ...ஜெபமே

இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம் ... ஜெபமே

# 26

பல்லவி

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களி கூறு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார் //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமம் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே // — தேச

தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வலக்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார் // — தேச

சுசந்த மாரா மதுரமாகும்
கொடியயோர் தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார் // — தேச

கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பார்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய் // — தேச

மாமிசமான யாவர் மீதும்
உன்னத ஆவியை பொழிவார்
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடுவாய் // — தேச

## 27

பல்லவி

துதி செய் மனமே நிதம் துதி செய்
துதி செய் .. இம்மட்டும் நடத்தின உன் தேவனை
இன்றும் என்றும் நன்றி மிகுந்த மனதோடே

சரணங்கள்

முன் காலமெல்லாம் உன்னைத் தம் கரமதில் ஏந்தி
வேண்டிய நன்மைகள் யாவும்உகந்தளித்தாரே - துதி

ஏகிடும் வழியின் பாடுகள் பல நேர்ந்த போது
ஏகபரன் உன் காவலனாய் இருந்தாரே - துதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை பலமாய் மேகம் போல் உன்னை சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை - துதி

தாய் தந்தை தானும் ஏகமாய் உனை மறந்தாலும்
தூயரின் கையில் உன் சாயல் உள்ளதை நினைத்தே - துதி

சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன்
சொந்தம் பாராட்டி உன்னுடன் இருப்பதினாலே - துதி

# 28

சரணங்கள்

தெய்வன்பின் வெள்ளமே! திருவருள் தோற்றமே
மெய்ம் மனதானந்தமே!
செய்ய நின் செம்பாதம் சேவிக்க இவ்வேளை
அய்யா நின் அடி பணிந்தேன்

சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்திக்கமலமாம் பூமாலை கோர்த்து நின்
பொற்பதம் பிடித்துக் கொள்வேன்

பாவச் சேற்றில் பல வேளை பலமின்றிப்
பாதையை தவறிடினும்
கூவி விளித்தும் தம் மார்போடணைத்தன்பாய்
கோது பொறுத்த நாதா

மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்
மோக ஏக்கமானதைக்
தாக்கி யான் தடுமாறித் தயங்கிடும் வேளையில்
தற்பரா! தற்காத்தருள்வாய்

ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்
பூசைப் பீடம் படைப்பேன்
மோச வழிதனை முற்று மகற்றியென்
நேசனே நினைத் தொழுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமோ, ஜீவனோ, மறுமையோ, பூமியோ
மகிமையோ, வருங்காலமோ
பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ
பிரித்திடுமோ தெய்வன்பை?

## 29

பல்லவி

வல்லவரே இயேசு நல்லவரே
மிக அன்பு மிகுந்தவரே - இயேசு
நல்லவரே அவர் வல்லவரே
உனக்காகவே ஜீவிக்கிறார்

சரணங்கள்

ஜீவனின் ஊற்றுமே இயேசுபரன்
தீர்த்திடுவார் உந்தன் பாவமதை //
பாவங்கள் ரோகங்கள் சாபங்கள் போக்கிட
பரிவாய் அழைக்கிறார் // — வல்லவரே

பரனின் அன்பதை அகமதிலே
சொரிந்து தன் திரு ஆலயமாய் //
மாற்றியே தம்மைப் போல் தேவசாயலாக்கி
மகிமையில் சேர்த்திடுவார் // — வல்லவரே

வியாதியினால் நொந்து வாடுவதேனோ
நேயன் கிறிஸ்து சுமந்ததனே //
சிலுவை மீதினில் தீர்த்ததாலே இனி
சுகமடைந்திடுவாய் // — வல்லவரே

## 30

சரணம்

தொல்லைகள் கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் தோன்றிடும்
இருளாய்த் தோன்றும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை வரும் வேளையில்
சொற் கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரத்திலிந்து ஜெயம் வரும்
பரனுன்னைக் காக்க வல்லோர்

பல்லவி

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே //

சரணங்கள்

ஐயமிருந்தோர் காலத்தில்
ஆவிக்குறைவால் தான்
மீட்பர் உதிர பலத்தால்
சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்றே
ஏசு கைத் தூக்கினர்
முற்றும் என்னுள்ளம் மாறிற்றே
இயேசென்னைக் காக்க வல்லோர் — காக்கும்

என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன்
எனது இயேசுவை
அகலமாழ உயரமாய்
இவ்வளவன்பு வைத்தார்
என்ன கஷ்டங்கள் வந்தாலும் அவர்
என்னைக் கைவிடமாட்டார் — காக்கும்

# 31

பல்லவி

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே //
பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினல் சரணம் சரணம் //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர் //
என்னையே மீட்டுக்கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம் // - தொழு

கரங்கள் பொன் வளையங்கள் போல
நிறங்கள் தந்தத்தைப் போல //
கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம் // - தொழு

சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே //
பிரதான எம் மூலைக்கல்லே
ஏராளமாம் சரணம் சரணம் // தொழு

அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக் கெட்டாத விஸ்தாரம் //
கூடி வந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் /
- தொழு

## 32

சரணம்

ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்

பல்லவி

இயேசுவே நீர் பெரியவர்
இயேசுவே நீர் பரிசுத்தர்
இயேசுவே நீர் வல்லவர்
இயேசுவே நீர் நல்லவர்

ஞானஒளி அர்த்தம் நிச்சயம்
கண்ணில் சேறுண்டாக்கிப் பூசிடும்
சிலோவாம் குளத்தில் கழுவி
சீர்திருத்தி உம்மை பணிவேன் - இயேசுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்முகில் கடாத தோகை போல்
கர்த்தரின் வருகைக்காக
காத்திருக்கும் அடியாருக்கு
கனிவுடன் காட்சி தருவீர் - இயேசுவே

சோர்ந்து போகா வல்ல கிரியை
செய்து மகிமையில் கனமும்
அழியாமை தேடும் மாந்தர்க்கு
நித்திய ஜீவனை அளிப்பீர் - இயேசுவே

# 33

சரணங்கள்

முள்ளுள்ள புதர்களின் மத்தியில்
ஒரு ரோஜா புஷ்பம் போலவே
மா சௌந்தர்யமானவரே
இயேசு நாதனே எம் தேவனே

பல்லவி

வாழ்த்துவோம் எங்கள் தேவனை
ஜீவ நாட்களிலும் மறு யாத்திரையிலும்
நன்றியோடே நாம் பாடிடுவோம் //

இதயம் வெம்பி கசந்து நொந்து
மனக்கிலேசம் அடைந்திடுங்கால்
மனப்புண்ணில் எண்ணெய் தடவி
மன ஆறுதல் தந்திடுவார் // — வாழ்த்துவோம்

தந்தை தாயும் என் சொந்தமானோரும்
கைவிட்டாலும் அவர் மாறிடார்
துன்பத்தில் எம்மைத் தாங்கிடுவார்
இன்பங்கள் எமக் கீந்திடுவார்
// — வாழ்த்துவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34

### பல்லவி

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ?
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே

### அனுபல்லவி

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த்தயர் நீர் அருளுகின்றார் — தேவ

### சரணங்கள்

ஆத்துமந் தன்னை குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் — தேவ

சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும் — தேவ

பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி
சுகதைலம் கொண்டேன் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார் — தேவ

ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன் —தேவ

## 35

### பல்லவி

யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

வேதாளக் கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே

வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனைத் துதித்திடவே

மரணத்தின் சங்கிலிகள் தெறிப்பட்டன
தெறிப்பட்டன நொடியில் முறிப்பட்டன

எழுந்தார் என்ற தொனி எங்கும் கேட்குதே
எங்கும் கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே

மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார்

மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை

கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம் பதத்தைத் சிரபணிவோம்

36

சரணங்கள்

பாவியே ஜீவ ஊற்றண்டை வா
மேவியே ஜீவனடைவாய்
கூவியே இயேசு கூப்பிடுகிறார்
தாவியே ஓடி நீ வா

பல்லவி

தாமதமே செய்திடாதே
தருணமே இதை விடாதே
தற்பரன் இயேசு உன்னை இரட்சிப்பார்
பொற்பதம் ஓடியே - வா

உள்ள நிலைமையுடனோடிவா
கள்ள உலகை விட்டு
தள்ளமாட்டாரே எப்பாவியையும்
வல்ல இயேசு நாதரே — தாமதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவியொருவன் திரும்பும் போது
மேவிகள் அவர் முன்னால்
காவியங்கள் கொண்ட பாடல்களை
கூவியே கூப்பிடுகிறார் - தாமதமே

உண்மையாய் இயேசுவை ஏற்பரை
வெண்மையாக மாற்றுவார்
நன்மையை நாடெங்கும் செய்திட்டவர்
உன்னையும் அழைக்கிறார் - தாமதமே

# 37

போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புதிய இதமுடனே //
நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவை நாமென்றும் பாடித்துதிப்போம் //

பல்லவி

இயேசு வென்னும் நாமமே என்
ஆத்துமாவின் கீதமே என் நேசரேசுவை
நான் என்றும் ஏற்றி மகிழ்ந்திடுவேன் //

சரணங்கள்

கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம் கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன் // — இயேசு

யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தமிழ்ந்து மாளாதே //
ஆர்க்கும் ஜெயதொனியோடே பாது காத்த
அன்பை என்றும் பாடுவேன் // — இயேசு

தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால் //
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன் // — இயேசு

பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால் //
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
தந்து தொண்டு செய்குவேன் // — இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பல்லவி

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ

### சரணங்கள்

வருத்தம் பசி தாகம்
மனத்துயரம் அங்கே இல்லை
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன் - பரலோகமே

சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே
அவரின் மகிமையே
எனது இலட்சியமே - பரலோகமே

இயேசு என் நம்பிக்கையாம்
இந்த பூமியும் சொந்த மல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவைபின் பற்றுவேன் - பரலோகமே

ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன் - பரலோகமே

பரம சுகம் காண்பேன்
பரன் தேசம் அதில் சேர்வேன்
இரா பகல் இல்லையே
இரட்சகர் வெளிச்சமே - பரலோகமே

அழைப்பின் சத்தம் கேட்டு
நானும் ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே - பரலோகமே

பளிங்கு நதியோரம்
சுத்தர் தாகம் தீர்த்திடுவார்
தூதர்கள் பாடிட
தூயனை தரிசிப்பேன் பரலோகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39

பல்லவி

பாரீர்! கெத்சமேனே பூங்காவில் என் நேசரையே
பாவி எனக்காய் வேண்டுதல் செய்திடும்
சத்தம் தொனித்திடுதே

சரணங்கள்

தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன் படும்
பாடுகள் எனக்காக – பாரீர்

அப்பா இப்பாத்திரமே நீங்கும் நின் சித்தமானுல்
எப்படியுமும் சித்தம் செய்ய என்னைத்
தத்தம் செய்தேன் என்முரே – பாரீர்

இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவுமே நனைந்தே
இம்மானுவேலன் உள்ள முருகியே
வேண்டுதல் செய்தனரே – பாரீர்

மும்முறை தரைமீதே தாங்கெண்ணு வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே
பாதகர் மீட்புறவே – பாரீர்

அன்பின் அருள் மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்று வாரின்றியே
நொந்து அலறுகின்முர் – பாரீர்

என்னையும் தம்மைப் போல மாற்றும் இம்மா நேசத்தை
எண்ணி யெண்ணியே உள்ளம் கனிந்து நான்
என்றும் புகழ்ந்திடுவேன் – பாரீர்

## 40

பல்லவி

பாதை தெரியாத ஆட்டைப்போல
அலைந்தேன் உலகிலே – நல்ல
மேய்ப்பராக வந்து என்னை மீட்டிரே//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

கதறினேன் நீர் என்னைக் கண்டீர்
பதறினேன் நீர் என்னைப் பார்த்தீர்
கல்வாரியினண்டை வந்தேன்
பாவம் தீர நான் அழுதேன் - பாதை

என் காயம் பார்த்திடும் என்றீர்
உம் காயம் மறைத்திடும் என்றீர்
நம்பிக்கையோடு நீ வந்தால்
விடையாக இருப்பேனே என்றீர் - பாதை

ஊனினை உருக்கிட வேண்டும்
உள்ளொளி பெருகிட வேண்டும்
உம் ஆவியை பெற வேண்டும்
உம்மில் நான் மகிழ்ந்திட வேண்டும் - பாதை

41

சரணங்கள்

பாவ தோஷம் நீக்கிட
மீட்பரின் ரத்தந்தானே!
தீய குணம் மாற்றிட
மீட்பரின் ரத்தந்தானே!

பல்லவி

மெய்யாம் ஜீவநதி !
பாவம் போக்கும் நதி!
வேறே நதியை அறியேன்
இயேசுவின் ரத்தந்தானே! -மெய்யாம்

என்னைச் சுத்த மாக்கிட
மீட்பரின் ரத்தந்தானே!
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் ரத்தந்தானே! - மெய்யாம்

வேறே ரட்சிப்பில்லையே!
மீட்பரின் ரத்தந்தானே!
புண்யக் கிரியை செல்லாதே!
மீட்பரின் ரத்தந்தானே! - மெய்யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்ச மார்க்கம் இதுவே!
மீட்பரின் ரத்தந்தானே!
ஏக சுத்த தீர்த்தமே!
மீட்பரின் ரத்தந்தானே - மெய்யாம்

# 42

பல்லவி

அன்பனே மகா அன்பனே - உந்தன்
அன்பாலே என்னை வென்றாயே

அனுபல்லவி

அன்பாலே முற்றும் நிறைந்தோனே
அன்பே, அன்பே அன்பரே நீர் - அன்ப

சரணங்கள்

உம்மைக் கண்ட நான் விட்டுப் போவேனோ - இந்த
மண்டலம் பின்னால் செல்வேனோ
உம்மா லல்லா திருப்பேனோ
அருளே, அருளே அருள் நிறைவே நீர் - அன்ப

விட்டவரே, விண்ணை விட்டவரே - என்னை
மீட்டுக்கொள்ளவே விட்டவரே
மட்டற்ற தூதர்கள் துதித்தோனே
துதியே துதியே துதியுமக்கே - அன்ப

வருவீரே இன்னும் வருவீரே - என்னை
அணைத்துக் கொள்ளவே வருவீரே
வான தூதத் தொனியோடே
செல்வேன் செல்வேன் மேகத்திலே - அன்பனே

தொல்லைகள் வெகு துக்கங்கள் - எந்தன்
அல்லல்கள் முற்று மறிந்தோனே
அற்புதமா யென்னைச் சுமந்தோனே
அல்லும் பகலும் துதிப்பேனே - அன்ப

# 43

பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே
பக்கம் பட்ட காயமும் பாய்ந்த செந்நீர் வெள்ளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் நித்தம் சொரிந்தும் கஷ்டதவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே நீரே மீட்பர் இயேசுவே
உம்முடைய குருசே என்றைக்கும் என் தஞ்சமே

நிழல் போன்ற வாழ்விலே கண்மூடும் சாவிலே
கண்ணுக்கெட்டா லோகத்தில் நடுத்தீர்வை தினத்தில்
பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே.

# 44

சரணங்கள்

அன்பின் என்னைப் பரிசுத்தனுக்க
உம்மைக் கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேருனீரும்
தந்தை நோக்கம் அநாதியன்றோ

பல்லவி

என் இயேசுவே நேசித்திரோ
எம் மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்

மரித்தோரில் முதல் எழுந்ததினுல்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாமும் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்திர் அப்போஸ்தலரை ... என்

முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேருய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகித்திர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர ... என்

வருங்காலங்களில் முதற்பேருய்
நீர் இருக்க நாம் சகோதரராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே ... என்

நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் இதற்கென் பதில் செய்குவேன்
இம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னைத் தந்தேன் நடத்திடும் ... என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45

### சரணங்கள்

அருணோதயம் எழுந்திடுவோம்
பரனைசுவைத் துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுற வாடவும்

இதைப் போன்றொரு அருணோதயம்
எமைச் சந்திக்கும் மனமே
ஆ! என்னானந்தம் ஜோதி சூர்யனும்
எந்தன் நேசரெழும்பும் நாள்

நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையாம் இயேசு காருண்யம்
ஒவ்வொன்றுயிதைத் தியானம் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

போன ராவினில் ஜீவித்தோர் பலர்
பூமிவிட்டுமே போய்விட்டார்
என்றாலும் நமக்கிந்த நாளையும்
தந்த நேசரைத் துதிப்போம்

நான் நிர்வாணியாய் வந்த வண்ணமே
நிர்வாணியாகப் போகின்றேன்
கூடச் செல்லவும் பூவி லொன்றுண்டோ
நாடிப் போமந்த நாட்டிற்கே

ஆ! என் நேசரின் அன்பை எண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்
ஆ! என் நேசரோர் நவ வான் புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்

பார் தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாரிவள் கானகந்தனில்
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்

கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
நண்பரே கைவிடாதேயும்
ஆசையோடு நான் வாறேன் துக்கம்
பாசமாயங்கு தீர்த்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46

பக்தரே வாரும் ஆசை ஆவலோடும்
நீர் பாரும் நீர் பாரும் இப்பாலனை
வானோரின் வேந்தன் கிறிஸ்து பிறந்தாரே
சாஷ்டாங்கம் செய்ய வாரும் — இயேசுவை

தேவாதி தேவா ஜோதியிற் ஜோதி
மானிடத்தன்மை நீர் வெறுத்திலீர்
நித்திய குமாரன் ஒப்பில்லாத மைந்தன்
சாஷ்டாங்கம் செய்ய வாரும் — இயேசுவை

மேலோகத்தாரே மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப்போற்றுவீர்
விண்ணிற் சந்தோஷம் மண்ணிற் சமாதானம்
சாஷ்டாங்கம் செய்ய வாரும் — இயேசுவை

இயேசுவே வாழ்க! இன்று ஜென்மித்தீரே
புகழும் துதியும் உண்டாகவும்
அன்பின் சொரூபி அருள் அவதாரம்!
சாஷ்டாங்கம் செய்ய வாரும் — இயேசுவை

## 47

### பல்லவி

ஒன்றுமில்லை நான் ///
அன்பு எனக்கிராவிட்டால்
ஒன்று மில்லை நான்

### சரணங்கள்

பல பல பாஷை படித்தறிந்தாலும்
கல கல வென்னும் கைமணியாமே
என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பு எனக்கில்லை என்றால் — ஒன்று

கண் கண்ட பிறனிடம் அன்பு கூறுதவன்
கண் காணு தேவனில் அன்பு கூருவானோ
விண்ணவர் மொழிதனைக் கற்றறிந்தாலும்
அன்பு எனக்கில்லை என்றால் — ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலத்தை தாங்கி சகலத்தை சகித்து
சகலத்தையும் விசுவாசித்து நம்பி
சாந்தமும் தயவும் பொறுமையுமுள்ள
அன்பு எனக்கில்லை என்றால் — ஒன்று

## 48

பல்லவி

தேவனே நான் உமதன்டையில் — இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்

அனுபல்லவி

மாவலிய கோரமாக வன்சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை
சேர்வேன்; — தேவனே

சரணங்கள்

யாக்கோபைப் போல், போகும் பாதையில்—பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என் கனவில்
நோக்கியும்மைக் கிட்டிச்சேர்வேன் வாக்கடங்கா நல்லநாதா
— தேவனே

பரத்துக்கேறும் படிகள் போலவே—என்பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்தன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும்
—தேவனே

நித்திரையினின்று விழித்து —காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்:
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க் கல் நாட்டுவேனே
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக்
கிட்டிச்சேர்வேன்—தேவனே

ஆனந்தமாம் செட்டை விரித்துப்-பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்,
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச்
சேர்வேன் — தேவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49

சரணம்

பலிபீடத்திலென்னை பரனே
படைக்கின்றேனே இந்த வேளை
அடியேனைத் திருசித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

பல்லவி

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந் தோடி வந்தேன்
கழுவும் உம் திரு ரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை //

சரணங்கள்

நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி - கல்வாரியின்

ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
தாசீர்வதித்தருளும் — கல்வாரியின்

சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர் — கல்வாரியின்

பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால் கல்வாரியின்

## 50

பல்லவி

ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசு நாதா ஸ்தோத்திரம் செய்கிறோம்
நின்னடியார் திரு நாமத்தினுதரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

வானதூதர் சேனைகள் மனோகர கீதங்களால் எபோதும் //
ஒய்வின்றி பாடித்துதிக்க பெறும் மன்னவனே உமக்கு //

இத்தனை மகத்துவமுள்ள பதவி இவ்வேழைகள் எங்களுக்கு //
எத்தனை மாதயவு நின் கிருபை எத்தனை ஆச்சரியம் //

நின் உதிரமதினால்திறந்த நின் ஜீவ புது வழியாம் //
நின்னடியார்க்கு பிதாவின் சன்னதி சேரவும் சந்ததம் //

இன்றை தினமதிலும் ஒருமித்து கூடவும் நாமத்தினால் //
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும் ஸ்தோத்திரமே //

நீரல்லால் எங்களுக்கு பரலோகில் யாருண்டு ஜீவநாதா //
நீரயேன்றி இகத்தில் வேறே ஒரு தேட்டமில்லை பரனே //

# 51

அன்புள்ள நேசர் இயேசு எனக்கெல்லாம் அவரே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்
அவர் பள்ளத்தாக்கின் லீலி என தெல்லாம் அவரே
என் ஆத்துமாவின் பிராண நாயகர்
துக்கத்தில் என் ஆறுதல் துன்பத்தில் என தின்பம்
என் கவலைகளெல்லாம் தாங்குவார்

பல்லவி

அவர் பள்ளத்தாக்கின் லீலி
அவர் காலை விடி வெள்ளி
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்

என் சஞ்சலங்கள் நீங்க என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர் ஜீவனை விட்டார்
நான் யாவையும் வெறுத்தேன் என் நேச மீட்பர்க்காய்
அவர் ஒரு போதும் கைவிடமாட்டார்
லோகம் என்னை வெறுத்து சாத்தான் சோதித்தாலும்
மீட்பர் எனக்கு ஜெயந்தருவார்.

கர்த்தாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படி வேனால்
எல்லா துன்பத்தையும் சகிப்பேன்
எனக்கு பயமென்ன? அவர் என் பங்கானால்
என் ஆத்துமத்தின் மன்னா அவரே!
ஜீவ நதிகள் பாயும், சொர்க்கத்தைச் சேர்ந்திட
அவர் திருமுகத்தை நான் காண்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52

பரிசுத்தம் பெற உம்மண்டை வந்து
நிற்கும் மா பாவி நான்
என்னை ஆட்கொண்டு - நிதம்
உம் அருள் தந்து கிருபையாய் வழி நடத்தும்

பல்லவி

இதயக் கதவை திறந்தேனே
என்னுள்ளத்தில் வாரும் இயேசு சுவாமி
பெலவீனம் யாவையும் போக்கி
காத்துக் கொள்ளும் தேவா

என் கரம் உம் கையைப் பிடித்துச் சென்றால்
தவறி விடுவேனே - ஆனல்
உம் கரம் என் கையைப் பிடித்துச் சென்றால்
ஒரு காலும் தவறிடேனே ...... இதயக் கதவை

பூவுலக சத்தமும் என் மாம்ச சத்தமும்
இணைந்து ஒலிக்குதே - ஆனல்
மெல்லிய உம் சத்தம் தெளிவாகக் கேட்டிட
என் செவியைத் திறந்திடுமே......இதய கதவை

## 53

பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
யேசு நாதர் பின் சென்றேகி மோட்சம் நாடுவேன்
விண்ணில் சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்

பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்
பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
யேசுகாட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்

கார் மேகம் மேலேழுடும் பள்ள மென்கிலும்
காற்று கோரமாக மோதும் ஸ்தானத்திலும்
யேசு பாதை காட்ட சற்றும் அஞ்சவே மாட்டேன்
ரட்சகர் கை தாங்க தைரியம் கொள்ளுவேன்
பின்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் தோறும் யேசு நாதர் கிட்டிச்சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின் செல்லுவேன்
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்த்து வாழ்விப்பார்

## 54

பாவ சஞ்சலத்தை நீக்க, ப்ராண சிநேகிதருண்டே
பாவ பாரம் தீர்ந்துபோக, மீட்பர் பாதம் தஞ்சமே
சால துக்கதுன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும், ஊக்கமான ஜெபத்தால்

கஷ்ட நஷ்ட முண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும் ஜெபதூபங் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை பெலவீனம் தாங்குவார்
நீக்கு வாரே மனச்சோர்வை தீய குணம் மாற்றுவார்.

பெல வீன மானபோது கிருபாசனமுண்டே
பந்து ஜனம் சாகும் போது புகலிடம் இதுவே
ஒப்பில்லாத ப்ராணநேசா! உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்

## 55

பல்லவி

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா

சரணங்கள்

பொழிந்திடும் வல்லமை உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை அக்கினியின் வல்லமை

மாம்சமான யாவர் மேலும்
ஆவியை ஊற்றுவேன் என்றீர் //
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்க தரிசனம் சொல்வாரே //

பெந்தேகோஸ்தே நாளின் போல
பெரிதான முழக்கத்தோடு //
வல்லமையாக இறங்கி
வரங்களினாலே நிரப்பும் //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்கப்படும் நாளுக்கென்று
முத்திரையான ஆவியை தாரும் //
பிதாவே என்று அழைக்க
புத்திர சுவீகாரம் ஈந்திடும் //

## 56

சரணங்கள்

ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு,
விசுவாசக் கண்ணுற் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்.

பல்லவி

இன்பராய் ..... ...... ஈற்றிலே .........
மோட்ச கரையில் நாம் சந்திப்போம்
இன்பராய் ........... ஈற்றிலே .........
மோட்ச கரையில் நாம் சந்திப்போம்

அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம்.

நம் பிதாவின் அன்பை நினைந்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம்.

அந்த மோட்ச கரை அடைந்து
வான் சேனையுடன் நாம் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம்

சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆளுவோம்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 57

### சரணங்கள்

இன்று கிறிஸ்து எழுந்தார் அல்லேலூயா
இன்று வெற்றி சிறந்தார் அல்லேலூயா
சிலுவை சுமந்தவர் அல்லேலூயா
மோட்சத்தை திறந்தவர் அல்லேலூயா

ஸ்தோத்திரப் பாட்டுப் பாடுவோம் அல்லேலூயா
விண்ணின் வேந்தைப் போற்றுவோம்அல்லேலூயா
அவர் தாழ்ந்துயர்ந்தாரே அல்லேலூயா
மாந்தர் மீட்பர் ஆனுரே அல்லேலூயா

பாடநுபவித்தார் அல்லேலூயா
இரட்சிப்புக் காரணன் அல்லேலூயா
வானில் இப்போ தாள்கிருர் அல்லேலூயா
தூதர் பாட்டைக் கேட்கிருர் அல்லேலூயா

## 58

### பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே - உன்
ஆண்டவரைத் தொழு தேத்து -இந்நாள் வரை
அன்பு வைத்தாதரித்த
ஆண்டவரைத் தொழு தேத்து

### சரணங்கள்

போற்றிடும் வானோர் - பூதலதுள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள .... ஆண்

தலை முறை தலைமுறை தாங்கும்வ்நோத
உலக முன் தோன்றி ஒழியாத ... ஆண்

தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும் மேலான ... ஆண்

வாதை, நோய், துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த ... ஆண்

உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினுல் முடி சூட்டும் .... ஆண்

துதி மிகுந்தேறத் தோத்தரி தினமே
இதயமே உள்ளமே என்மனமே ... ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59

ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லா கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெருவெள்ளமே

கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எம்மைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைப்பார்
கருத்துடன் பாடிடுவோம் — ஆத்தும

படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்து கவிழ்ந்தாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தி எம்மைக்
காப்பாரே அல்லேலூயா — ஆத்தும

யோர்தானைக் கடந்தோம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்த்தோம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம் — ஆத்தும

பரிசுத்த வான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடி தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார் — ஆத்தும

## 60

ஆயத்தமாய் இருப்பவரே
ஆட்கொண்ட இயேசு வாரார்
மா மகிமை நாதனையே
பாடி மகிழ்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

முன் செல்லுவோம் இயேசுவிடம்
மேக மீதில் இயேசு வாராரே
சீயோனில் நாம்சேர்ந்திடவே
சீக்கிரமாய் எழுந்திடுவோம்

மீட்கப்பட்டோர் குதித்தெழுந்தே
மேசியாவைத் துதிக்க
ஆயிரமாம் தூதர்களும்
ஆனந்தமாய் பாடிட ......... முன்செல்லு

எக்காளமும் தொனித்திடுதே
ஏகமாய் கூடிடுவோம்
தாமதமேன் பாவியுன்னை
தற்பரன் அழைக்கிறாரே ......... முன் செல்லு

# 61

ஆவியின் ஞானஸ்நானம் தாரும் யேசுவே!
அக்கினியின் ஞானஸ்நானம் தாரும் யேசுவே!

சரணங்கள்

பாவ ஆசை வேரோடற ஊற்றும் ஆவியை
பாவ சக்தி மாண்ட கல ஊற்றும் ஆவியை ஆ ......

என்னை யாளும் சுயமாள ஊற்றும் ஆவியை
தன்னைத் தேடும் நேசம் சாக ஊற்றும் ஆவியை ஆ ......

முற் சத்துருக்களை வெல்ல ஊற்றும் ஆவியை
அச்சமின்றி வென்று கொல்ல ஊற்றும் ஆவியை ஆ ......

உள்ளம் முற்றும் சுத்தமாக ஊற்றும் ஆவியை
வெள்ளமாயன்பு பாய்ந்தோட ஊற்றும் ஊவியை ஆ ......

அன்பும் மேல் நிரம்பிப் பாய ஊற்றும் ஆவியை
இன்புடனும்மைச் சேவிக்க ஊற்றும் ஆவியை ஆ ......

தேவசித்தம் ஏற்றுக்கொள்ள ஊற்றும் ஆவியை
தேவ வாக்கை நான் கைக்கெள்ள ஊற்றும் ஆவியை ஆ ......

ஜெப ஆவிமென் மேலோங்க ஊற்றும் ஆவியை
அகம் நின்றே ஊறித்தேங்க ஊற்றும் ஆவியை ஆ ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடர் மேலன்புண்டாக ஊற்றும் ஆவியை
ஆன்ம தாகமுள்ளோனுக ஊற்றும் ஆவியை ஆ.......

இராப்பகல் நாளேலமிட ஊற்றும் ஆவியை
பிரார்த்தி தாத்மா தாயம் பெற ஊற்றும் ஆவியை ஆ.......

எம் தேச முயிரடைய ஊற்றும் ஆவியை
உம் ராஜ்யம் சீக்ரம் வர ஊற்றும் ஆவியை ஆ.......

# 62

ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவரென்னுத்துமாவிற்கே
ஆனந்தமாய் ஆசிகளரும்
ஆண்டவர் இயேசுப்பால் யாருமில்லையே

பல்லவி

இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறெங்குமில்லையே

தந்தை தாயுமுன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுனே
தாங்கிடுவேனென் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார் — இயேசு

கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினுர் — இயேசு

மகிமையும் நம்பிக்கை சந்தோஷமும்
மகிழ்ச்சியின் கிரீடமாகவே
அப்பாஸ்தலர் தம் ஊழியத்தாலே
ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம்—இயேசு

அழுகையின் தாழ்வில் நடப்பவரை
ஆழி போல் வான் மழை நிறைக்குமே
சேர்ந்திட சீயோனில் தேவனின் சந்நிதி
ஜெயத்தின் மேல் ஜெயமடைந்திடுவோம்
— இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63

இராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே
மாதா மரியம்மாள் தான்
பாலன் ஏசுக் கிறிஸ்துதான்

வானம் விட்டுப் பூமி வந்தார்
மகா தேவ தேவனே
அவர் வீடோ மாட்டுக்கொட்டில்
தொட்டிலே முன்னணையே
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

ஏழையான மாதாவுக்கு
பாலனுய்க் கீழ்ப்படிந்தார்
பால்ய காலம் எல்லாம் அன்பாய்
பெற்ருேர்க்கு அடங்கிஞர்
அவர் போல் கீழ்ப்படிவோம்
சாந்தத் தோடு நடப்போம்

பாலர்க் கேற்ற பாதை காட்ட
பாலனுக வளர்ந்தார்
பலவீன மாந்தன் போல
துன்பம் துக்கம் சகித்தார்
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்

நம்மை மீட்ட நேசர் தம்மை
கண்ணுல் கண்டு களிப்போம்
அவர் தாமே மோட்ச லோக
நாதர் என்று அறிவோம்
பாலரை அன்பாகவே
தம் மிடத்தில் சேர்ப்பாரே

64

இராக்காலம் பெத்லேகேம் மேய்ப்பர்கள்
தம் மந்தையைக் காத்தனர்
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அச்சம் கொள்ளவும்
விண் தூதன் திகில் ஏன்
எல்லோருக்கும் சந்தோஷமாம்
நற் செய்தி கூறுவேன்

தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய்க் கிறிஸ்து நாதனுர்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்

இதுங்கள் அடையாளமாம்
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்

என்றுரைத்தான் அச்ஷணமே
விண்ணேராம் கூட்டத்தார்
அத் தூதனேடு தோன்றியும்
கர்த்தாவைப் போற்றினர்

மா உன்னதத்தில் தேவனே
நீர் மேன்மை அடைவீர்
பூமியில் சாமாதானமும்
அல்லோர்க்கும் ஈகுவீர்

65

ஒப்பில்லா - திரு இரா
இதில் தான் மா பிதா
ஏகமைந்தனை லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம்
அன்பின் அதிசயமாம்

ஒப்பில்லா - திரு இரா
யாவையும் ஆளும் மா
தெய்வ மைந்தனுர் பாவிகளை
மீட்டு விண்ணுக்குயர்த்த தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்
எத்தனை தாழ்த்துகிறார்

ஒப்பில்லா — திரு இரா
ஜென்மித்தார் மேசியா
தெய்வ தூதரின் சேனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் சேர்ந்து பராபரனை
பூரிப்பாய் ஸ்தோத்தரிப்போம்
பூரிப்பாய் ஸ்தோத்தரிப்போம்

66

சரணங்கள்

உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதான மாமே
காரிருள் நீங்கிட குவலயமீதிலே
பேராளியாய் ஜெநித்தார்

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே

மானிடர் மேலிவர்க் கன்பிதுவோ
மனுக்கோலமாய் மனுவேலனுர்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாணொளியாய் ஜெநித்தார் ... அல்லேலூ

தாரகை யென அவர் தோன்றிடவே
நேர் பாதையில் நடத்திடவே
தற்பரன் கிருபையும் சத்தியமும் ஈந்திட
தண்ணொளியாய் ஜெநித்தார் ... அல்லேலூ

வாழ்த்து வோம் பாலகன் இயேசு பரன்
வல்ல தேவனின் ஏக சுதன்
வாஞ்சித்தாரே எம்மில் வாசம் செய்திடவே
வானொளியாய் ஜெநித்தார் ... அல்லேலூ

தாவீதின் வேரிவராய் அவனின்
ஜெய ராச்சியம் தான் நிலைக்க
தாசனின் ரூபமாய் தாரணி மீதிலே
தான் உதித்தார் ஒளியாய் ... அல்லேலூ

67

இயேசு அழைக்கிறார் //
ஆவலாய் உன்னைத் தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார் //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை நோக்கினல்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய் —இயேசு

கண்ணீரெல்லாம் துடைப்பார், கண்மணி
போல் காப்பார்
கார் மேகம் போல கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னைக் காத்திடவே — இயேசு

சோர்வடையும் நேரத்திலும், பெலன் உனக்
களிப்பார்
அவர் உன் வெளிச்சம் இரட்சிப்பு மானதால்
தாமதமின்றி நீ வந்திடுவாய் — இயேசு

சகல வியாதியையும் குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே — இயேசு

# 68

பல்லவி

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித்துதித்திடும் நாமமது - இயேசு

வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ளதிரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே-இயேசு

பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது -இயேசு

உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது - இயேசு

சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடை முற்றும் அகற்றிடும் நாமமது - இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 69

பல்லவி

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவன்
வாசஞ் செய்கிருரே

சரணங்கள்

தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனுயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிருரே – இதோ

தேவ ஆறுதலும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனுலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே – இதோ

மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே – இதோ

சீயோனே உன் வாசல்களை
ஜீவதேவனே நேசிக்கிருர்
சீர் மிகுந்திடுமிச் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உனையே – இதோ

முன்னேடியாய் இயேசுபரன்
மூலைக் கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் – இதோ

## 70

பல்லவி

இயேசுன்னை அழைக்கிருர் — இன்பசத்தம் கேளாயோ
இன்னமுமே தாமதமேன்? இரட்சண்ய நாளிதுவே

சரணங்கள்

கல்வாரி குருசினிலே கள்வரின் மத்தியிலே
குருதி சிந்திக் கிரயமீந்தார்
கர்த்தர் இயேசுந்தனுக்காய் — இயேசுன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபை வெளிப்பட்டதே கிறிஸ்தேசின் பிரசன்னத்தால்
சுவிசேஷமே ஈந்ததுவே
ஜீவனும் அழியாமையும் — இயேசுன்னே

பாவ ஜீவியத்தை நீ பற்றிடுவாயோ இன்னும்
பரிகரிப்பார் பாவத்தையும்
சாபம் மரணத்தையும் — இயேசுன்னே

மாநிலத்தின் இன்பங்கள் மாறிடுமே அழிந்தே
மாய்ந்திடாதே வாஞ்சிப்பாயே
மன்னவன் இயேசுவையே — இயேசுன்னே

ஆதரவில்லாதவர் அண்டினல் இயேசுவையே
அன்பர் சமாதானமும்
ஆனந்தமும் ஈந்திடுவார் — இயேசுன்னே

ஜீவாகமமதில் உன் நாமம் பதிந்திடுவார்
ஜீவ கிரீடம் தானளிப்பார்
ஜீவனுடன் வாழவே — இயேசுன்னே

# 71

இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவகுமாரன் ரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

பல்லவி

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்து பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடூழிகாலம் ஸ்தோத்தரிப்பேன்

அன்பு பாராட்டி காப்பவராம்
எந்தனை தாங்கி பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

மெய்ச் சமாதானம் ரம்மியமும்
துய்ய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்த்து வாழச் செய்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72

இருள் சூழ்ந்த லோகத்தில்
இமை பொழுதும் தூங்காமல்
கண்மணிப்போல் என்னை
கர்த்தர் இயேசு காத்தாரே //
கானங்களால் நிறைந்து
காலமெல்லாம் பாடுவேன் //

பல்லவி

நான் அஞ்சேன்! நான் அஞ்சேன்
என் இயேசு என்னோடிருப்பதால் //

மரணப் பள்ளத்தாக்கில்
நான் நடந்த வேளைகளில்
கர்த்தரே என்னோடிருந்து
தேற்றினார் தம் கோலினால்
பாத்திரம் நிரம்பி வழிய
ஆவியால் அபிஷேகித்தார் - நான் அஞ்சேன்

அலைகள் படகின் மேல்
மோதியே ஆழ்த்தினாலும்
கடல் மேல் நடந்து வந்து
கர்த்தரே என்னைத் தூக்கினார்//
ஆடல் நீக்கிட அவர்
அமைதி படுத்தினார் // - நான் அஞ்சேன்

## 73

பல்லவி

இயேசுவண்டை வந்திடுவாய்
பாவங்கள் நீங்கி இரட்சிப்படைந்திடவே

சரணங்கள்

சிலுவையிலே உன் பாவங்கள் போக்கிடவே மரித்தார்
சிந்தனை செய்து இந்த வேளை வாராயோ —இயேசு

துன்பத்திலும் மாயையிலும் மாண்டழியாமலே
இயேசென்னும் ஜீவத்தண்ணீரண்டை வாராயோ —இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையினும் தந்தையினும் அன்புள்ள ஆண்டவரே
இன்றுன்னை மீட்க அன்பாய் அழைக்கிறாரே — இயேசு

நேற்றும் இன்றும் என்றும் மாறா இயேசுன்னை அழைக்கிறார்
நம்பிக்கையோடு தஞ்சம் பெற வாராயோ — இயேசு

நாளைக்கு நீ உயிருடனே இருப்பது நிச்சயமோ
நாளெல்லாம் வீண் தாமதம் செய்திடாதே — இயேசு

# 74

**பல்லவி**

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு //

**சரணங்கள்**

உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழையில்லை பணக்காரனில்லை //
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார் // இயேசு

பாவமில்லை அங்கு சாபம் இல்லை
வியாதி இல்லை கடும் பசியுமில்லை //
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார் // இயேசு

இன்பம் உண்டு சமாதானமுண்டு
வெற்றி உண்டு துதிபாடல் உண்டு //
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார் // இயேசு

# 75

**பல்லவி**

உறக்கம் தெளிவோம்
உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை
கல்வாரித் தொனிதான்
மழைமாரி பொழியும்
நாள் வரை உழைத்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுத்தம் களைவோம் அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் படை ஜெயிக்க நம்மிடை கருத்து
வேற்றுமை யின்றி வாழ்வோம் ... உறக்கம்

கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும்
தரித்திரரானதில்லை
ராஜ்ய மேன்மைக்காய் கஷ்டமடைவோர்
நஷ்டப்பட்டதில்லை ... உறக்கம்

உயிர் பெறுவீர் ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா ஒருவர் உங்கள்
நடுவில் வந்துவிட்டார் .... உறக்கம்

அச்சம் தவிர்ப்போம் தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும்
இரத்த சாட்சிகள் நம்மிடை தோன்றி
நாதனுக்காய் மடிவோம் .. உறக்கம்

# 76

பல்லவி

உருகாயோ நெஞ்சமே நீ, குருசினில் அந்தோ பார்
கரங்கால்கள் ஆணியேறி, திருமேனி நையுதே

சரணங்கள்

தாக மிஞ்சி நாவறண்டு தங்க மேனி மங்குதே
ஏக பரன் கண்ணயர்ந்து எத்தனையாய் ஏங்குறார் - உரு

பூவுலகும் தாங்கும் தேவன் மூன்றுஆணி தாங்கிடவோ
சாவு வேளை வந்த போது சிலுவையில் தொங்குகிறார் - உரு

வல்ல பேயை வெல்ல வானம் விட்டு வந்த தெய்வம் பாராய்
புல்லர் இதோ நன்றி கெட்டு புறம்பாக்கினரன்றோ - உரு

மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை மாய்க்க வந்த மன்னவனும்
இந்நில மெல்லாம் புரக்க ஈனக்குரு சேறினார் - உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77

**சரணங்கள்**

உன்னதமானவரின்
உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

**பல்லவி**

அவர் செட்டையின் கீழ்
அடைக்கலம் புகவே தம்
சிறகுகளால் மூடுவார்

தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே ... அவர்

இரவில் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் ... அவர்

ஆயிரம் பதினாயிரம்
பேர்கள் உன்பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே ... அவர்

# 78

**பல்லவி**

உம்மைப் போல யாரே உலகிலே
என்னை நேசித்தாரே இயேசையா

**அனுபல்லவி**

அன்னையைப் போல
அமுதூட்டி வளர்த்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

தொங்கும் சிலுவைக் காட்டி
கண்டேன் நெஞ்சம் துடிக்குதையோ
பஞ்சமா பாவி என் தஞ்சம் உன்
ஐந்து காயமல்லோ — உம்மை

பாவ ஆழியிலே அமிழ்ந்து
மூழ்கும் வேளையிலே
தாவியென்னை மீட்ட என் அன்பே
வாழ்வில் மறப்பேனோ — உம்மை

79

பல்லவி

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

சரணங்கள்

எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உமது
அங்கம் முழுதும் நோக ஐயா என் ஏகநாதா - எங்கே

தோளில் பாரம் அழுத்த தூக்கப்பெலம் இல்லாமல்
தாளுந் தத்தளிக்கவே தாப சோபம் உற நீர் - எங்கே

வதையினால் உடலும் வாடித்தவிப்புண்டாக
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர - எங்கே

தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பிவர - எங்கே

வல்ல பேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் - எங்கே

மாசணுகாத சத்திய வாசகனே உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து - எங்கே

80

எந்தன் இதயம் உந்தன் வீடு
என்னில் வாசமாய் தங்கும்
என்னில் வாசமாய் தங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட வீட்டில் ஒளியை ஏற்றும்
ஜீவ தீபமே
இதயம் தந்தேன் உந்தனுக்கே
எந்தன் தேவனே, எந்தன் தேவனே — எந்தன்

திரண்ட பாவம் என்னை மூடும்
வேளை தேவனே
மருண்டு வீழ்ந்து விட்டிடாமல்
காரும் தேவனே, காரும் தேவனே — எந்தன்

அலைகள் மோதி திசைகள்மாறி
உருளும் வேளையில்
கரையில் சேர்க்க கரத்தை தந்து
காரும் ராஜனே, காரும் ராஜனே — எந்தன்

# 81

### பல்லவி

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
ஏசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

### சரணங்கள்

ஆதியும் நீரே அந்தமும் நீரே
ஜோதியும் நீரே என் சொந்தமும் நீரே - எந்த

தாய் தந்தை நீரே தாதியும் நீரே
தாபரம் நீரே என் தாரகம் நீரே எந்த

வாழ்விலும் நீரே தாழ்விலும் நீரே
வாதையில் நீரே என் பாதையில் நீரே - எந்த

வானிலும் நீரே பூவிலும் நீரே
ஆதியில் நீரே என் ஆபத்தில் நீரே - எந்த

துன்பத்தில் நீரே இன்பத்தில் நீரே
இன்னலில் நீரே மாறுதவர் நீரே - எந்த

ஞானவைத்தியராம் ஔஷதம் நீரே
ஆத்மநேசராம் என் நண்பரும் நீரே - எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமும் நீரே கானமும் நீரே
நியாயமும் நீரே என் நாதனும்நீரே - எந்த

ஆறுதல் நீரே ஆதாரம் நீரே
ஆசையும் நீரே என் ஆனந்தம் நீரே - எந்த

மீட்பரும் நீரே என் மேய்ப்பரும்
மேன்மையும் என் மகிமையும் நீரே - எந்த

தேவனும் நீரே ஜீவனும் நீரே
ராஜனும் நீரே என் சர்வமும் நீரே - எந்த

# 82

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் நல் வார்த்தை எல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளன — யாரிடம்

அலை மோதும் உலகினிலே
ஆறுதல் நீர் தரவேண்டும்
அண்டிவந்தோம் அடைக்கலம் நீர்
ஆதரித்தே அரவணைப்பீர் யாரிடம்

கல்வாரி மலைமீது
கண்டு உம்மைக் கலங்கி நின்றோம்
கரம், கால்கள், தலை யாவும்
குருதி கண்டு உருகி நின்றோம் யாரிடம்

அமைதி ஒன்றைத் தேடி வந்தோ
நீர் என்றே உமைத் தொடர்ந்தோம்
பாருலகில் ஆறுதல் யார்
நீர்அன்றேல் எம் துணை யார்? —யாரிடம்

# 83

உம் சித்தம் போல் என்னை என்றும்
தற்பரனே நீர் நடத்தும்
என் சித்தமோ ஒன்றும் வேண்டாம்
என் நேசரே என் யேசுவே

திருமார்பில் நான் சாய்ந்திடுவேன்
மறு பிறையான காலம் வரை
பரனே உந்தன் திரு சித்தத்தை
அறிவதல்லோ தூய வழி — உம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிஸ்தம்பம் மேகஸ்தம்பம்
ஆம் இவற்ருல் நீர் நடத்தும்
ராவுபகல் கூடநின்று
என்றென்றுமாய் நடத்திடுமே — உம்......

## 84

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனே இராஜதி ராஜனே
வாழ்த்தி வணங்கிடுவேன்

சரணங்கள்

அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பராட்டும் தூய அன்பே
என்றும் மாரு தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே ...... தோத்திரம்

ஜோதியாய் வந்த அன்பே - பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்விய மதுர அன்பே ...... தோத்திரம்

மாய உலக அன்பை - நம்பி
மாண்ட என்னைக் கண்டணைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே ......தோத்திரம்

ஆதரவான அன்பே - நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னத மா தேவ அன்பே
உள்ளங் கவரும் அன்பே ...... தோத்திரம்

வாக்கு மாருத அன்பே - திரு
வார்த்தை யுரைத்தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே ...... தோத்திரம்

## 85

பல்லவி

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம் திவ்ய மதுரமாமே
அதைத் தேடியே நாடி ஓடியே வருவீர் திருச்சபையாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

காசினிதனிலே நேசமதாகக் கஷ்டத்தை உத்தரித்தே - பாவக்
கசடதை அறுத்து சாபத்தை தொலேத்தார். கண்டுணர் நீ
மனமே - தேன்

பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம் -
பின்னும்
நேமியாம் கருணே நிலேவரமுண்டு நிதம் துதி என் மனமே
— தேன்

காலேயில் பணிபோல் மாயமாய் உலகம் உபாயமாய்
நீங்கிவிடும் - என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே
- தேன்

துன்பத்தில் இன்பம் தொல்லேயில் நல்ல துணேவராம்
நேசரிடம் - நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணேத்துனேக் காப்பார் ஆசை
கொள் நீ மனமே - தேன்

பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்றும்
நாமம் - அதைப்
பிடித்துக் கொண்டால் தான் பேரின்ப வாழ்வைப் பெறுவாய்
நீ மனமே - தேன்

# 86

சரணம்

எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உயர் அடைக்கலத்தில் என்னே வைத்தவரே
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்

பல்லவி

ஆ ஆனந்தம் ஆனந்தமே
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும்
நீரோ வாக்கு மருதவரே —ஆ ஆனந்தம்

உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மை யல்லாதிப் பூமியின் யாரையும்
நம்பிடோம்
உயிருள்ள தெய்வமே நீர் — ஆ ஆனந்தம்

எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
இந்த நிலையில்லா வாழ்க்கையிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே — ஆ ஆனந்தம்

பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீணல்லவோ
உம்பரலோக செல்வமே என் அருள் யேசுவே
போதும் எனக்கு நீரே — ஆ ஆனந்தம்

# 87

உம்மைப் போல் யாருண்டு
எந்தன் இயேசு நாதா
இந்தப் பார்தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு

பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்

உலகம் மாமிசம் பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும் உருக்கும் உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்க
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்

வீட்டிலும் ஊரிலும் செல்லுமிட மெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்

# 88

எருசலேம் என் ஆலயம்
ஆசித்த வீடதே
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடைய வேண்டும் //

பொற்றளம் போட்ட வீதியில்
எப்போது லாவுவேன்
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில் //
எப்போது பணிவேன் — //

எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார் — //

நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து லோக துன்பத்தில்
களிப்பேன் இயேசுவே —//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருசலேம் என் ஆலயம்
நான் உன்னில் வாழுவேன்
என் ஆவல் என் அடைக்கலம்
எப்போது சேருவேன்-//

# 89

பல்லவி

ஓ இயேசு உமதன்பு எத்தனை பெரியது
ஆகாயம் பூமி மலை ஆழிகளுக்கெல்லாம் பெரியது—//
ஓ இயேசு உமதன்பு

சரணங்கள்

அளவில்லா ஆனந்தத்தால் அகம் நிறைந்தது
ஆண்டவர் காரியங்கள் அதிகம் சிறந்தது
அன்றாடம் காலை மாலைகளிலும் துதிக்க உயர்ந்தது
துதிக்க உயர்ந்தது — ஓ இயேசு

சங்கட சமயங்களில் மங்கியே வாடுகிறேன்
துங்கனே இரங்குமென ஏங்கியே நாடுகிறேன்
பங்கமில்லாமல் பதிலளிப்பேன் என்றதால் பாடுகிறேன்
என்றதால் பாடுகிறேன் — ஓ இயேசு

இருளாம் பள்ளத்தாக்கில் மருகியே நடந்தாலும்
அருமெந்தன் மேய்ப்பராய் அருகிலிருப்பதாலும்
கருணையாய் என்னைக் கரம் பிடித்தே கர்த்தரே காப்பதாலும்
கர்த்தரே காப்பதாலும் — ஓ இயேசு

குறைவுள்ளோனானாலும் கூடவே இருக்கிறீர்
நிறைவாம் புல் தரையில் மெதுவாய் நடத்துகிறீர்
இறைவனும் இயேசு எல்லாவற்றிலும்
திருப்தியாக்குகிறீர் ஓ இயேசு

தேவனுடைய வீட்டில் சித்தப்படி துதிப்பேன்
ஏக இருதயத்துடனே என்றுமதை மதிப்பேன்
ஆராதிக்க அருகாரம் இயேசு
அல்லேலூயா ஆமென் .... ஓ இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90

பல்லவி

எந்நாளு மேதுதிப்பாய் - என்னாத்துமாவே, நீ
எந்நாளு மேதுதிப்பாய்

அனுபல்லவி

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது — எந்நா

சரணங்கள்

பாவங்கள் எத்தனையோ நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில்வைத்த மகா தயவை எண்ணி — எந்நா

எத்தனையோ கிருபை- உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை
நித்தமுனை முடி சூட்டினதுமன்றி
நித்திய மான ஜீவனை மீட்டதால் — எந்நா

நன்மையாலுன் வாயை - நிறைத்தாரே, பூர்த்தியாய்
நன்மை யாலுன் வாயை
உன் வயது கழுகைப் போல் பலங்கொண்டு
ஓங்கு இளமைபோலாகவே செய்ததால் — எந்நா

பூமிக்கும் வானத்துக்கும் - உள்ள தூரம் போலவே
பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே சத்திய மேயிது — எந்நா

மன்னிப்பு மாட்சிமையாம் - மா தேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கும் மேற்கும் தூரமே
எல்லாம் உன் பாவம் அகன்றதத்தூரமே — எந்நா

தந்தைதன் பிள்ளைகட்கு - தயவோ டிரங்கானோ
தந்தை தன் பிள்ளைகட்கு
எந்த வேளையும் அவரோடு தங்கினால்
ஏற்றிப் பாரட்டியே தூக்கிச் சுமப்பாரே — எந்நா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 91

பல்லவி

எல்லாம் யேசுவே – எனக்கெல்லாமேசுவே
தொல்லை மிகு இவ்வுலகில் சுகம் அவரே

சரணங்கள்

ஆயனும் சகாயனும் நேயனுமுபாயனும்
நாயனும் எனக்கன்பான ஞானமணவாளனும்

தந்தை தாயினம் ஜனம் பந்துள்ளோர் சிநேகிதர்
சந்தோட சகலயோக சம்பூரண பாக்கியமும்

கவலையி லாறுதலும் கங்குலிலென் ஜோதியும்
கஸ்ட நோய்ப் படுக்கையிலே கை கண்ட ஒளஷதமும்

போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும்

அணியு மாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும்

ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞான கீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும்

## 92

என் ஆத்ம நேச மேய்ப்பரே
என் உள்ளத்தின் ஆனந்தமே
இன்னும் உம்மை கிட்டிச்சேர நான்
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்.

பல்லவி

பேசும் பேசும் ஜெபம் செய்யும் போது
ஆண்டவா பிரியமானதை – இப்போ
காட்டும் செய்ய ஆயத்தம்

மெய் மீட்பரைக் கீழ்ப்படிவோர்
தம் ஆத்மத்தைத் தேற்றுமிடம்
அடியேனும் பெற அருள்வீர்
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும் — பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிகட்கு உமது அன்பை
என் நடையால் காட்டச்செய்யும்
கல்வாரி ஆவியால் உள்ளத்தை
போரில் வெல்ல அபிஷேகியும் — பேசும்

என் ஜீவிய நாட்களெல்லாம்
நீர் சென்ற பாதையே செல்வேன்
ஆசித்து ஈகிறேன் என தெல்லாம்
மீட்பரே வல்லமை தந்திடும் — பேசும்

93

என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்
அப்போ என் துக்கம் மறப்பேன்
பிதாவின் பாதம் பணிவேன்
என் ஆசை யாவும் சொல்லுவேன்
என் நோவு வேளை தேற்றினர்
என் ஆத்ம பாரம் நீக்கினர்
ஒத்தாசை பெற்று தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்

என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
மாதாழ்மை யோடு ப்ரார்த்திப்பேன்
மன்ருட்டைக் கேட்போர் வருவார்
பேர் ஆசீர் வாதம் தருவார்
என் வாக்கின் மேல் விஸ்வாசமாய்
என் பாதம் தேடு ஊக்கமாய்
என்றோர்க் கென் நோவைச் சொல்லுவேன்
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்

என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
ஆனந்தக் களிப்படைவேன்
பிஸ்காவின் மேலே ஏறுவேன்
என் மோட்ச வீட்டை நோக்குவேன்
இத்தேகத்தை விட்டேகுவேன்
விண் நித்ய வாழ்வை பெறுவேன்
பேரின்ப வீட்டில் வசிப்பேன்
வாடாத கிரீடம் சூடுவேன்

94

சரணம்

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் நேசர் தருகிருர் ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் அல்லேலூயா

பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினர் // ...ஆனந்

வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார் // ...ஆனந்

சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினர் // ...ஆனந்

தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினர்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன் // ....ஆனந்

இவ்வுலக பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண காத்திருக்கிறேன் // ...ஆனந்

# 95

பல்லவி

நன்னாள் இதிலே ஆசி கூற
வாரும் தேவனே //

அனுபல்லவி

வருடங்கள் காலங்கள் கழிந்தாலும்
வழுவாமல் காத்த பரிசுத்தரே //

உன் கைகளின் பலனைச் சாப்பிடுவாய்
பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் //
உன் பிள்ளைகள் உன்னைச் சுற்றிலுமிருந்து
ஒலிவ மரக் கன்றுகளைப் போலிருப்பார்கள் // —நன்னாள்

நித்திய ஜீவனை அளியும் தேவா
நித்தமும் உம்மை ஆராதிக்க //
உம் செட்டைகள் மறைவில் குஞ்சுகள் போல
எந்நாளும் பாது காத்திடுவீரே // —நன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 96

கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் மாறிடவே
சுதன் அருள் புரிந்தனரே

பல்லவி

விசுவாசியே நீ பதறாதே
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசத்தால் நீதிமான்
இன்னும் என்றும் பிழைப்பான்

பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம் — விசுவாசியே

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார் — விசுவாசியே

## 97

பல்லவி

காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்

அனுபல்லவி

நம்பி வா......இயேசுவை //
நம்பினேன் இயேசுவை //

சரணங்கள்

நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினரே //
நேசக்கொடி என்மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன் // ... நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்மலைகள் பெயர்க்கும் படியாய்
கர்த்தர் உன்னைக் கரம் பிடித்தார் //
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகு போல எழும்பிடுவாய் // ... நம்பி

அத்திமரம் துளிர் விடாமல்
ஆட்டு மந்தை முதலற்றாலும் //
கர்த்தருக்குக் காத்திருப்பார்
வெட்கப்பட்டுப் போவதில்லை // ... நம்பி

# 98

**பல்லவி**

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் – தேவா
என்றென்றும் நான் பாடுவேன்

**அனுபல்லவி**

இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

**சரணங்கள்**

வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மை போற்றுமே // ... எண்ணி

காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனி தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே // ... எண்ணி

நீரினில் வாழ்கின்ற யாவும்
இந் நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே // ... எண்ணி

வால வயதுள்ளோரும் மிகும்
வயதால் முதிர்ந் தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே // ... எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99

பல்லவி

துதி கீதங்களால் புகழ்வேன்
உந்தன் நாம மகத்துவங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல்

தினந்தோறும் உம் தானங்களால்
நிறைத்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமது போல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால் — துதி

அலை மோதும் இவ் வாழ்க்கையிலே
அனு கூலங்கள் மாறும் போது
வழி காட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோடியார்களை காருண்யத்தால் — துதி

# 100

சரணங்கள்

நான் பாவிதான் ஆனாலும் நீர்
மாசற்ற ரத்தம் சிந்தினீர்
வா என்று என்னை அழைத்தீர்
என் மீட்பரே வந்தேன்

நான் பாவிதான் என் நெஞ்சிலே
கறை பிடித்துக் கெட்டேனே
என் கறை நீங்க இயேசுவே
என் மீட்பரே வந்தேன்

நான் பாவிதான் மா பயத்தால்
திகைத்து பாவப் பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே வந்தேன்

நான் பாவிதான் மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம்
என்மீட்பரே வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பாவிதான் இரங்குவீர்
அணைத்து காத்து ரட்சிப்பீர்
அருளாம் செல்வம் அளிப்பீர்
என் மீட்பரே வந்தேன்

நான் பாவிதான் அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்
உமக்கு சொந்தம் ஆக்கினீர்
என் மீட்பரே வந்தேன்

# 101

சரணங்கள்

பாரக் குருசில் பரலோக ராஜன்
பாதகன் போல தொங்குகிறாரே
பார்! அவரின் திரு இரத்தம் உன்
பாவங்கள் போக்கிட பாய்ந்திடுதே!

பல்லவி

வந்திடுவாய் இயேசு வண்டை
வருந்தியே அழைக்கிறாரே
வாஞ்சைகள் தீர்ப்பவரே —உன்
வாதைகள் நீக்குவாரே

இருதயத்தின் பாரம் அறிந்து மெய்யான
இளைப்பாறுதல் அளித்திடுவாரே
இன்றுமென்ன தாமதமோ
இன்றே இரட்சிப்படைய வருவாய் - வந்திடு

சிலுவையின் மீதில் சுமந்தனரே உன்
சாப ரோகங்கள் தம் சரீரத்தில்
சர்வ வல்ல வாக்கை நம்பி
சார்ந்து சுகம் பெறவே வருவாய் - வந்திடு

நித்திய வாழ்வு பெற்றிட நீயும்
நித்திய ஜீவ ஊற்றண்டைவாராய்
நீசனென்று தள்ளாதுன்னை
நீதியின் பாதையில் சேர்த்திடுவார் - வந்திடு

இயேசுவின் நாமம் ஊற்றுண்ட தைலம்
இன்பம் அவரின் அதரத்தின் மொழிகள்
இல்லையே இந்நேசரைப் போல்
இகமதில் வேறோர் அன்பனுக்கே - வந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 102

பல்லவி

ஓசன்னு பாடுவோம் இயேசுவின் தாசரே
தாவீதின் மைந்தனுக்கு உன்னததத்தில் ஓசன்னு!

சரணங்கள்

முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னப்பாலர் பாடினுர்
அன்றுபோல இன்றும் நாமும் அன்பாய்த்துதி பாடுவோம்

சின்ன மறி மீதில் ஏறி அன்பர் பவனி போனுர்
இன்றும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்

பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்
பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறுர்

பாலர்களில் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடு பாடித்தாளை முத்தி செய்குவோம்

குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்று நாமும் த்ரியேகரைப் போற்றுவோம்

# 103

பல்லவி

காப்பார் உன்னைக் காப்பார் காத்தவர்
காப்பார் இன்னும் இனி மேலும் காத்திடுவார்
கலங்காதே மனமே —காத்திடுவார்

சரணங்கள்

கண்டுனை அழைத்தவர் கரமதைப் பார்
அவர் கை விடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த
ஆசிகளை எண்ணிப்பார்
எண்ணிப்பார் எண்ணிப்பார்
என்றுமதை எண்ணிப்பார் — காப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரவேலுக்கு வாக்குப்படி
இன்பக் கானான் அளிக்க வில்லையோ?
இப்போதிவர்களை நிர்மூலம் செய்வதென்று
பின்னும் இரங்க வில்லையோ?
இல்லையோ, இல்லையோ, இல்லையோ
மனஸ்தாபம் கொள்ள வில்லையோ? — காப்பார்

வீழ்ச்சியில் விழித்துன்னை மீட்பவரும்
இகழ்ந்து விடாது சேர்ப்பவரும்
சிற்சில வேளையில் சிட்சையினாலுன்னைக்
கிட்டயிழுப்பவரும்
ஜெயமும் கனமும் சுகமும்
உனக்கென்று மளிப்பவரே — காப்பார்

தாயின் கட்டில் வருமுன் உனக்காய்த்
தாமுயிர் கொடுத்தவரே
காயினைப் போலுன்னைத் தள்ளிவிடாது
கை கொடுத் தெடுத்தவரே
அவரே, அவரே, அவரே
அன்பு கொண்டு மணந்தவரே — காப்பார்

## 104

சருவ லோகாதிபா நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே நமஸ்காரம்;
தரை கடல் உயிர் வான் சகலமும் படைத்த
தயாபர பிதாவே நமஸ்காரம்!

திரு அவதாரா நமஸ்காரம்
ஜெகத் திரட்சகனே நமஸ்காரம்
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்

பரிசுத்த ஆவி நமஸ்காரம்!
பரம சற்குருவே நமஸ்காரம்
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரிய சித்தே சதா நமஸ்காரம்

முத்தொழிலோனே நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்
கர்த்தாதி கர்த்தா கருணைசமுத்திரா
நித்திய திரியேகா நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 105

பல்லவி

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

சரணங்கள்

வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே- ஸ்தோத்திரம் //
ஆபத்திலே அரும் துணையே - அவர்
பாதைக்கு நல்ல தீபமிதே // ... என்னை

பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே - ஸ்தோத்திரம் //
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலாதெவருமென்னை // ... என்னை

தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே - ஸ்தோத்திரம் //
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
உன்னதா எந்தன் புகலிடமே // ... என்னை

திக்கற்றோராய் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே - ஸ்தோத்திரம் //
நீர் அறியாயாதும் நேரிடா
என் தலை முடியும் எண்ணினீரே // .... என்னை

உன்னைத் தொடுவோர் என் கண்மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே - ஸ்தோத்திரம் //
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே // ... என்னை

உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே - ஸ்தோத்திரம் //
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே // ... என்னை

என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே - ஸ்தோத்திரம் //
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே // ... என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 106

பல்லவி

சோர்ந்து போகாதே மனமே
சோர்ந்து போகாதே

அனுபல்லவி

கண்டுனே அழைத்த தேவன் கைவிடுவாரோ - சோர்ந்து

வாக்களித்த தேவனை நீ பாடிக் கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னைத் தாங்க மன்றாடு — சோர்ந்து

துன்பங்கள் தொல்லைகள் உன்னை சூழ்ந்து கொண்டாலும்
அன்பர் உன்னைத்தேற்றும் நேரம் ஆனந்தமல்லோ - சோர்ந்து

சோதனைகளை ஜெயிப்போன் பாக்கிய வானல்லோ
ஜீவ கிரீடம் சூடும் நேரம் என்ன பேரின்பம் — சோர்ந்து

# 107

சரணம்

காலமோ செல்லுதே - வாலிபமும் மறையுதே
எண்ணமெல்லாம் வீணாகும் - கல்வி எல்லா மண்ணாகும்

பல்லவி

மகிமையில் இயேசுவை
தரிசிக்கும் நேரத்தில்
அந்த நாள் நல்ல நாள் பாக்கியநாள்

சரணங்கள்

கருணையின் அழைப்பினால் - மரணநேரம் வருகையில்
சுற்றத்தார் சூழ்ந்திட - பற்றுள்ளோர் கதறிட — மகிமை

துன்பமெல்லாம்பறந்துபோம் இன்னதெல்லாம் மாறிப்போம்
வியாதியெல்லாம் நீங்கிப்போம் - நாயகன் நம் இயேசுவால்
— மகிமை

வாழ்க்கையை இயேசுவால் - நாட்களை பூரிப்பாய்
ஓட்டத்தை முடிக்க - காத்துக்கொள் விசுவாசத்தை
— மகிமை

உலகத்தின் மாந்தரே - கலங்காதே வாருமேன்
இயேசுவை அண்டினால் கிலேசங்கள் மாறிப்போம்
— மகிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108

பல்லவி

கல்வாரியே கல்வாரியே
கல்மனம் உருக்கிடும் கல்வாரியே

சரணங்கள்

பாவி துரோகி சண்டாளன் நானாயினும்
பாதகம் போக்கிப் பரிவுடன் இரட்சித்த ...கல்வாரி

பாவியை மீட்கவே நாயகன் ஏசு தம்
ஜீவனின் இரத்தத்தை சிந்தின உன்னத ... கல்வாரி

நாதன் எனக்காக ஆதரவற்றோராய்
பாதகர் மத்தியில் பாதகன் போல் தொங்கும் ... கல்வாரி

முள்முடி சூடியே மூன்றாணி மீதினில்
கள்ளனைப்போல் என் காதலன் தொங்கிடும் ... கல்வாரி

சர்வம் படைத்தாளும் சொர் லோக நாயகன்
கர்மத்தின் கோலமாய் நிற்பதைக் காண் பேனே ... கல்வாரி

எண்ணும் நன்மை ஏதும் என்னிலே இல்லையே
பின்னை ஏன் நேசித்தீர் என்னை என் பொன் நாதா ... கல்வாரி

இவ்வித அன்பை யான் எங்குமே காணேனே
இவ்வித இதற்கீடு ஏழையான் செய்குவேன் .... கல்வாரி

# 109

பல்லவி

குருசினில் தொங்கியே குருதியும் வடிய
கொல்கதா மலைதனிலே - நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர் பாவி
கொள்ளாய் கண் கொண்டு

சரணங்கள்

சிரசினில் முள்முடி உறுத்திட - அறைந்தே
சிலுவையில் சேர்த்ததையோ -- தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத்திரள் சூழ — குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன் போல் தொங்க - யூத
பாதகர் பரிகாசங்கள்பண்ணிப்
படுத்திய கொடுமைதனே — குரு

சந்திர சூரிய சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ! — தேவ
சுந்தர மைந்தனுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ? —குரு

ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே — அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூற்றோடுது பார் — குரு

எருசலேம் மாதே மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ? — நின்
எருசலையதிபன் இள மணவாளன்
எடுத்த கோலமிதே — குரு

# 110

சரணம்

துதித்துப் பாடிட பாத்திரனே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

பல்லவி

ஆ அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

சரணங்கள்

கடந்த நாட்களில் கண்மணி போல்
கருத்துடன் நம்மை காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போம் // ... ஆ அற்புதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியின் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே ... ஆ அற்புதமே

இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே ... ஆ அற்புதமே

வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்தில் ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைவில் நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே ... ஆ அற்புதமே

# 111

பல்லவி

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
காலா காலமெல்லாம் என்னைக் காத்தவரை
நான் உள்ளளவும் துதிப்பேன்

சரணங்கள்

பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பை சொரிந்து
என்னை மீட்டு காத்து நடத்திய
எந்தன் இயேசுவைத் துதிப்பேன் // — துதிப்பேன்

நண்பர்கள் பகைவராய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னை தேற்றி அன்பு கூர்ந்த
எந்தன் இயேசுவைத் துதிப்பேன் // — துதிப்பேன்

வாழ்விலே உம்மை நான் ஏற்றிடவே
தாழ்விலும் என்னை நீர் தாங்கிடவே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இயேசுவைத் துதிப்பேன் // — துதிப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 112

பல்லவி

தாசரே இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம் //

அனுபல்லவி

நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம் மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம் .... தாசரே

சரணங்கள்

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம் //
உரித்தாய் யேசு பாவப்பாரத்தை
நமது துன்பத்தை நமது துக்கத்தை சுமந்து தீர்த்தாரே
... தாசரே

பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம் //
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
இயேசு கனந்து திரிந்தனரே ... தாசரே

நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம் //
பொருக்க வொண்ணு கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள் படுகுழிக்குள் விழுந்தனரே ... தாசரே

இலங்கை தேச மாது சிரோமணிகள்
விந்தை யொளிக்குள் வரவழைப்போம் //
சுந்தர குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட .... தாசரே

மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம் //
ஊக்கமாக ஜெபித்திடுவோம் நாமுயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம் ... தாசரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 113

பல்லவி

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே

அனுபல்லவி

உன்றனுக்கு ஊழியஞ் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும் … தந்

சரணங்கள்

ஜீவகாலம் முழுதும்
தேவபணி செய்திடும்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உன்றன் கரத்தினில் வைத்து … தந்

உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தில் நாதா வெல்லுவேன் …. தந்

உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன் … தந்

கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அட்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும் …. தந்

ஒன்றும் இல்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்று அடியேனை நிரப்பும் … தந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 114

பல்லவி

காணாத ஆட்டின் பின்னே - கர்த்தர்
கண்ணீருடன் அலைந்தார்
அன்போடு உன்னை அழைக்கின்றாரே
இன்றே திரும்பி நீ வா

சரணங்கள்

முள்ளும் புதரும் காடும் மலையும்
உள்ளம் உடைந்தேசு தேடுகின்றார்
சிற்றின்ப சேற்றினில் சிக்கினதால்
சாத்தான் வலையில் நீ சிறையாகினாய் — காணாத

சுத்த இதயம் வேண்டாம் என்றெண்ணி
கர்த்தரின் அன்பை நீ சந்தேகித்தாய்
யோனா வைப்போல நீ போனாயல்லலோ
ஏசு பரன் வாக்கு வெறுத்தாயல்லோ — காணாத

என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும்
இயேசுவின் பாதை நீ விட்டோடாதே
நீதி நிறைந்த தம் கரங்களை
நீட்டி உன்னைத் தாங்கி பயம் நீக்குவார் — காணாத

துன்மார்க்கரெல்லாம் சன்மார்க்கரோடே
தேவ கோபாக்கினையால் மாள்வாரே
கர்த்தரின் பந்தியில் நீ பங்கடைய
கண்ணீருடன் நீயோ அருள் வேண்டுவாய் — காணாத

எத்தனை நேரம் உன்னை அழைத்தார்
இத்தனை காலம் நீ தள்ளலாமோ
கர்த்தரின் சித்தம் உன் வேளையிதே
கண்டு உணர்ந்து விரைந்தே நீ வா — காணாத

# 115

சரணம்

மாறிடா எம் மாநேசரே மாறாதவர் அன்பென்றுமே
கல்வாரிச் சிலுவை மீதிலே -காணுதே இம் மா அன்பிதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

ஆ இயேசுவின் மகா அன்பிதே
அதின் ஆழம் அறியலாகுமே
இதற்கிணை ஏதும் வேறில்லையே
இணையேதும் வேறில்லையே

சரணங்கள்

பாவியாக இருக்கையிலே அன்பாய்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே - ஆ இயேசு

உள்ளத்தால் அவரைத் தள்ளினும்
தன் உள்ளம் போல நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே - ஆ இயேசு

பயமதை நீக்கிடுமே
யாவும் பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே - ஆ இயேசு

நியாயவிதி தினமதிலே
நீயும் நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்புவல்லதே - ஆ இயேசு

# 116

பல்லவி

சந்தோஷம் பொங்குதே //
சந்தோஷம் என்னில் பொங்குதே
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி தப்பி நான் திரிந்தேன் — பாவ
பழியதைச் சுமந்தலைந்தேன் //
அவர் அன்புக் குரலே அழைத்தது என்னையே //
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே // ... சந்

சத்துரு சோதித்திட —தேவ
உத்தரவுடன் வருவான் //
ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார் //
இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே // ... சந்

பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்//
நானோ பரலோகத்தில் நாளும் பாடல் பாடிடுவேன் //
என்னில் வாழும் இயேசுவோடு என்றும் வாழுவேன் // ... சந்

அல்லல்கள் நேரிட்டாலும் - துன்ப
தொல்லைகள் வருத்தினாலும் //
அவர் வழி விலகேன் ஜீவ பாதை செல்லுவேன் //
அந்த அன்பர் இயேசு எந்தன் சொந்தமானாரே // ... சந்

மண் வாழ்வை நான் வெறுத்தே - என்றும்
விண் வாழ்வை நாடிடுவேன் //
தேவனிடம் செல்லவே மோட்ச வழி இயேசுவே //
அந்த நேசர் இயேசுவுடன் என்றும் வாழலாம் // ... சந்

# 117

சரணம்

துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும்
இன்பம் இழந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்
எண்ணிப் பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

பல்லவி

எண்ணிப் பார் நீ பெற்ற பாக்கியங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைசுமை நீ சுமக்கும் போது
சிலுவை உனக்குப் பளுவாகும் போது
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும் ... எண்ணி

நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும் போது
நினை கிறிஸ்துவின் ஐசுவரியம் உண்டுனக்கு
பணம் கொள்ளாப் பேராசீர்வாதத்தைப் பார்
பரலோக பொக்கிஷம் விடும் பார் ... எண்ணி

அகோரத்துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
அதைரியப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில் ... எண்ணி

# 118

பல்லவி

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
கை கொட்டிப் பாடிடுவோம்

அனுபல்லவி

இயேசு ராஜன் உயிர்த்தெழுந்தார் – அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம் ஆ ஆ // கீதம்

சரணம்

பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் — அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதி முன் ...ஆ ஆ — கீதம்

வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுங்கள் - தாம்
கூறின மாமறை விட்டவர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு ...ஆ ஆ — கீதம்

அன்னா காய்பா ஆரியர் சங்கம்
அதிரிடி கொள்ளுகின்றார் - இன்னா
பூத கணங்கள் இடி ஒளி கண்டு
பயந்து நடுங்குகின்றார் ...ஆ ஆ - கீதம்

வாசல் நிலைகளை உயர்த்தி நடவுங்கள்
வருகிறார் ஜெயவீரர் - உங்கள்
மேள வாத்தியம் கைமணி பூரிகை
எடுத்து முழங்கிடுங்கள் ...ஆ ஆ — கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 119

சரணம்

மகிழ்வோம் மகிவோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினர்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரரவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானர் //

பல்லவி

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரரவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானர் //

சரணங்கள்

சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்துவிட்டார்
தூரம் போயினும் மீட்டுக் கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார் // ஆ ஆனந்

எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கெள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும்வரை காத்துக் கொள்வேன் // ஆ ஆனந்

அவர் வரும் நாளில் என்னைக் கரமசைத்து
அன்பாய் கூப்பிட்டுச் சேர்த்து கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன் // ஆ ஆனந்

தந்தை தாயுடனே இந்த லோகமதில்
எந்தன் சொந்தமானோர் எவரும் என்னைத்
தள்ளிடினும் நேசர் தள்ளுவாரோ
எந்தன்உள்ளத்தில் தங்குவாரே // ஆ ஆனந்

# 120

சரணம்

பாவத்தின் பலன் நரகம் ஓ பாவி நடுங்கிடாயோ
கண் காண்பதெல்லாம் அழியும் காணாததல்லோ நித்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

இயேசுராஜா வருவார்
இன்னும் கொஞ்சம் காலம் தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம் - இயேசு

சரணங்கள்

உலக இன்பம் நம்பாதே அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசும் கூட வராதே - இயேசு

உன் காலமெல்லாம் போகுதே உலக மாய்கையிலே
ஓ தேவகோபம் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ - இயேசு

தேவன்பின் வெள்ளம் ஓடுதே கல்வாரி மலைதனிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய்வதாலே - இயேசு

மா பாவியான என்னையும் என் நேசர் ஏற்றுக்கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய் - இயேசு

# 121

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே!
அவர் பாவ நாசகர்
சமாதான காரணர்
மண்ணோர் யாவரும் எழுந்து
விண்ணோர் போல் கெம்பீரித்து
பெத்லேகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

வானோர் போற்றும் கிறிஸ்துவே
லோகம் ஆளும் நாதரே
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்
வாழ்க நர தேவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் அவதாரமே
நீர் இம்மானுவேல் அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

வாழ்க சாந்த பிரபுவே!
வாழ்க நீதி சூரியனே
மீட்பராக வந்தவர்
ஒளி ஜீவன் தந்தவர்
மகிமையை வெறுத்து
ஏழைக் கோலம் எடுத்து
சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

# 122

### பல்லவி

ராஜாதி ராஜன் இயேசு - இயேசு மகாராஜன் அவர்
ராஜ்யம் புவியெங்கும் மகா மாட்சியாய் விளங்க
அவர் திரு நாமமே விளங்க அவர் திரு நாமமே விளங்க
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயாவே
அல்பா ஓமேகா அவர்க்கே அல்லேலூயாவே

### சரணங்கள்

உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்
மன்னன் இயேசு நாதருக்கே வான்முடி சூட்டுங்கள்

நாளா தேசத்திலுள்ளோரே நடந்து வாருங்கள்
மேலோன் இயேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்

நல்மனதோடு சொல்கிறேன் நாட்டார்களே நீங்கள்
புன்னகையோடு நிற்பானேன் பூ முடி சூட்டுங்கள்

இந்தியா தேசத்தார்களே ஏகமாய்க் கூடுங்கள்
சிந்தனையை வைத்துக் கொண்டு செம்முடி சூட்டுங்கள்

சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்
பொன்னகராம் சாலேமுக்குப் போய் முடி சூட்டுங்கள்

குற்றமில்லா பாலகரே கூடி குலாவுங்கள்
வெற்றி வேந்தன் இயேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு வென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்
இராஜாதி இராஜன் தலைக்கு நல்முடி சூட்டுங்கள்

சகல கூட்டத்தார்களே சாஷ்டாங்கம் செய்யுங்கள்
மகத்வ ராஜரிவரே மாமுடி சூட்டுங்கள்

# 123

ராஜாதி ராஜமணி தேவ ராஜ்ஜியத்தின் ஜீவமணி
சீராயுலகில் வந்த ஜீவ கோடிகள் நேசமணி

ராஜபூபதி நேசர்க்கோர் நிதி தாசர்க்கோர் கதியான மேசியா
மனுவானுரே உருவானுரே மானிலத்தே சிறு பாலகனுய் //
ராஜாதி

மங்களம் சுபமங்களம் ஜெயமங்களம் ஜெக மனுவேலர்க்கே
இங்கிதமாயே சுந்தரமாயே இங்கு வந்தார் மரிபாலகனே //
ராஜாதி

சந்தோஷம் நரர் சந்தோஷம் சுரர் சந்தோஷம் பரனுன
மேசியா
விந்தையதாக வேந்தர் கோனுக வேண்டிவந்தார்
மரிபாலகனுய் //
ராஜாதி

பாவமே போக்க சாபமே தீர ஏக தேவ நேசயா
மனுவுருவானுர் மரிசுதனுனுர் மானிலத்தே சிறு பாலகனுய் //
ராஜாதி

# 124

பல்லவி

பெத்தலகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி
கர்த்தன் இயேசு பாலனுக்குத் துத்தியங்கள் பாடி
பக்தியுடன் உத்தமரே கூடும்

சரணங்கள்

எல்லையில்லா ஞானபரன் வெல்லை மலையோரம்
புல்லணையிலே பிறந்தார் இல்லையெங்கும் வீரம்
தொல்லைமிகு அவ்விருட்டு நேரம் — பெத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்புவியின் இராசனுக்கு மாட்டகந்தான் வீடோ
வானவற்கு வாய்ந்த மெத்தை வாடின புற்பூண்டோ
ஆடை பழங் கந்தையல்லோ தானே — பெத்

அந்தரத்தில் பாடுகிறார் தூதர் சேனை கூடி
மந்தை ஆயரோடுகிறார் பாடல் கேட்கத் தேடி
இன் இரவில் என்ன இந்தக் காட்சி — பெத்

ஆட்டிடையரஞ்சுகிறார் அவர் மகிமை காண
பரம தூதர் காபிரியேல் சொன்ன செய்தி கேட்க
நாட்டமுடன் இரட்சகரைக் காண — பெத்

# 125

**பல்லவி**

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித்துதி மனமே இன்னும்

**சரணங்கள்**

சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் - இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலை சாய்க்கலானார் — பெத்

சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார் - இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் — பெத்

முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே — பெத்

ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் - இங்கு
ஆட்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார் — பெத்

இந்தளவாய் அன்பு வைத்த எம்பெருமானை - நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே — பெத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 126

**பல்லவி**

பரன் மகன் பாரினிலே பாலகனாய் உதித்தார்
வாரும் நன்னாளிதிலே பாடிப்பணிந்து
அஞ்சலி செய்திடுவோம்

**சரணங்கள்**

பாவத்தில் மாளும் பாவியைக் காக்க
பாரினிலே தெய்வம் மனுவானாரே
விண்ணவர் வானில் பாடுகின்றாரே
அண்ணலைத் துதித்து வாழ்த்துகின்றாரே

ஆயரும் தேடிப்பணிந்து கொண்டாரே
ஞானியரும் இன்பம் கொண்டாடுறாரே
மூவுலகாளும் மாதவன் அன்பை
பூவுலகோரே நீர் பாடுவோம் வாரும்

சந்தேகம் வேண்டாம் வந்து நீர் பாரும்
சொந்தம் போலெம்மைத் தேடி வந்தாரே
மந்தைக் குடிலும் கந்தை உடையும்
விந்தை இதனை நீ சிந்தித்துப் பாரும்

கல்வி அறிவும் செல்வச் சிறப்பும்
பொல்லாப் பாவப் பேயை வெல்லுமோ சொல்லும்
புல்லணை மீது பாலகனாய் வந்த
நல்ல நாதர் இயேசு செய்தாரே பாடும்

# 127

**சரணங்கள்**

பரிசுத்த கூட்டம் இயேசுவைப் போற்றி
பாடி மகிழ்ந்தாடி யங்கே கூடிட
பரமானந்த கீதம் அங்கெழும்ப
நீ அங்கிருப்பாயோ ( /// ) சொல் என் மனமே

**பல்லவி**

நான் அங்கிருப்பேனே ( /// ) என் யேசுவோடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டினெரெவரும் அவரைச் சேர
அன்பர் என்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீ அங்கிருப்பாயோ ( /// ) சொல் என் மனமே - நான்

பேதுரு பவுலும் யோவானும் அங்கே
பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
இரத்த சாட்சிகளும் திரளாய்க்கூட
நீ அங்கிருப்பாயோ ( /// ) சொல் என் என் மனமே - நான்

ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
திரு முடி யணித்திலங்கிடவும்
தேவ சேயர்களா யெல்லாரும் மாற
நீ அங்கிருப்பாயோ ( /// ) சொல் என் மனமே - நான்

சோதனைகளை வென்றவரெவரும்
துன்பம் தொல்லைகளைச் சகித்தவரும்
ஜோதி ரூபமாய் சோர்கலோகில் ஜொலிக்க
நீ அங்கிருப்பாயோ ( /// ) சொல் என் மனமே - நான்

கன்னிகையைப் போல் கர்த்தன் சபையன்று
மன்னர் மணாளனேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நிலை ருசிக்க
நீ அங்கிருப்பாயோ ( /// ) சொல் என் மனமே - நான்

# 128

என் ஆத்தும நேசர் இயேசுவை
நான் அண்டிக் கொள்வேனே (4)

நிலையில்லா என்னைக் கண்டிட்டார்
நித்திய வழிக்குள் நடத்திட்டார்
விலையில்லா இரத்தம் சிந்தினார்
விந்தையாய் என்னை சந்தித்தார்

பரகதி வாழ்வைத் தந்தவர்
பரமன் இயேசு கர்த்தரே
நித்திய வழிக்குள் நடத்தினவர்
நிதம் அவர் துதி நான் பாடிடுவேன்
அல்லேலூயா (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தைக் கழுவி பரிகரித்தார்
சாபத்தை நீக்கிச் சங்கரித்தார்
லாபம் இன்றென் ஜீவனே
தாபம் எனக்கினி அவர்தானே — பரகதி

என்னையே மீட்க என் இயேசு
தன்னையே தியாகம் செய்தாரே
அன்னையாய் அப்பனாய் ஆனவர்
உன்னையும் அன்பாய் அழைக்கிறார் — பரகதி

## 129

பரிசுத்த கூட்டம் நடுவில்
ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே அவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ //

சுத்த விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் போக்குமே
பாவி நீச பாவி நான் ஐயா
தேவா இரக்கம் செய்ய மாட்டீரோ ...பரிசுத்த

பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா என் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகிறேன்
பரிசுத்தம் கெஞ்சுகிறேன் ...பரிசுத்த

துணைவேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லைஅன்கிலும் பரிசுத்தம்
என்னை அணுகும் .. பரிசுத்த

## 130

பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்
பரலோகம் நோக்கியே பறந்திடுவேன் //

சரணங்கள்

போராட்டமான மனிதனின் வாழ்க்கை
அடிமைப் படுத்தும் சாத்தானின் சேர்க்கை //
இது வேண்டாம் எனக்கு எனச் சொல்லியே நான்
அமைதியை நாடி ஓடிடுவேன் // — பறந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாதினாலே தேய்ந்த உடலால்
வேதனையாலே பாய்ந்த மனதாம் //
இது வேண்டாம் எனக்கு எனச் சொல்லியேநான்
சுத்த சரீரம் சுதந்தரிப்பேன் -பறந்

நேசித்தவர்கள் கைவிட்ட போதும்
இயேசுவின் பாசம் கைவிடாதென்றும் //
இது போதும் எனக்கு எனப்பகர்ந்தே நான்
பரிசுத்த பாதையில் பறந்திடுவேன் // - பறந்

# 131

**பல்லவி**

பரம எருசலேமே பரலோகம் விட்டிறங்குதே
அலங்கார மணவாட்டியாய் அழகாக ஜொலித்திடுதே //

**சரணங்கள்**

எருசலேமே கோழி தன் குஞ்சுகளை
ஏற்றணைக்கும் ஏக்கத்தின் குரல் கேட்டேன்
தாய் பறவை துடித்திடும் பாசம் கண்டேன்
தாபரமாய் சிறகினில் தஞ்சமானேன்
கனிவான எருசலேமே - பரம

ஜீவ தேவன் நகரினில் குடிபுகுந்தேன்
சீயோன் மலை சிகருக்கு சொந்தமானேன்
நீதி தேவன் நின்னடி சிரம் புகுந்தேன்
நீதிமான்கள் ஆவிபோல் மருள நின்றேன்
மேலான எருசலேமே - பரம

சர்வ சங்க சபையினில் அங்கமானேன்
சர்வலோக நடுவரின் அருளில் வந்தேன்
பரிந்துரைக்கும் இரத்தத்தில் மூழ்கி நின்றேன்
பரிவாரமாய் தூதர்கள் சூழ நின்றேன்
ஆஹா என் எருசலேமே - பரம

விடுதலையே விடுதலை விடுதலையே
லோகமதில் மோகத்தால் விடுதலையே
நானே யென்னும் சுயவாழ்வின் விடுதலையே
நாதர் என்னில் வாழ்வதால் விடுதலையே
சுயாதீன எருசலேமே - பரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் யாவும் கனிவோடு துடைத்திடுவார்
எண்ணமதின் ஏக்கங்கள் தீர்த்திடுவார்
மரணமில்லை மனநோயின் துயரமில்லை
அலறவில்லை அழுகையின் சோகமில்லை
தலை நகராம் எருசலேமே — பரம

# 132

சரணங்கள்

உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதான மாமே
காரிருள் நீங்கிட குவலய மீதிலே
பேரொளியாய் ஜெனித்தார்

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே

மானிடர் மேலிவர்க் கன்பிதுவோ
மனுக் கோலமாய் மனுவேலனுர்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாவொளியாய் ஜெநித்தார் — அல்லேலூயா

தாரகை யென அவர் தோன்றிடவே
நேர் பாதையில் நடந்திடவே
தற்பரன் கிருபையும் சத்தியமும் ஈந்திட
கண்ணொளியாய் ஜெநித்தார் - அல்லேலூயா

வாழ்த்துவோம் பாலகன் இயேசு பரன்
வல்ல தேவனின் ஏக சுதன்
வாஞ்சித்தாரே எம்மில் வளம் செய்திடவே
வானொளியாய் ஜெநித்தார் - அல்லேலூயா

தாவீதின் வேரிவராய் அவரின்
ஜெய ராஜ்யம் தான் நிலைக்க
தாசனின் ரூபமாய் தாரணி மீதிலே
தான் உதித்தார் ஒளியாய் - அல்லேலூயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 133

பாவத்தின் பாரத்தினால் தவித்திடும் பாவி என்னை
நின் கிருபைப் பிரவாகத்தால் ஏற்றிடும் இயேசு நாதா

கெட்ட குமாரனைப் போல் துஷ்டன் நான் அலைந்தேனப்பா
நின் அன்பை உணராமல் துரோகம் நான் செய்தேனே

தந்தையை விட்டபின்பு தவிடுதான் ஆகாரமோ
மனங் கசிந்து நொந்தேன் கண்ணீரைத் துடைத்திடுமே

கள்ளனாயினும் நான் நீ பெற்ற பிள்ளையல்லோ
கள்ளனுக்கருள் செய்த நீ தள்ளாதே சிலுவை நாதா

தாய் தந்தை தமரெல்லாம் என்னைக் கைவிடுவார்கள்
சாகும் நாளெனைத் தாங்குவார் நீரல்லால் யாருமில்லை

# 134

**பல்லவி**

வாழ் நாள் முழுவதும் உம்மைப் போற்றுகிறேன்
எந்தன் ஆருயிர் ஆண்டவரே
நன்றியால் உம்மை நான் என்றும் வாழ்த்துகிறேன்
பலியால் என்னை மீட்டவரே!

**சரணங்கள்**

பாரிய சிலுவையிலே கொடும்பாவியாய் மாண்டவரே
சிந்திய இரத்த மெல்லாம் என்மேனியில் ஓடுதையா
என்னை முற்றுமே மாற்றுதையா - வாழ்

நீர் சிந்திய கண்ணீரே நீர் கெஞ்சிய வார்த்தைகளே
என் இதயத்தில் பதிந்ததினால் புதிதாகவே மாறியதே
புதிதாகவே மாறியதே - வாழ்

எனக்காய் பலியானவரே எனக்காகவே மாண்டவரே
என்னையே நான் தருவேன் வாழ்நாளெல்லாம்
நான் வருவேன் - வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 135

பல்லவி

பாவிக்கும் புகலிடம் இயேசு ரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

அனுபல்லவி

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

சரணங்கள்

காட்டிக் கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காகவே கர்த்தன் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல்கொதா மலைக்கு இயேசுவை — பாவி

கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுங்காயமும் அடைந்தாரே — பாவி

கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ — பாவி

உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடிவா — பாவி

பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்
கர்த்தன் இயேசுவண்டை ஓடிவா — பாவி

வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பி வா — பாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 136

பல்லவி

புதிய கிருபை அளித்திடுமே
அனுதின ஜீவியத்தில்
கிருபை மேல் கிருபையை அருளிச் செய்து
கிருபையை பூரணமாக செய்யும்

சரணங்கள்

ஆத்துமாவே என் முழு உள்ளமே
ஆண்டவரை நீ ஸ்தோத்தரிப்பாய்
தினம் அதிகாலையில் புதுக் கிருபை
அளித்து நீர் வழி நடத்தும் — புதிய

கர்த்தரின் மகிமையை வெளிப்படுத்த
கிருபையின் பாத்திரமாக்கிடுமே
கிருபையினால் உள்ளம் ஸ்திரப்படவே
கிருபைகள் ஈந்திடுமே — புதிய

சோதனை வியாதி நேரங்களில்
தாங்கிட உமது கிருபை தாரும்
கிருபையினால் என்றும் பெலன் அடைந்து
கிறிஸ்துவில் வளரச் செய்யும் — புதிய

சோர்ந்திடாமல் நல் சேவை செய்ய
கிருபையின் ஆவியை ஊற்றிடுமே
நல்ல போராட்டத்தைப் போராட
கிருபைகள் அளித்திடுமே — புதிய

பக்தியோடே நம் தேவனையே
பயத்துடனே நிதம் தொழுதிடுவோம்
அசைவில்லா ராஜ்யம் அடைந்திடவே
கிருபையைக் காத்துக்கொள்வோம் — புதிய

## 137

பெலமுள்ள நகரமாம் இயேசு வண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்திற் கொரு வழியில்லையே
சந்ததம் அவர் நம்மைக் காத்துக் கொள்வார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில்லா வுலகத்தின் அலைகளாலே
அலைந்திடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் ஷேமமாக
யாத்திரை செய்பவர்க்கு - லோகம் வேண்டாம்

கழுகுபோல் பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற ஜீவியம் வாஞ்சித்துக் கொள்
காத்திருந்திடுகில் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பெலன் - மக்களுக்கு

மரணம் தான் வருகிலும் பயப்படாதே
விரைந்துன்னை கர்த்தர் தான் காத்திடுவார்
யாதொன்று முன்னைப் பயப்படுத்த
எங்குமில்லை யென்று - விசுவாசிப்பாய்

ஆறுதலடையு மந்நாடு சென்று
யேசுவின் மார்பில் நானுனந்திப்பேன்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் - பானஞ் செய்வேன்

# 138

வானம் பூமி யாவற்றிலும் - ஏசு மேலானவர்
மனிதர், தூதர் பேய்தானும் - அவர் முன் விழுவார்

பல்லவி

நான் நம்புவேன் நான் நம்புவேன்
ஏசு எனக்காய் மரித்தார்
பாவம் நீங்க சிலுவையில் உதிரம் சிந்தினர்

இரட்சகர் உயிர் விட்டதும் - எந்தனுக்காகவே
வேறெந்த வாக்கு வாதமும் - வேண்டியதில்லையே - நான்

பாவியின் பயம் யாவையும் - நீக்கும் நாமம் இது
நரகத் தண்டனையையும் - தொலைத்திடும் இது - நான்

பாவச் சங்கிலி யாவையும் - தறிப்பார் என்னேசு
வேதாளத்தின் தலையையும் - நசுக்குவாரேசு - நான்

பாவத்தில் மாளும் யாவர்க்கும் - உயிரளிப்பாரே
பெலனற்ற ஆத்துமாவுக்கு - சக்தி கொடுப்பாரே - நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

லோகம் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்
போதும் இயேசு எனக்கு
சாத்தானே உன் சிநேகம் வேண்டாம்
கொண்டு போ உன் சரக்கு

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா இயேசுவே
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஆமென்

இயேசு போதும் இயேசு போதும்
இயேசு போதும் எனக்கு
இயேசு போதும் இயேசு போதும்
இயேசு போதும் ஆமென் — அல்லேலூயா

இயேசுவே என் ஆஸ்தி செல்வம்
இயேசுவே என் பொக்கிஷம்
இயேசுவே என் சம்பாத்தியமும்
இயேசுவே என் முடிவும் — அல்லேலூயா

இயேசுவே என் பரிகாரி
இயேசுவே என் பெலனும்
இயேசுவே என் தீர்க்காயுளும்
இயேசுவே என் நித்யமும் — அல்லேலூயா

இயேசுவே என் பரிசுத்தம்
இயேசுவே என் நீதியும்
இயேசுவே என் தேவஞானம்
இயேசுவே என் மீட்புமே — அல்லேலூயா

இயேசுவே என் ஆத்ம நேசர்
இயேசுவே என் இரட்சகர்
இயேசுவே என் ஆத்ம ஜீவன்
இயேசுவே என் ஜெயமும் — அல்லேலூயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 140

பல்லவி

வானில் எக்காளம் முழங்கிடவே
வாஞ்சையோடு பறந்திடுவோம்
இப்புவித் துன்பங்கள் மறைந்திடுதே
இயேசுவின் ராஜ்ஜியம் நெருங்கிடுதே

அனுபல்லவி

ஆ ஆமென் அல்லேலூயா
ஆமென் வாரும் இயேசுவே//

கன்மலை வெடிப்பினில் உத்தமியாய்
கறைகள் திரைகள் அகற்றிடுவோம்
கற்புள்ள கன்னியாம் விழிப்புடனே
அவர் வரும் வேளைக்காய் காத்திருப்போம் - ஆ!

மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த
மகிபன் உரைத்த வாக்கின்படி
மாசற்ற மணவாட்டி சபையதனை
மகிமையால் சேர்க்கவே வந்திவோர் - ஆ!

பாரினில் பலியாய் ஜீவன் வைத்தோர்
பாடுகள் பாதையில் ஏற்றநிஜல்
தியாகத்தின் மேன்மையைக் காத்துக் கொண்டோர்
அவர் போல் மாறியே பறந்திடுவார் - ஆ!

மகிமையின் நாளும் நெருங்கிடுதே
மணவாளன் சத்தமும் கேட்டிடுதே
மகிழ்ச்சியின் நிறைவை அனுபவிக்க
ஆயத்தம் தீவிரம் அடைந்திடுவோம் - ஆ!

## 141

பல்லவி

பரம ராஜன் தங்கும் மகிமை - பரலோக தூதர்
பாத சேவை செய்யும் மாளிகை

அனுபல்லவி

பாரினிலே பார்க்கொணாத பண்புடன்னிலங்கிடுதே
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்றேலியே - பரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

சாவு பசி தூக்கமேயில்லை - அம்மாளிகையில்
வாழுவோரின் வஞ்சனையில்லை
நாதரேசின் சேவை செய்தோர் நானிலத்தில்
இன்பம் அன்றோ ஆனந்தமாய் ஆர்ப்பரிப்போர்
அன்பர் முகங் கண்டிடுவார் - பரம

பக்தர் பரன் சாயலணிந்து - மகிழ்ந்து பாடி
நற் சுதனின் பின்னே நடந்து
பொன் மயமாய் விளங்கிடும் பொற்தளமாம் வீதிகளில்
போற்றி ஏற்றி ஆர்ப்பரிப்போம்
பொன்னின் முடி நாம் தரித்து - பரம

சுற்றி வரச் சிங்காசனங்கள் - சுதந்தரரின்
சாற்ற வொண்ணாக் சொர்க்க இன்பங்கள்
ஜோதி லோகம் சேர்ந்திடலாம் ஜோதி மய மாகிடலாம்
ஜெய கீதம் பாடிடலாம்
ஜெயம் பெற்றோர் ஏகிடலாம் - பரம

ஜீவநதி ஓடும் நாடது - இரவு பகல்
இரண்டு மொன்றாய் தோன்றிடு மங்கு
இருளில்லா இன்ப நாடு அருளொளி வீசு மங்கு
இன்பலோகம் இன்பலோகம் இன்னலில்லா இன்பமது - பரம

# 142

பல்லவி

பலன் கொடுப்பீர், நல்ல பலன் கொடுப்பீர்
பண்பட்ட நிலம்போல் பலன் கொடுப்பீர்

அனுபல்லவி

வழி யோரமா? நான் கற்பாறையா?
முற்புதரா? நான் நல்ல நிலமா?

இறைவனின் வார்த்தை விதையாகும்
அறியா உள்ளம் வழியோரம்
பறவைகள் விரைந்தே தின்பது போல்
பகைவனும் தீயோன் பறித்திடுவான் பலன்

மண்ணில்லா பாறை நிலமாகும்
மனதில் நிலையற்ற மனிதர்களே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரற்ற வாழ்க்கை வாழ்வதனுல்
வெயிலில் வார்த்தை கருகிவிடும் — பலன்

முட்செடிப் புதராம் மறுவுள்ளம்
முளைத்திடும் ஆசைகள் தெறித்திடவே
இறைவனின் வார்த்தை வளரவில்லை
இறுக்கியே ஆசைகள் கொன்றதினுல் — பலன்

இறைவனின் வார்த்தை உணர்ந்திடுவோர்
குறையிலா பண்பட்ட நிலமாகும்
அறுபது முப்பது நூறு என்றே
அறுவடை எடுப்பார் தம் வாழ்வில் — பலன்

# 143

பல்லவி

தேவ சபையிலே தேவன் எழுந்தருளினுர்
பரிசுத்தரின் மத்தியிலே பரன் இயேசு உலாவுகின்ருர்

சரணங்கள்

பயத்தோடே நல் பக்தியோடே
தேவனை ஆராதிப்போம்
வீணைகள் கைகளில் ஏந்தியே துதிப்போம் — தேவ

ஆபத்து நாளில் அரணும் கோட்டை
நித்திய கன் மலையே
யாக்கோபின் தேவன் நம் அடைக்கலமே — தேவ

இராப்பகலாய் தன் கண்மணி போல்
தூங்காது காப்பவரே
தாயினும் மேலாக தாங்கி ஆதரிப்பார் — தேவ

உலகின் முடிவு வரைக்கும்
உன்னேடிருப்பேன் என்ருரே
அல்பா ஒமேகா என்னும் நாமந்தரித்தவர் — தேவ

சாத்தானின் கோட்டை தகர்ந்தொழிய
ஏகமாய் துதித்திடுவோம்
சாத்தானை ஜெயித்த நம் இயேசு நமக்குண்டே — தேவ

ஓசன்ன! பாடி ஆர்ப்பரிப்போம்
உன்னத தேவனையே
ஜே! ஜெயராஜனுக்கு ஜெயம் முழங்கிடுவோம் — தேவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 144

போற்றும்! போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்
வானோர் கூடி பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாமசங்கீர்த்தனஞ் செய்ய
மாந்தர் யாரும் வாரும்! ஆனந்தமாய்
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
யேசுநாதர் நம்மையும் தாங்குவார்
போற்றும்! போற்றும்! தேவகுமாரனைப் போற்றும்
பாது காத்து நித்தமும் போஷிப்பார்

போற்றும்! போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்
பாவம் போக்க பாரினில் ஜென்மித்தார்
பாடுபட்டு ப்ராணத்தியாகமுமாகி
வான லோக வாசலைத் திறந்தார்
மா கர்த்தாவே! ஸ்தோத்திரம் என்றும்! என்றும்!
வாழ்க! வாழ்க! ஜெகத்து ரட்சகா!
அருள்நாதா! மாசணுகா பரஞ்சோதி!
வல்லதேவா! கருணை நாயகா!

போற்றும்! போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்
போற்றும்! போற்றும்! மீட்பர் மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்
ஏக ராஜா! மாட்சிமையோடு வந்து
யேசுஸ்வாமி பூமியில் ஆளுமேன்!
லோக மெங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாக பாலனம் பண்ணுமேன்!

## 145

பல்லவி

பரலோக நாடெந்தன் இன்ப நாடாமெனக்கு
என்றும் நான் கண்டு களிப்பேனே!

அனுபல்லவி

ஆ மகிமையோ, ஆ பேரின்பமே
என்று நான் கண்டானந்திப்பேனே! — பரலோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்திடுவார் தூதர்கள் - தானங்கு
சேவிப்பேன் நித்தியம் நேசரை!
ஆ என் இன்பமே ஆனந்த பாக்கியமே
நாவினு லியம்பவு மேலாதே! — பரலோக

சொர்க்கத்தில் ஆ எந்தன் நம்பிக்கை - அழியாத
சொர்ணமயமான வேலைகள்
சோபன கீதமே சுந்தர நாடதே!
சுத்த ரொருமித்து வாழ்வாரே! — பரலோக

தெய்வ சித்தம் செய்யும் பிள்ளைகள் - ஜீவிப்பார்
மாதா பிதா மற்றும் சோதரர்
உத்தம ஜீவிகள் சொர்க்கத்தின் வாசிகள்
கஷ்டம் சகித்திட்ட சுத்தர்கள் — பரலோக

யேசுவே என் சம்பத்தல்லவோ - நிச்சயம்
என்று மழியா சுந்தரம்;
ஈலோக இன்பத்தை குப்பையென்றெண்ணினேன்
யேசுவே எந்தனின் இன்பமே! — பரலோக

வெறுத்திடுவேன் எந்தன் ஜீவனை - லோகத்தில்
செல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்
மாயை மாயையே லோகத்தின் இன்பமே!
வாடா முடிசூட ஏகுவேன் — பரலோக

# 146

பல்லவி

பேரின்ப நதியே தாகத்தை தீர்த்திட
பின் மாரியாகப் பொழிந்திடுமே

சரணங்கள்

எலியாவின் தேவன் எங்கே என்றுனே
சலியாமல் ஓடி சால்வைப் பெற்றுனே
பரலோக ராஜ்யம் பரிசுத்தவான்கள்
பல வந்த மாக்கும் காலம் இதுவே

மங்கும் திரிகள் தெரிந்த நாணல்
தேங்கும் தண்ணீர்கள் போன்ற அநேகர்
அனலுமில்லாத குளிருமில்லாத
அனுபவத்தோடே ஜீவிக்கின்றுரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுலைப் பவுலாய் மாற்றிடும் தேவா
சடுதி ஒளியால் சந்திக்கும் மூவா
உலகும் எலும்பும் உயிரை அடையும்
உயிர்கள் மீட்சி தாரும் என் இயேசு நாதா

பரிசுத்த ஆவி பெற்றிட வாரீர்
பரிசுத்த தேவ அழைப்பைப் பாரீர்
தேடுங்கள் கிடைக்கும் கேளுங்கள் தருவேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றுரைத்தாரே

ஊனர் குருடர் தீரா நோயாளர்
ஊமை செவிடர் பேயால் வாடுவோர்
அற்புத செயலால் ஆரோக்கியமடைய
ஆண்டவரிடமே வேண்டிடுவோமே

சத்திய பரனை பக்தியுடனே
நித்திய யுகமாம் பாடிடுவேனே
ஏதேனின் ஜீவ ஊற்றுகளருகே
ஏழை என் தாகம் தீர்த்திடுவேனே

# 147

**பல்லவி**

யேகோவா நிசி யேகோவா நிசி யேகோவா நிசி
ஏற்றிப் பாடுவோம்
எங்கள் கொடி வெற்றிக் கொடியே — 2
யேகோவா நிசி *(4)*

**சரணங்கள்**

கர்த்தர் துணை நின்று யுத்தம் செய்வாரே
கலங்கி நிற்க காரணங்கள் இல்லையே
கைகளை தளர்த்திடமால் தாங்கியே
கர்த்தர் இயேசு சத்திய ஆவி நிற்கிறார்
கர்த்தர் வல்ல யுத்த வீரரே (2) — யேகோவா

நமக்கிருக்கும் இந்த பெலன் போதுமே
நாதன் இயேசு அனுப்புவதால் போவோமே
பட்டயமோ புயபலமோ தேவையா
பரம தேவ ஆவி நம்மில் இல்லையா
ஜீவ தேவ சேனையல்லவா (2) — யேகோவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியில் நிறைந்து ஜெபம் செய்வோமே
ஆயுதங்கள் அணிந்து களம் செல்வோமே
ஆர்பரித் தலங்கமதை வீழ்த்தியே
ஆவிகளின் சேனைகளை வெல்வோமா
கொடிகளேந்தும் படைகளல்லவோ — யேகோவா

அல்லேலூயா தேவ நாமம் வாழ்கவே
அல்லேலூயா இயேசு ராஜா வருகவே
அல்லேலூயா ஆவி புகழ் ஓங்கவே
அல்லேலூயா தேவ படை வெல்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே — யேகோவா

# 148

பல்லவி

தேவ கிருபை என்று முள்ளதே
அவர் கிருபை என்று முள்ளதே
அவரைப் போற்றித் துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

சரணங்கள்

நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்று முள்ளதே — தேவ

சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனும் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்று முள்ளதே — தேவ

அக்கினி போதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாது காத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்று முள்ளதே — தேவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாம்
என்னை நடத்திஞர் அவர் நல்லவர்
அவர் கிருபை என்று முள்ளதே — தேவ

வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்று முள்ளதே — தேவ

# 149

பல்லவி

வரவேணும் பரஞவியே! இறங்கும் தணலாய்த் தாவியே

அநுபல்லவி

மருளாம் பாவம் மருவிய என்னை
வானக்கினியால் ஞானஸ் நானம் செய்ய .... வர

சரணங்கள்

பலமான எப்பாவமும், பாழாக்கும் மா நோய்களும்
வலிய கொடும் ரோகமும், மாம்ச சிந்தையோடுமே
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்
எலியாவின் ஜெபத்துக்கு இறங்கிய வண்ணமே ... வர

எந்தன் பாவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா
தின்றே வானக்கினி வரவேணுமே ... வர

குடி கொள் எந்தப்பாவமும் அடியோடு தொலைத்திடும்
தடுத்தாட் கொள்ளும் தோஷமும் சாம்பலாகச் செய்திடும்
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல் போல்
அடியேன் யேசுவுக்காய் ஓடி எங்கும் தொண்டு செய்ய ... வர

புறம்பான எப்பாவமும் மறைவான எப்பாவமும்
சிறிதான எப்பாவமும் பெரிதான எப்பாவமும்
அறவே முற்றிலும் வரவேணும் ஆவியே
அக்கினி மயமாய் அமர்ந்திடும் என்மேல் ... வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150

பல்லவி

வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்த்துவோம் இயேசுவை
போற்றுவோம் போற்றுவோம்
போற்றுவோம் கர்த்தரை
நன்றியோடு என்றும் நன்றியோடு என்றும்

சரணங்கள்

ஆதியந்தமில்லா தேவ சுதன் - இந்த
அவனியோரின் உருவெடுத்து வந்தார்
அவர் நாமம் புகழ்ந்து ஏகமாக ... வாழ்த்து

தரணியோர் இரட்சிப்பு அடைந்திடவே - என
சிலுவையில் இரத்தம் சிந்தினரே
அவர் அன்பை மனதார சிந்தித்துமே ... வாழ்த்து

அளவில்லா மகிழ்ச்சி ஈந்தவரை - மிக
அன்பினால் நம்மை அழைத்தவரை
காலையும் மாலையும் எப்பொழுதும் ... வாழ்த்து

கிருபையினாலே நிறைந்தவரை - நல்ல
வரங்களினால் ஆசீர்வதிப்பவரை
கரம் குவித்தே கெம்பீரமாக ... வாழ்த்து

எண்ணிலடங்கா பாவங்களை - கடல்
ஆழத்தில் அமிழ்த்தி போட்டவரை
யாழோடு தம்புரு நடனத்தோடு ... வாழ்த்து

குருடரின் கண்களை திறப்பவரை - பர
தேசிகளை என்றும் காப்பவரை
முழுமனதாலும் என்றென்றுமாய் ... வாழ்த்து

உலகத்தின் நேசம் ஒழிந்திடவும் - அவர்
ஒப்பற்ற அன்பை ருசித்திடவும்
அவர் தந்த சகல கிருபைக்காக ... வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 151

பல்லவி

வந்தாளும் யேசுவே வாருமிதில் - தேவ
மைந்தாகள் கூடு மிந்நேரமிதில்

சரணங்கள்

பத்ருதீவில் பரிசுத்த நாளில் வந்த வண்ணமே
சத்துருக்கள் கூட்டமெல்லாம் சக்தியற்றுச் சோரவே
இத்தினத்தில் இங்கு வந்திடும் - தேவா .... வந்

நல் வழியை நாடிடாமல் ஓடும் நரர் யாவர்க்கும்
கல்வாரியின் அன்பை யின்று கர்த்தனே நீர் காட்டியே
நற்குணம் அவர்க்கு நல்கிடும் - தேவா .... வந்

சக்தியில்லை எங்களுக்குச் சாம்பலும் தூசியும்
கர்த்தனே கருணை கூர்ந்து தந்திடும் சர்வாயுதம்
புத்தியாக யுத்தம் செய்திட - தேவா ... வந்

என்னை நோக்கிக் கூப்பிடில் அளித்திடுவேன் உத்தரம்
பின்னும் நீ அறிந்திடாத வல்லமைகள் காட்டுவேன்
என்றவா இந்நேரம் வாருமேன் - தேவா ... வந்

சதா காலங்களிலும் இருப்பேனுங்கள் கூடவே
சத்துருவின் வல்லமைகள் ஒன்றும் மேற் கொள்ளாதென்றீர்
ஆதலாலனந்தம் ஸ்தோத்திரம் - தேவா .... வந்

# 152

பல்லவி

வருத்தப்பட்டு பாரஞ்சுமப்பவரே
வருவீர் இயேசுவண்டை இளைப்பாற

சரணங்கள்

தாகமுள்ளவரே வாருமென்றார்
தாகத்தோடு வரும் சமாரியாளைக் கண்டார்
தண்ணீர் கேட்டாள் இயேசு தாகம் தீர்த்தார்
பாவ மன்னிப்பைக் கொடுத்து மகிழச் செய்தார்... வருத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பாடுள்ள ஓர் ஸ்திரி இருந்தாள்
கடும் நோய் நீங்க பலரிடம் சென்றாள்
நம்பிக்கையிழந்தாள் நாதன் இயேசுவைக் கண்டாள்
நடுங்கி வஸ்திரந் தொட்டு சுகமடைந்தாள் ... வருத்தப்

நாலு நாளாயிற்றே நாறு மென்றாள்
நம்பிக்கை விடாதே பிழைப்பான் என்றார்
கவலைப்பட்டார் இயேசு கண்ணீர் விட்டார் ... வருத்தப்

நாடு நகரங்கள் சுற்றி அலைந்தார்
நானே வழி வேறில்லை எனப்பகர்ந்தார்
களைப்படைந்தார் அத்தி மரத்தைக் கண்டார்
கனியற்றிருப்பதைக் கண்டு சபித்தார் ... வருத்தப்

# 153

பல்லவி

வாசலண்டை நின்று ஆசையாய்த் தட்டும்
நேசர் இயேசுவுக்குள் உள்ளம் திறவாயோ

அனுபல்லவி

பாவியை ஒரு போதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறார் //

சரணங்கள்

ஆதரிப்பார் ஆருமில்லை யென்றெண்ணி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயோ //
காணாத ஆட்டை தேடி வந்த மேய்ப்பர் ... வாச
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார் //

அற்ப வாழ்வை நித்திய வாழ்வு என்றெண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமோ //
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய் // ... வாச

மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்யம் காணக்கூடுமோ //
பிறந்தாலே ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யாய்
பிரவேசிப்பாய் தேவ இராஜ்ஜியத்தில் // ... வாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு //
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ // ... வாச

# 154

பல்லவி

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் இயேசுன்னை அழைக்கிறாரே

சரணங்கள்

பார் திருமேனி வாரடியேற்றவர்
பாரச் சிலுவைதனைச் சுமந்து சென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்ப்
பயமின்றி வந்திடுவாயே ... ஆணி

மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உன்னை நாசமாக்கிடும்
உணர்ந்திதையுடனே உன்னதனண்டை
சரண்புகுவாய் இத்தருணம் .... ஆணி

கிருபையின் வாசல் அடைத்திடுமுன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவாய்
உருவாக்கியே புதுச் சிருஷ்டியில் வளரக்
கிருபையும் அளித்திடுவார் ... ஆணி

பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினைப்
பகிர்ந்திடுவார் உந்தன் இருதயத்தினிலே
மறுரூப நாளின் அச்சாரமதுவே
மகிமையும் அடைந்திடுவாய் ... ஆணி

இயேசு வல்லாது இரட்சிப்புத் தரவோர்
இரட்சகர் வேறு இகமதிலுண்டோ
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே உன் நாயகரே ... ஆணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 155

பல்லவி

வாரும் வாரும் மகத்துவ தேவனே
வல்லமையாக இப்போ வந்திடும்

சரணங்கள்

மகிமைச் சொரூபனே! மா வல்ல தேவனே!
மன்னு வந்தாசீர் வாதம் தாருமே — வாரும்

தாய் தந்தை நீர்தானே தற்பரா எங்கட்கு
தரணியில் வேறோர் துணை இல்லையே — வாரும்

பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும்
பரிசுத்த ராஜனே நீர் வாருமே — வாரும்

பக்தரும் முக்தரும் பாடித்துதிக்கின்ற
பரலோக ராஜனே நீர் வாருமே — வாரும்

காருண்ய தேவனே சுதியுமை யண்டினோம்
கடைசி வரையும் காத்து இரட்சியும் — வாரும்

மன்னு நின் வரவை எண்ணியாம் ஜீவிக்க
ஏவுதல் தினம் தாரும் ஏகனே — வாரும்

விழிப்புள்ள ஜீவியம் விமலா நீர் ஈந்துமே
வெற்றியடையக் கிருபை தாருமே — வாரும்

இவ்வித பாக்கியம் ஏழைகளெங்கட்கு
ஈந்ததா லுமக்கென்றும் ஸ்தோத்திரம் — வாரும்

## 156

பல்லவி

வாரா வினை வந்தாலும், சோராதே மனமே
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே

சரணங்கள்

சூரன் சதித்துன் மீது வலை வீசினாலும்
சோராதே ஏசு பரன் தஞ்சம் விடாதே .... வாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்
உறுதி விட்டயராதே நெறி தவருதே ... வாரா

பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணுரே
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே ... வாரா

தன் உயிர் ஈந்திட்ட உன் யேசுநாதர்
தள்ளுவாரோ? அன்பு கொள்ளவர் மீதே ... வாரா

மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்
மருள விழாதே நல் அருளை விடாதே ... வாரா

வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ?
வானவனை முற்றும் தான் அடைவாயே .... வாரா

# 157

சரணம்

விலையேறப் பெற்ற இரத்தமே
கொல் கொதாவில் கண்டேன்
மலையாம் என்பாவம் நீக்கிட
கொலை யுண்ட இரத்தமே

பல்லவி

இரத்த வல்ல இரத்தமே
கர்த்தன் சிந்தினுரே
சித்த மெய் நோக சிலுவையில்
தத்தம் செய்தார் தம்மை

சரணங்கள்

பெரும் பாவியான என்னையும்
அரும் புதல்வனுக்கிட
பெருவெள்ளம் போன்ற இரத்தத்தை
குருசினில் சிந்தினுர் .... இரத்தம்

மானிலத்தின் பாவம் தாங்கி
மயங்கினுர் காவில்
மேனி வியர்த்த இரத்தமே
வானில் சேர்த்த தென்னை ... இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபாசனத்தில் தைரியமாய்
பெரும் பாவியும் சேர
திரு மேனியில் திறந்திட்ட
குரு நாதன் இரத்தமே ... இரத்தம்

பரலோகத்தில் பிதாவின் முன்
பரிந்து பேசிடும்
கரந்தனில் காணும் இரத்தத்தால்
வரம்பெற்றேன் வாழ்ந்திட ... இரத்தம்

வெண்ணங்கி பூண்ட கூட்டமாய்
விண்ணில் காண்போர்கள் யார்?
மண்ணில் தம் அங்கி தோய்த்தோரே
மாசற்ற இரத்தத்தில் ... இரத்தம்

ஆட்டிக்குட்டியின் இரத்தத்தால்
மீட்டுக் கொள்ளப்பட்டேன்
பாட்டும் இதே பரலோகில்
காட்டும் தேவன்பையே ... இரத்தம்

# 158

வாருமையா போதகரே வந்தெம்மிடம் தங்கியிரும்
சேருமையா பந்தியினில், சிறியவராம் எங்களிடம்

ஒளி மங்கி இருளாச்சே உத்தமே வாருமையா
களித்திரவு காத்திருப்போம் காதலனே கருணை செய்வாய்

ஆதரையிலேன் ஆறுதலே, அன்பருக்கு சதா உறவே
பேதையர்க்குப் பேரறிவே, பாதை மெய் ஜீவ சற்குருவே

நாமிருப்போம் நடுவிலென்றீர், நாயனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய தற்பரனே நலம் தருவாய்

உந்தன்மனை திருச்சபையை வையகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமறப் பரிகரித்தே பாக்கியமளித் தாண்டருள்வாய்

பாடும் தேவதாசரின் கவி பாரினில் கேட்டனுதினமும்
தேடும் தொண்டர் துலங்கவுந்தன் திவ்ய ஆவிதந்தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 159

பல்லவி

வாலிபனே உன் வாலிப வயதில்
சிருஷ்டி கர்த்தரை நினை

அநுபல்லவி

வாலிபம் போய்விடும் வாயோதிபமாகிடும்
காலமோ குறுகியது

சரணங்கள்

பாசி படிந்த நிலத்தில் நடப்பது
வாலிபப் பருவத்தில் //
நாம் எங்கே எப்போது எப்படி விழுவோம்
என்பது தெரியாது இங்கு
யாருக்கும் புரியாது ... வாலிபனே

நாசரீகம் என்ற பாழும் உலகில்
நயந்து வாழ்பவனே //
உன்னை உலகிற்கு ஒளியாய் ஜீவிக்க இன்று
இயேசு அழைக்கிறாரே உன்னை
அன்புடன் அழைக்கிறாரே ... வாலிபனே

காணாமற் போன ஆடாய் இன்று
உலகில் வாழ்பவனே //
உன்னை கிறிஸ்து இயேசு மந்தையிற் சேர்க்க
அன்புடன் அழைக்கிறாரே நீ
இன்றே வந்திடுவாய் ... வாலிபனே

## 160

பல்லவி

விந்தைக் கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை

அநுபல்லவி

சுந்தரம் மிகும் இந்தப்பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

திரண்ட ஆஸ்தி உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக இருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமைகள் யாவும் அற்பமே ... விந்தை

உம் குருசே ஆசிக் கெல்லாம்
ஊற்றும் வற்று ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மை யடைந்து மேன்மையாகினேன் ... விந்தை

சென்னி விலா கை காலின்று
சிந்துததோ! துயரோடன்பு
மன்னு இதை போன்ற காட்சி
எந்நாளிலும் எங்கும் காணேன் ... விந்தை

இந்த விந்தை அன்புக் கீடாய்!
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும்பொருள் ஈடாகும்
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன் .... விந்தை

# 161

பல்லவி

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுமே

அனுபல்லவி

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

சரணங்கள்

தேவன் மேல் ஆத்துமமே
தாகமாயிருக்கிறது
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குமே .... தஞ்சமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்து போற்றிடுவாய் .... தஞ்சமே

யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறு மலைகளிலிருந்தும் உம்மை
நிதமும் நினைக்கிறேன் ... தஞ்சமே

தேவரீர் பகற்காலத்தில்
கிருபையை தருகின்றீர்
இரவினில் பாடும் பாட்டு எந்தன்
வாயிலிருக்கிறது ... தஞ்சமே

கன் மலையான தேவன்
நீர் என்னை ஏன் மறந்தீர்
எதிரிகளால் ஒடுங்கி அடியேன்
துக்கத்தால் திரிவதேனோ ... தஞ்சமே

ஆத்துமா கலங்குவதேன்
தேவனில் காத்திருப்பாய்
அவரே என் இரட்சிப்பு தினமும்
அவரை துதித்திடுவாய் ... தஞ்சமே

# 162

பல்லவி

வா பாவி மலைத்து நில்லாதே வா

சரணங்கள்

என்னிடத்தில் ஒரு நன்மையு மில்லையென்
றெண்ணித் திகையாதே
உன்னிடத்தில் ஒன்றுமில்லை அறிவேனே
உள்ளபடி வருவாய் .... வா

உன்றனுக்காகவே நானேயடி பட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்
சிந்திய என்திரு இரத்தத்தால் உன் பாவந்
தீர்த்து விட்டேன் பாவி வா ... வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய பாவத் தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்
ஒன்றுக்கும் அஞ்சாதே வா ... வா

விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிக ளடைக்கல மல்லோ
சீக்கிரம் ஓடி வாராய் ... வா

என்னிடத்தில் வரும் பாவி எவரையும்
இகழ்ந்து தள்ளேனே
மன்னிய மேலோக வாழ்வை யருள்வேனே
வாராயோ பாவி? ... வா

# 163

பல்லவி

வந்திடுமே யேசுவண்டை சேர்ந்திடுமே
பாவப் பாரம் தீர்ந்திடுமே

அனுபல்லவி

வரும் பாவியை அணைப்பேனென்று
வாக்கு அன்பாய் அளித்தனரே

சரணங்கள்

பாவத்தில் மாண்ட உன்னைப் பங்கமின்றி
விடுவிப்பேனென்கிறரே
அன்பரின் சத்தம் கேட்கும் நாளில்
அன்பாய்ப் பாதம் அண்டிக் கொள்வீர் ... வந்திடுமே

செல்வத்தை நாடி ஓடிச் செல்வாயோ
சேர்ந்திடுமே நரகில்
எல்லாம் விழல் என்று எண்ணி
நேசர் பாதம் அண்டிக் கொள்வீர் ... வந்திடுமே

மாயமே மண்ணுலகில் யாவதுமே
மனக் கவலை தருமே
மயங்காமலே மனதில் தினம்
மகிபரன்பில் அமிழ்ந்து நட .... வந்திடுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமே நினையா நேரமதில்
வந்துனைச் சந்திக்குமே
மரண வழி விட்டு பரன்
மாட்சி வழி நடத்திடுமே ... வந்திடுமே

மறப்பாயோ மாட்சிமை தான் மறந்து
மானிடர்க்காய் மாண்டவரை
மாரும் பரிசுத்த மீந்து
மன்னன் மார்பிலணைப்பாரே ... வந்திடுமே

# 164

பல்லவி

ஆனந்தங் கொண்டு அகமகிழ்வுடனே
அன்பரைப் பாடிடுவோம்

அனுபல்லவி

அவர் அன்பின் பாதத்தை அனுதினம் தேடி
ஆவியில் நிறைந்திடுவோம் - ஆனந்

சரணங்கள்

பாவத்தில் மாண்ட பாவிகளெம்மை
பரிவுடன் இரட்சித்தாரே - அவர்
கிருபையை நாடி ஓடி வா இப்போ
உன்னையும் இரட்சிப்பாரே - ஆனந்

சுத்த ஜீவியம் கொடுத்திட இயேசு
சிலுவையில் மரித்தாரே - அவர்
சுத்த ரத்தமே சுத்திகரிக்கும்
பாவத்தை முற்றுமாக - ஆனந்

தேவன்பில் வளர தேவாவி தந்தார்
தேவன் கிருபையாக - அவர்
கிருபையை நாடி ஓடியே வந்து
ஆவியைப் பெற்றிடுவேன் - ஆனந்

துக்கமுமில்லை துன்பமுமில்லை
இயேசுவின் தொண்டருக்கு - அவர்
எல்லா வற்றிற்கும் எல்லாமாயிருந்து
ஆற்றியே தேற்றிடுவார் - ஆனந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 165

ஆயத்த ஜெபம் செய்ய பெலன் தாரும் சுவாமி
அடைக்கலமாய் உந்தன் துணை வேணும் நேமி

சரணங்கள்

சாத்தானால் சோதனை மெத்தவுண்டையா
சர்வாயுதம் தந்து காத்திடுமையா ... ஆயத்த

சுருக்க நாளானதால் குதிக்கிறான் ஐயா
சுடரொளிப் பட்டயத் தூதன் தான் மெய்ய ... ஆயத்த

கேட்கிறதெல்லாம் கிருபையாய் தாரும்
கேடான மனம் நன்றாய் மாறிட வாரும் ... ஆயத்த

கருத்தான மனதுடன் ஒருமித்துப்பாடி
கனிவுடன் மன்றாட அருள் செய்யும் சுவாமி ... ஆயத்த

இயேசுவின் இரத்தத்தால் இதயத்தைக் கழுவி
நேசரிறைவியால் ஒருமிக்கச் செய்யும் ... ஆயத்த

மணவாளன் வருகைக்கு எதிர் கொண்டு போக
என்னையும் தீபமும் தாருமென் சுவாமி ... ஆயத்த

இப்படியாகவே கேட்கும் மன்றாட்டை
இயேசுவின் மூலமாய் ஏற்றுக் கொள் ஐயா ... ஆயத்த

# 166

பல்லவி

ஆமென் அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா
ஆமென் அல்லேலூயா! ஜெயம் ஜெயம்
ஆனந்த ஸ்தோத்திரம்

அனுபல்லவி

தொல்லை அனுதி தந்தார் வந்தார் இறந்
துயிர்த் தெழுந்தாரே உன்னதமே ... அல்லேலூயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி கொண்டார்ப்பரித்து - கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து - முறித்து
பத்ராசனக் கிறிஸ்து - மரித்து
பாடுபட்டுத்தரித்து முடித்தார் ... அல்லேலூயா

சாவின் கூர் ஒடிந்து - மடிந்து
தடுப்புச் சுவர் இடிந்து - விழுந்து
ஜீவனே விடிந்து - தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது ... அல்லேலூயா

வேதம் நிறை வேற்றி - மெய் தோற்றி
மீட்டுக் கரையேற்றி - பொய் மாற்றி
பாவிகளைத் தேற்றி - கொண்டாற்றி
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார் ... அல்லேலூயா

## 167

பல்லவி

ஆ வாரும் நாம் எல்லோரும் கூடி
மகிழ் கொண்டாடுவோம்- சற்றும்
மாசில்லா நம் யேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம்

தாரகம் அற்ற ஏழைகள் தனழக்க நாயனார்- இந்த
தாரணியிலே மானுடவதாரம் ஆயினார் .... ஆ

மா பதவியை இழந்து வறியவர் ஆன நாம்- அங்கே
மாட்சி உறவேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார் .... ஆ

ஞாலமதில் அவர்கிணை நண்பர் யாருளர்— பாரும்
நம் முயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார் .... ஆ

மாகொடிதான சாவின் வலியை நீக்கியே— இந்த
மண்டலத்தி னின்றுயிர்த்தவர் விண்டலஞ் சென்றார் ... ஆ

பாவிகட்காய் பரனிடம் பரிந்து வேண்டியே— அவர்
பட்சம் வைத்துறும் தொழும்பரை ரட்சை செய்கிறார் ... ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 168

பல்லவி

இன்னமும் தாமதமேன் - கிருபையின் தொனி ஒலிக்குதே

அனுபல்லவி

மின்னல் போல ஆயுள் போகுமே
பின்னே பின்னே யென உரைப்பதேன்
இந்நாளும் இயேசுவைச் சேருமே
இனி இன்னமும் தாமதமேன் — இன்னமும்

சரணங்கள்

யௌவனமும் போகுமே அழகுமதனோ டழியுமே
யாதொரு வாதமும் கூறுதே
சாத்தானின் வலைக்குள்ளாகாதே
வாருமே பரன் பாதமே
பணிவால் வந்து சேர்ந்திடுமே — இன்னமும்

தருணமுமிதுவே தயாபரன் கரம் தோன்றுதே
தாவியே உன்னண்டை வந்தாரே
பாவியே இவ் வன்பைப் பாருமே
பாதகனுகவே மாண்டாரே
அந்தப் பாடுகளுனக்காயே — இன்னமும்

உன்னையே அழைக்கிறார், உன் நிலைமை முற்றும் அறிவாரே
முன்னுன உன்வினை தீர்க்கவும்
பின்னுக முற்றிலும் காக்கவும்
மண்ணுன உன்னை விண் சேர்க்கவுமவர்
மாண்டாரே கல்வாரியில் — இன்னமும்

வேண்டாமென்னும் எண்ணமோ? வேகமாய் வாசலும் மூடுமே
வேதனை தான் உந்தன் பங்கையோ
வெறுத்தாலோ இந்தப் பாக்கியமோ
இயேசுவே உன் பாரம் தீர்க்கவோ
எழுந்து முன்னே சென்றிடாயோ — இன்னமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 169

பல்லவி

இயேசுவையே துதி செய் நீ மனமே
இயேசுவையே துதி செய் — கிறிஸ்தேசுவையே

சரணங்கள்

மாசணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து — இயேசு

அந்தரவான் தரையுந் தகு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன் — இயேசு

எண்ணின காரியம் யாவு மூகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க — இயேசு

# 170

பல்லவி

இரத்தம் சிந்தி நம்மையவர்
முக்தி சேர்க்கப் பிறந்தார்

அனுபல்லவி

நித்தம் அவரோடு வாழ சத்திய வழி திறந்தார்
கர்த்தரே தம் பக்தர் பாவம் மறந்தார் ... இரத்

சரணங்கள்

மோசத்துக்குள்ளான என்னை
யேசு சுவாமி பார்த்தார்
நாசத்திருந்தோடி வந்த
நீசனையே சேர்ந்தார்
நேச மீட்பர் பாசமாகக் காத்தார் ... இரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சி வந்த பாவிகட்காய்த்
தஞ்சமாக நின்றார்
மிஞ்சி மோசஞ் செய்யுமந்தக்
கஞ்சற் பேயைக் கொன்றார்
கொஞ்சமுமே அஞ்சிடாமல் வென்றார் ... இரத்

பொன்னுலகைத் தின்பங்களை
என்னுள்ளத்தில் தந்தார்
நன்னுடன் நற் பங்குபெற
மன்னர் என்மேல் உகந்தார்
சின்னப்பட இந்நிலத்தில் வந்தார் .... இரத்

துன்பம் வரும் வேளையினில்
இன்பமே கொண்டாடுவோம்
தம்பிரானும் என்மேல் வைத்த
அன்பின் நேசம் பாடுவோம்
அம்பரத்தில் நண்பருடன் கூடுவோம் ... இரத்

# 171

இயேசு என்னும் நாமம் ஏற்றுச்
செல்வாய் எங்கும் - எப்போதும்
நேசர் நாமம் உன்னை எல்லா
நாசத்திலும்- காத்திடும்

இன்பமே -அன்பர் பேர்
நம்பிக்கை -வேறில்லையே

சோதனைகள் உன்னை சூழ்ந்து
வேதனைகள் மோதிடில்
நாதர் நாமம் உச்சரித்து
காதலாய் ஜெபித்திடு

இயேசு என்னும் நாமம் உந்தன்
கேடயமாய் இருக்கட்டும்
நாதர் கரம் உன்னையவர்
மார்பில் அணைக்க மட்டும்

அக்கரை நாம் சீக்கிரம் சேர்ந்து
கர்த்தர் பாதம் பணிந்து
நித்தம் ராஜாதி ராஜாவாக
பக்தி முடி சூட்டுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 172

கண்ணிகள்

இயேசுவை நான் நம்பி ஜீவியஞ் செய்குவேன்
இயேசு தான் என் தஞ்சம் வானிலும் பூவிலும்

பூமியின் பாரங்கள் யாதொன்றெனக்கில்லை
போக்கிட மாகுவோன் என் யேசு தானல்லோ

இராப்பகல் அன்பர்தம் கண்மணிபோல் என்னைக்
காப்பதற்காகவே தூங்கிடேன் என்கிறார்

சாத்தானும் சேனையும் சண்டை செய்திடினும்
சாவை வென்றுயிர்த்தோனால் ஜெயக்கொடி நாட்டுவேன்

பூலோக மாயையில் நான் வீழ்ந்திடாமலே
மேலோகக் காட்சி என் கண்களில் வீசுதே

# 173

இயேசு சீக்கிரம் வரப்போகிறார்
மாசில்லாதோர் ஆகாயத்தில் மறைந்தே போவார்

கிரியைகளுக்கோ கிரீடங்களே
மரியின் மைந்தனுக்கோ மகுடமாமே

அடக்கமாயோடினோர்க்கழியாக் கிரீடமே
ஜீவனைக் கொடுத்தவர்க்கு ஜீவ கிரீடமே

ஆத்துமா தாயஞ் செய்தோர்க்கு ஆனந்தக் கிரீடம்
மந்தை மேய்த்தவர்களுக்கோ மகிமைக் கிரீடம்

பிரசன்னத்தை வாஞ்சிப்போர்க்கு நீதியின் கிரீடம்
பின்னால் விடப்படுவோர்க்கு நித்திய தண்டனை

அன்று போன இயேசு இன்று வந்தாலோ
நன்று என்று ஒன்றுமின்றி என்றேகுவாயோ

அவரை ரட்சகராய் ஏற்றுக்கொண்டாலோ
அல்லேலூயா பாடிக்கொண்டே ஏகிடுவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 174

பல்லவி

இயேசுவின் நிந்தையைச் சுமப்போம்
வாசலுக்குப் புறம்பே போவோம்

சரணங்கள்

சன்பால்லாத் தொபியா சக்கந்தங்களையும்
துன்புறுத்தும் தீயர் கேள்விகளையும்
அன்பருடனே இன்பம் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம் ... இயேசு

ஸ்தேவான் மேல் விழுந்த கற்களை நினைத்து
சீஷர்கள் அடைந்த சிறைகளைச் சிந்தித்து
மோசங்களென்றாலும் நேசமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம் ... இயேசு

கள்ளச் சகோதரர்கள் கைவிடுவார்கள்
சொல்லாதவைகளைச் சுமத்திடுவார்கள்
நல்ல கிறிஸ்தேசுவை மறுதலிப்பார்கள் ... இயேசு

கோலால் கொடுமையாய் அடிக்கப்பட்டாலும்
வாளால் துண்டாக வகுக்கப்பட்டாலும்
நாளெல்லாம் நாரால் நசுக்கப்பட்டாலும்
புறப்பட்டுப் போகக்கடவோம் .... இயேசு

வருத்தங்கள் வகை வகையாகவே வரும்
திருத்தங்கள் சிலரால் பொருத்தமாய்ச் சேரும்
செருக்கானவர்களால் நெருக்குதல் நேரும்
புறப்பட்டுப் போகக்கடவோம் ... இயேசு

அக்கினிக்கு நம்மை இரையாக்கினாலும்
விக்கினங்கள் வெகுவாய் சூழ்ந்தாலும்
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தே
புறப்பட்டுப் போகக்கடவோம் ... இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 175

இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டே
எப்பாவத் திங்கும் அதினால் நிவிர்த்தியாகுமே

பல்லவி

நான் நம்புவேன்! நான் நம்புவேன்!
இயேசு எனக்காய் மரித்தார் - மரித்தார்
பாவம் நீங்கச் சிலுவையில் உதிரம் சிந்தினார்

மா பாவியான கள்ளனும் அவ்வூற்றில் மூழ்கினான்
மன்னிப்பும் மோட்சானந்தமும், அடைந்து பூரித்தான்
... நான்

அவ்வாறே நானும் இயேசுவால் விமோசனம் பெற்றேன்
என் பாவம் நீங்கிப் போனதால் ஓயாமல் பாடுவேன்
... நான்

காயத்தில் ஓடும் இரத்தத்தை விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை எங்கும் பிரஸ்தாபிப்பேன்
... நான்

பின் விண்ணில் வல்ல நாதரை நான் கண்டு பூரிப்பேன்
அங்கென்னை மீட்ட நேசத்தை கொண்டாடிப் போற்றுவேன்
... நான்

# 176

பல்லவி

இம்மானுவேலின் இரத்த ஊற்றதோ
என் பாவம் போக்கும் ஜீவ ஊற்றதோ
அல்லேலூயா பார் அதோ
கல்வாரியிலே அதோ
ஐங்காயக் குருதி ஓடுது
அன்பின் இன்ப வெள்ளம் பெருகுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

பாவியான கள்ளனும் அவ்வூற்றில் மூழ்கினான்
பாவ மன்னிப் பானந்தம்
கண்டு பூரித்தான் ... இம்மானு

பாவி என்னில் கொண்ட ஜீவ அன்பின் அகலமே
நீளம், ஆழம், உயரம் இன்னும்
வளர்ந்து செல்லவே ... இம்மானு

ஆவியில் நிறைந்து தேவ சாயலாக்கினார்
தூய இரத்தத்தால் கழுவி
சுத்தமாக்கினார் ... இம்மானு

பிசாசு, உலகம், மாம்சம் மூன்றும் ஜெயித்த இரத்தமே
பின்னடையா சிலுவைக் கொடியை
உயர்த்துவோம் நாமே ... இம்மானு

# 177

பல்லவி

விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்
வித விதமாய் பாவத்திலே ஜீவித்த நானே!!
இந்த நாளில் எந்தன் இயேசு சொந்த ரத்தத்தில்
தந்திட்டாரே எந்தன் ஆத்ம மீட்பின் விடுதலை!!

சரணங்கள்

தடுக்கும் பாவத்தளைகளில் விடுதலை
கெடுக்கும் தீய பழக்கத்தில் விடுதலை!!
என்ன சந்தோஷம் இந்த விடுதலை!!
எந்தன் இயேசு இலவசமாய் தந்த சந்தோஷம்!! — விடு

எரிக்கும் கோபப்பிடியினில் விடுதலை
வதைக்கும் தீய பொறாமையில் விடுதலை!!
அன்பர் இயேசுவே தந்த விடுதலை!!
இன்பக்கானான் சென்றிடும் வரை உண்டே விடுதலை!! — விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்காய் பேசும் பொய்யினில் - விடுதலை
மிடுக்காய் பேசும் பெருமையில் விடுதலை //
ஏழ்மை ரூபமே கொண்ட இயேசுவே //
தாழ்மை கொள்ள உண்மை பேச ஈந்தார் சக்தியே // — விடு

மாறிடா எந்தன் உள்ளத்தில் விடுதலை
மாறிடா அன்பர் அடிமையாய் மாற்றிடுதே //
என்ன சந்தோஷம் இந்த அடிமைக்கு //
மீட்கும் அன்பை ருசித்திடவே ஆவலில்லையோ // — விடு

# 178

கண்ணிகள்

இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்

பரம சுகங்களின் இனிய ரசம்
பரனேசுவோடு யான் பானம் செய்வேன்

பரம பிதா எந்தன் கண்ணினின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்

சத்துரு சேனைகள் அங்கேயில்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே

தேவாட்டுக் குட்டியின் திருமணவி
சிறப்புடனிலங்கிடும் தேசமது

கேருபின் சேராபீன்கள் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே

சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாத
சொர்க்கிய நாட்டுக்கோர் இணையில்லையே

பரிசுத்த ஆவியின் பளிங்கு நதி
பளபளென் றொழுகிடும் தேசமது

ஜீவ விருட்சமங் காற்றருகில்
மாதந் தோறும் புதுக்கனி தருமே

நவரத்தின நிர்மிதப் பட்டணத்தில்
இராப்பகல் சூரியன் இயேசு தாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179

பல்லவி

இன்பமிதே பேரின்பமிதே
இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே
இயேசு நாமமே

சரணங்கள்

பாவம் போக்க வந்த நாமம்
இயேசு நாமமே
வாதை போக்க வந்த நாமம்
இயேசுவின் நாமமே — இன்ப

நேற்றும் இன்றும் மாறா நாமம்
இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம்
இயேசுவின் நாமமே — இன்ப

ஜீவ பாதை காட்டும் நாமம்
இயேசு நாமமே
ஜீவன் பெலன் தந்த நாமம்
இயேசுவின் நாமமே — இன்ப

சாவு பயங்கள் நீக்கும் நாமம்
இயேசு நாமமே
சாபம் ரோகம் நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே — இன்ப

தேவ ராஜ்யம் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே
தேவ நீதி நிறைந்த நாமம்
இயேசுவின் நாமமே — இன்ப

180

பல்லவி

இஸ்ரவேல் என் ஜனமே என்றும்
இடறிட வேண்டாம் ஏகோவா உன்
தெய்வமானால் ஏதும் பயம் வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒங்கும் புயமும் பலத்தகரமும்
உன் பக்கமே உண்டு
தாங்கும் கிருபை தயவு இரக்கம்
தாராள மாயுண்டு ... இஸ்ரவேல்

பார்வோான் கைக்கு விடுத்து மீட்ட
பஸ்கா ஆட்டுக் குட்டி
ஆரோன் மோசே என்னும் நல்ல
ஆசாரியர் உண்டு .... இஸ்ரவேல்

செங்கடலில் வழிதிறந்த
சீயோன் நாயகனே
பங்க மின்றி பாலைவனத்தில்
பராமரித்தாரே ... இஸ்ரவேல்

பயப்படாதே சிறு மந்தையே
பார் நான் உன் மேய்ப்பன்
கலங்காதே மனம் திகையாதே - உன்
தேவன் தினம் காப்பேன் ... இஸ்ரவேல்

181

இரத்தத்தால்ஜெயம் //
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே!
அல்லேலூயா! அல்லேலூயா!
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே!

இயேசு ஜெயித்தார்//
இயேசு ஜெயித்தார் சாத்தானை
அல்லேலூயா! அல்லேலூயா!
இயேசு ஜெயித்தார் சாத்தானை!

நாமும் ஜெயிப்போம்//
நாமும் ஜெயிப்போம் சாத்தானை
அல்லேலூயா! அல்லேலூயா!
நாமும் ஜெயிப்போம் சாத்தானை

சாத்தான் தோல்வியுற்றான்//
சாத்தான் தோல்வியுற்றான் இரத்தத்தால்
அல்லேலூயா! அல்லேலூயா!
சாத்தான் தோல்வியுற்றான் இரத்தத்தால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 182

இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்ருய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு ராஜாவே இதோ வேகம் வாராரே //
அதி வேகமாய் செயல் படுவோம்

மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம் - நம் இயேசு

சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்த பார் முழுவதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம் - நம் இயேசு

ஆவி அத்துமா தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம் - நம் இயேசு

## 183

இயேசு மீட்பா உன்தன் நெஞ்சில்
வாசம் பண்ண விடாயோ?
உன்தன் பாவம் சுமந்தோரை
இன்று ஏற்றுக் கொள்ளாயோ?

இயேசு மகா ராஜா் இதோ
வாசலண்டை நிற்கிருர்
பாவி நீ இவ்வன்பை எண்ணி
வாசலைத் திறக்கப் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் லோகம் ஆசா பாசம்
யாவும் இடம் பெற்றதோ
நீச சிலுவையில் மாண்ட
நேசர்க் கிடமில்லையோ .... இயேசு

இன்னுமே நீ தாமதித்தால்
பின்பு மோசம் வருமே
இப்போதே ரட்சண்ய காலம்
அப்பால் பிந்திப் போகுமே.... இயேசு

கூவி நிற்கும் மீட்பர் சத்தம்
பாவி! கேட்டுத் திறப்பாய்
உன்தன் ஜீவன், பெலன் யாவும்
இன்றே தத்தம் செய்குவாய் .... இயேசு

# 184

பல்லவி

இயேசு சீக்கிரமாய் வருகிறார்
ஆசையுடன் விழித்திருங்கள்

சரணங்கள்

அடையாளங்கள் அகிலமெல்லாம்
தடையின்றிக் காட்டுகின்றன
நடை உடைகளைச் சரிப்படுத்துங்கள்
முடை ஏதுமின்றி விழித்திருங்கள் ... இயேசு

சாயங்கால வேளையிலோ
மாய நடு ராத்திரியிலோ
சேவல் கூவும் நேரத்திலோ
காலையிலோ விழித்திருங்கள் .... இயேசு

ஆயத்தமாக இருங்கள்
ஆண்டவரைச் சந்தியுங்கள்
நியாயந் தீர்க்கப்படவிருங்கள்
ஆயனுக்காக விழித்திருங்கள் ... இயேசு

பரிசுத்தர் களாயிருங்கள்
திரு சித்தப்படி நடந்திடுங்கள்
மரித்தாலும் அவரில் மரித்திடுங்கள்
பிழைத்திருக்கையில் விழித்திருங்கள்... இயேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 185

பல்லவி

இயேசுவை நாம் எங்கே காணலாம்
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்

அனுபல்லவி

பனிபடர்ந்த மலையின் மேலே பார்க்க முடியுமோ?
கனி நிறைந்த சோலை நடுவே காணமுடியுமா? — இயேசு

ஓடுகின்ற அருவியெல்லாம் தேடியலைந்தேனே
ஆடுகின்ற அலைகடலில் நாடி அயர்ந்தேனே
பதடுகின்ற என் எதிரே தெய்வத்தைக் காணேனே
ரோடு படும் ஏழை நான் அழுது வாடினேனே — இயேசு

வானமதில் பவனி வரும் கார்முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே காட்டிட மாட்டீரோ
காலமெல்லாம் அவனியின் மேல் விசிடும் காற்றே நீ
கர்த்தர் இயேசு வாழுமிடம் கூறிடமாட்டாயே — இயேசு

கண்ணிரண்டும் புனலாக நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான் திருமறை முன்பாக
விண்ணரசர் அன்புடனே கண் விழிப்பாய் என்றார்
கண் விழித்தேன் என் முன்னே கர்த்தர் இயேசு நின்றார்
— இயேசு

## 186

ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களே!
யாவரும் தேன்மொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களே!

பல்லவி

அல்லேலூயா! அல்லேலூயா!
என்றெல்லாரும் பாடிடுவோம்!
அல்லலில்லை இனி அல்லலில்லை!
ஆனந்தமாய் பாடிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய புதிய பாடல்களை
புனைந்தே பண்களும் சேருங்களே!
துதிகள் நிறைந்த கானங்களால்
தொழுதே இறைவனை காணுங்களே! ... அல்லேலூயா

நெஞ்சின் நாவின் கீதங்களே
நன்றி கூறும் கீதங்களாம்!
மிஞ்சும் ஓசைத் தாளங்களால்
மேலும் பரவசம் நாடுங்களே! ... அல்லேலூயா

எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே!
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீர் யேசுநாதனைப் பாடுங்களே! .... அல்லேலூயா

# 187

பல்லவி

ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்
ஞான ரட்சகர், நாதர் நமை, இந்த
நாள் வரை ஞாலமதினில் காத்தார் - புகழ்

சரணங்கள்

சங்கு, கனம், வளர் செங் கோலரசினை
நளராதுள கிறிஸ்தானவராம்
எங்கள் ரட்சகரேசு நமை- வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் - புகழ்

முந்து வருட மதினில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல
தந்து நமக்குயிருடையுணவும்- வெகு
தயவுடன் இயேசு தற்காத்ததினால் - புகழ்

பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளை நோய் விஷ தோஷத்திற்கும்
தஞ்சரட்சகர் தவிர்த்து நமை - இத்
தரைதனில் குறை தணித்தாற்றியதால் - புகழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 188

பல்லவி

ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன் இயேசு தேவனை
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் ஸ்தோத்தரிப்பேன்

சரணங்கள்

உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை
இயேசுவின் நாமத்தினாலே செலுத்துகின்றேன் யான்//
ஸ்தோத்

பாவக்கறை நீங்க என்னை முற்றிலுமாக
உம் சுத்தமுள்ள இரத்தத்திற்குள் தோய்த்ததினாலே//
ஸ்தோத்

என்னுடைய நோய்களை உம் காயங்களாலே
என்றைக்குமாய்த் தீர்த்ததினால் ஸ்தோத்தரிப்பேன் யான்//
ஸ்தோத்

ஆகாயத்துப் பட்சிகளைப் போஷிக்கும் தேவன்
தினமும் என்னைப் போஷிப்பதால் ஸ்தோத்தரிப்பேன் யான்//
ஸ்தோத்

நாளைத் தினம் உவன் உடைக்காய் என் சிந்தைகளை
கவலையற்ற தாக்கினதால் ஸ்தோத்தரிப்பேன் யான்//
ஸ்தோத்

சீக்கிரமாய் வந்திடுவேன் என்றுரைத்தோனை
சீக்கிரமாய் காண்பதினால் ஸ்தோத்தரிப்பேன் யான்//
ஸ்தோத்

## 189

பல்லவி

விழித்தெழும்பி வேகம் செல்லுவோம் சபையோரே
இதோ மணாளன் இயேசு வருகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக்காலமும் செல்லுதே பகல் சமீபமாகுதே
இருளின் கிரியை யாவையும் அகற்றுவோம்//
ஒளியின் ஆயுதங்களைத் தரித்து வீரராய்
ஓயாது போர் புரிந்து சேருவோம்// .... விழித்

தேசம் பாஷை ஜாதிகள் ஒன்றோடொன்றெதிர்க்குதே
தேவ அன்பு நம்பிக்கை தணியுதே//
சத்ய வசனத்தை மேலே உயர்த்திக்கொண்டே
ஜோதிகளாய்ப் பூவில் இலங்குவோம்// ... விழித்

தலைகளை உயர்த்துவோம் நம் ரட்சிப்பு நெருங்குதே
நிலையான நகரம் வேறிங்கில்லையே//
நித்திய கன மகிமைக் கிணையாகுமோ
இக்கால பாடு துன்பம் யாவுமே// .... விழித்

## 190

ஆவி அனலுள்ளதாய்
அவியாமல் பாதுகாப்பாய்
அனலுமில்லாமல் குளிருமில்லாமல்
ஜீவிப்பது பரிதாபம்

கர்த்தரின் நாள் சமீபம்- மிக
கருத்துடன் சேவிப்பாயே
நிர்ப்பந்த நாட்கள் வரும்
நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே

வருகையின் அடையாளங்கள் - வெகு
விரைவாக நிறைவேறுதே
வானத்தின் அதிசயங்கள்
காலம் கூறுதே கண்டிடுவாய்

அசதியாய் இருந்திடாமல் - பல
அற்புதங்கள் செய்வோமே
ஜெபத்திலே தரித்திடுவோம்
ஜெய ஊழியம் செய்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 191

பல்லவி

இயேசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார்
பக்தரை வானத்தில் சேர்த்திடவே - நான்

அனுபல்லவி

ஜோதியாய் அவர் முகம் கண்டிடுவேன் - பின்னும்
ஜெயகெம்பீரம் கொண்டுளம் பொங்கிடுமே - இயேசு

சரணங்கள்

மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய்க் கவி சாற்றிடுமே - அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம் - அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம் ... இயேசு

முத்திரையிட்ட சுத்தர்கள் வெள்ளையங்கி தரித்து
கர்த்தர் சமுகத்தில் நின்றிடுவார் - அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன் - அன்று
பொற்கிரீடம் தரித்தாடிடுவேன் ... இயேசு

காதலித்தேன் நான் காசினியின்பம் விட்டு
கர்த்தரோ டென்று முறவாடிட - அங்கு
கனக மணவரை ஜொலித்திடுமே - அப்போ
கர்த்தராம் இயேசுவில் சுகிப்போமே ..... இயேசு

வானத்தில் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார் - அப்போ
அத்தனின் கலியாண விருந்திலே - நாமும்
நித்தம் அவரோடார்ப் பரிப்போம் ... இயேசு

# 192

பல்லவி

இன்ப இயேசுவின் இணையில்லா நாமத்தை புகழ்ந்து
இகமதில் பாடிட தருணமதே
இயேசுவைப் போல் நல் நேசரில்லை
இன்னும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

நித்தியமான பர்வதமே உந்தனில் நிலைத்திருப்பேன்
நீங்கிடாதென்னை தோளின்மேல் சுமந்தே
நித்தம் நடத்துகிறீர்
என்னையும் உம் ஜனமாய் நினைந்தே — ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய் ... இன்ப

பாவத்தில் வீழ்ந்து மாயையிலே ஆழ்ந்து நான் மாள்கையிலே
பரிந்து தேவ அன்பினை காட்டியே
பட்சயமாய்ப் பார்த்தெடுத்தீர்
பாரில் பரிசுத்த ராகுதற்காய் — மிக
பரலோக நன்மைகளால் நிறைத்தீர் ... இன்ப

மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுமாப்போல்
என் ஆத்துமா உம் பொன் முகம் காணவே
வாஞ்சித்து காத்திடுதே
வானிலும் இந்த பூவிலும் நீர் — என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைந்தே ... இன்ப

சீயோனிலே நீர் சிந்தை வைத்தீர் சேர்த்தொன்றாய்
திவ்விய பிஷேகம் தந்தெம்மை நிறுத்தி
சேர்த்தீரே சுத்தருடன்
சேதம் வராமலே காத்ததினால் — உம்மை
சேவிப்போம் நித்திய நித்தியமாய் .... இன்ப

ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்தரிப்போம் அன்பரை உளம்
அழிவில்லாத ஜீவனை அளித்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே
அல்லேலூயா துதி கன மகிமை — உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம் ... இன்ப

# 193

பல்லவி

உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?

சரணங்கள்

பூவில் யேசு வரும் போது பொல்லார் ஓடிடுவார்
அந்த விதம் நீ இருந்தால் என்ன செய்திடுவாய் — உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகங்களுடன் வருவேனென்று சொன்னவர் – இப்போ
மேகந்தனில் வரும் நேரம் கிட்டிச் சேருதே ... உன்

அக்கினி சுவாலையோடு ஆரவாரமாய் – தம்
பக்தரை சந்திக்கும் நேரம் கிட்டிச் சேருதே ... உன்

பாவங்களில் ஜீவிப்பவர் பதுங்கிடுவார்
பரிசுத்த மாக்கப் பட்டோர் பறந்திடுவார் .... உன்

இரக்கமுள்ள இந்த நாளில் மனந்திரும்பு
யேசு உன்னை பட்சமாக ஏற்றுக் கொள்வார் .... உன்

ப்ரஜை ஏற்றுக் கொள்ளாதோர் அந்த நாளிலே
பதுங்கி நித்திய காலமாய் பரிதவிப்பர் ... உன்

# 194

பல்லவி

தொண்டு செய்வேன் என்றும்//
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

அனுபல்லவி

அவரழைப்பை அனுசரித்து
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

மழையானாலும் வெயிலானாலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே — தொண்டு

பசியானாலும் தாக மானாலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே — தொண்டு

யுத்தமானாலும் பஞ்சமானாலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே — தொண்டு

துன்பமாயினும் இன்பமாயினும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே — தொண்டு

மலைகளிலும் பள்ளத்தாக்கிலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே — தொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 195

இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும்
மகிமையில் அவரோடு நான் வாழ்ந்தால் போதும்
நித்தியமாம் மோட்ச வீட்டில் சேர்ந்தால் போதும்
அல்லேலூயா கூட்டத்தில் நான் மகிழ்ந்தால் போதும்

இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு
வசனமாம் வேலியாலே காக்கப்பட்டு
கறை திரையற்ற பரிசுத்தரோடு
ஏழை யான் பொன் வீதியில் உலாவிடுவேன்

தூதர்கள் வீணைகளை மீட்டும் போது
நிறைவான ஜெய கோஷம் முழங்கும் போது
அல்லேலூயா கீதம் பாடிக் கொண்டு
அன்பராம் இயேசுவோடு அகமகிழ்வேன்

முட் கிரீடம் சூடப்பட்ட தலையைப் பார்ப்பேன்
பொற் கிரீடம் சூட்டி நானும் புகழ்ந்திடுவேன்
வாரினால் அடிப்பட்ட முதுகைப் பார்ப்பேன்
ஒவ்வொரு காயங்களாய் முத்தம் செய்வேன்

எனதுள்ளம் நன்றியால் நிறைந்திடுதே
அத்தனின் பாக்கிய வீட்டை நினைக்கையிலே
அல்லேலூயா ஆமேன் அல்லேலூயா
வர்ணிக்க எந்தன் நாவு போதாதையா

ஆஹா எக்காளம் என்று முழங்கிடுமோ
ஏழை என் ஆவல் என்று தீர்ந்திடுமோ
அப்பா என் கண்ணீர் என்று துடைக்கிறாரோ
ஆவலாய் ஏங்கிடுதே எனதுள்ளமே

# 196

சரணங்கள்

இயேசுவின் பின்னாலே மண்ணாசைகளும் மாய்த்து
நேசமுடன் போவோம்

பல்லவி

ஜோதியுயர் நாதனுடன்
ஜோதிலோகம் நின்றிடலாம் – போவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரலோகம் விட்டுப் பாவிகள் மீதன்புற்றுர்
நரர் பரம் செல்ல நல் வழி திறந்திட்டார்
பரா பரன் ... ஜோதி

பாவங்களை நீக்கிப் பரிகரிக்க என்னைப்
பாவக் கோலமாகிப் பரனின் சுதன் தன்னை
மாய்த்தனரே ... ஜோதி

பரிசுத்தராகப் பாரிலும் ஒன்று கூடி
பரலோகம் செல்லப் பரிசுத்தாவி தந்தார்
மா அன்புதான் ... ஜோதி

பொய்யுலகம் வேண்டாம் யேசையாயெனக் கெல்லாம்
தூய சாலேம் செல்வோம் யேசையனடி சென்ருல்
ஐயமின்றி .... ஜோதி

மனம் மாறிடாதோர் மரணமடைவாரே
தினந் தோறும் தீயிற்றியங்கி அழுவாரே
திரும்புவீர் .... ஜோதி

இருதயத்தின் சுத்தம் இருந்திடில் நித்தம்
வரும் நாளில் இயேசு நாம் வானிலொன்று கூடி
வாழ்ந்திடலாம் ... ஜோதி

# 197

பல்லவி

இயேசுவே கிரு பாசனப்பதியே கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்

சரணங்கள்

காசினியில் உன்னை அன்றி தாசன் எனக் காதரவு
கண்டிலேன் பருவ வல்ல மண்டலாதிபா
நேசமாய் ஏழைக்கிரங்கி மோசம் அணுகாது காத்து
நித்தனே எனை திருத்தி வைத்தருள் புத்தி வருத்தி — இயேசு

பேயுடைச் சிறையதிலும் காய வினைக் கேடதிலும்
பின்னமாகச் சிக்குண்ட துர்க்கன்மி ஆயினேன்
தீயோரை மீட்கும் பொருளாய் நேயம் உற்று திரம் விட்ட
தேவனே எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி
— இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீர முள்ள எங்கள் உபகார வள்ளலே
குறை ஏதுனே அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து முற்று முடியக் கண் பார்த்து
— இயேசு

பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை
புண்ணியனே உன் சரணம் நன்னி அண்டினேன்
எல்லார்க்குள் எல்லாய நீ அல்லோ எனக்குதவி
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து — இயேசு

# 198

பல்லவி

யேசு நேசிக்கிறார் - யேசு நேசிக்கிறார்
யேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மா தவமோ!

சரணங்கள்

நீசனுமெனைத்தான் யேசு நேசிக்கிறார்
மாசில்லாத பரன் சுதன்றன் முழு
மனதால் நேசிக்கிறார் — யேசு

பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நாராமீனரை நேசிக்கிறாரென
நவிலல் ஆச்சரியம் — யேசு

நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்
நீதன் யேசெனை நேசிக்கிறாரென
நித்தம் ஆச்சரியம் — யேசு

ஆசை யேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்
அதை நினைத்தவர் அன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன்

ராசன் யேசுவின் மேல் இன்ப கீதஞ் சொலில்
ஈசன் யேசெனைத் தானேசித்தாரென்ற
இணையில் கீதஞ் சொல்வேன் — யேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 199

பல்லவி

இன்ப துன்ப நேரத்திலும்
உன் அன்புள்ள இயேசுவைப்பார்

சரணங்கள்

இன்பத்திஞல் அக மகிழ்ந்து
கிலேசத்திஞல் துக்கித்து
சிற்றின்பப் பேருலகில்
சிக்கிக் கொண்டிருக்கும் போதும் - இன்ப

சோதனையால் பிடிபட்டு
இடுக்கணில் இருக்கும் போதும்
சாத்தான் உன்னை மேற் கொள்ளும் போதும்
அக்கினியாஸ்திரம் எறியும் போதும் - இன்ப

தோழரால் பகைக்கப்பட்டு
மனக்கிலேசம் அடையும் போதும்
உலகம் உன்னை மேற்கொள்ளும் போதும்
தங்கள் இடத்தை விட்டோட்டும் போதும் - இன்ப

அவர் தாமே சோதிக்கப்பட்டு
பாடு நமக்காய்ப் பட்டதிஞல்
அவர் சோதிக்கப்படும் நமக்கு
உதவி செய்ய வல்லவராம் - இன்ப

வறுமையிஞல் யாசித்து
பாடு மிகப் படும் போதும்
சாத்தான் உன்னைப் பகடி பண்ணி
உன் விசுவாசத்தைக் குறைக்கும் போதும் - இன்ப

கடுநோயால் பெலன் குன்றி
பெலவீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்குக் கசப்பாகி
சாவை நீ விரும்பும் போதும் - இன்ப

பகைஞரால் கல்லெறியுண்டு
மரண நேரம் கிட்டும் போதும்
பக்தன் ஸ்தேவானைப் போல
தைரியமாய் உன் இயேசுவைப் பார் - இன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என் இயேசுவின் தரிசனத்தை
நிமிஷந் தோறும் காண்கிறதால்
நான் தான் பயப்படாதிருங்கள்
என்றவர் என்னைத் தேற்றுகிறார் - இன்ப

# 200

பல்லவி

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதிபோலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா

சரணங்கள்

பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம் பூவில்
கர்த்தாவின் அன்பண்டை வா ... சிலுவை

ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்மம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்று மில்லையே ... சிலுவை

பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப்பரிகாரி கர்த்தர் இயேசு நாதர்
பாவமெல்லாம் சுமந்தார் .... சிலுவை

நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய் .... சிலுவை

தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தைத் தீர்க்க வாரும்
ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசுநாதர்
ஜீவன் உனக்களிப்பார் .... சிலுவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 201

இயேசுவின் அன்பில் மூழ்கவும்
நேசத்தின் ஆழம் பார்க்கவும்
இன்னமும் தீரா வாஞ்சையே
என்னில் உண்டாகுகின்றதே

பல்லவி

ஆட்கொண்டவர் நேசம் ஈடேற்றின நேசம்
இன்னும் மென்மேலும் வாஞ்சிப்பேன்
உன்னத அன்பைப் போற்றுவேன்

இயேசுவின் சொல்லும் சித்தமும்
ஆசையுள்ளோனாய்ச் செய்யவும்
தேவ ஒத்தாசை நம்புவேன்
ஆவியின் பேரில் சாருவேன்

நாதரின் இன்ப சத்தமும்
வேதத்தில் கேட்டு நித்தமும்
ஆத்தும நன்மை நாடுவேன்
நீதியின் பாதை செல்லுவேன்

இயேசுவின் ராஜரீகமும்
ஆசித்த மா செங் கோன்மையும்
விண்ணிலே தோன்றும் வண்ணமாய்
என்னிலுண்டாகும் மேன்மையாய்

# 202

ஓ பெத்லகேமே சிற்றூரே
என்னே உன் அமைதி
அயர்ந்தே நித்திரை செய்கையில்
ஊர்ந்திடும் வான் வெள்ளி
விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே
உன் வீதியில் இன்றே
நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்
உன் பாலன் இயேசுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் ஓ விடி வெள்ளிகாள்
இம்மைந்தன் ஜன்மமே
விண் வேந்தர்க்கு மகிமையே
பாரில் அமைதியாம்
மா திவ்விய பாலன் தோன்றி
மண் மாந்தர் தூக்கத்தில்
விழித்திருக்க தூதரும்
அன்போடு வானத்தில்

அமைதியாய் அமைதியாய்
விண் ஈவு தோன்றினர்
மாந்தர்க்கு ஸ்வாமி ஆசியும்
அமைதியாய் ஈவார்
கேளாதே அவர் வருகை
இப்பாவ லோகத்தில்
மெய் பக்தா ஏற்பார் ஸ்வாமியை
தம் சாந்த ஆன்மாவில்

வேண்ட நற் சிறு பாலரும்
இத் தூய பாலனே
அழைக்க ஏழை மாந்தரும்
இக்கன்னி மைந்தனே
விசுவாசமும் நம் பாசமும்
வரவைப் பார்க்கவே
இராவை நீக்கித் தோன்றுவார்
இம்மாட்சி பாலனே

## 203

பல்லவி

உம் சித்தம் போல் என்னை யென்றும்
தற்பரனே நீர் நடத்தும்
என் சித்தமோ ஒன்றும் வேண்டாம்
என் பிரியனே என் இயேசுவே

சரணங்கள்

திரு மார்பில் நான் சார்ந்திடுவேன்
மறு பிறையான காலம் வரை
பரனே உந்தன் திரு சித்தத்தை
அறிவதல்லோ தூய வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பிரயாணி மூடனைப்போல்
வழி தவறு நடந்திட்டவே
வழி இதுவே என்றும் சொல்லும்
இனிய சத்தம் தொனித்திடட்டும்

அக்னிஸ்தம்பம் மேக ஸ்தம்பம்
அடியார் மீது ஜொலித்திடட்டும்
இரவு பகல் கூட நின்று
என்றென்றுமாய் நடத்திடுமே

இடுக்கமுமே என் அப்பமுமாய்
கண்ணீரோ என் தண்ணீருமாய்
பருகிடினும் பயப்படேன் நான்
என்றென்றும் உம் சித்தம் போதும்

எண்ணிடேன் நான் யாதொன்றையும்
புண்ணியர் நேசம் காணும் வரை
பரதேசியாய் சஞ்சரிப்பேன்
பாரம் என்னைத் தாங்கிடாமல்

# 204

பல்லவி

இயேசு ராஜன் உயிர்த்தெழுந்தார்
இந்த நல் நாளில் நாம் மகிழ்வோம்
என்றென்றும் பாடி போற்றிப் புகழ்ந்தே
சாற்றுவோம் துதி அவர்க்கே

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

சரணங்கள்

வானத்தின் சேனை துதித்திடவே
வேதாள கணங்கள் ஓடிடவே
முன்னுரைத்த அவர் வாக்கின்படி
மூன்றும் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார் — இயேசு

மரித்த நம் இயேசு உயிர்த்தெழுந்தார்
மானிடர் தேடும் நேசரவர்
ஜீவனை ஈந்து நம் பாவம் தீர்த்த
ஜீவாதிபதி இன்னும் ஜீவிக்கிறார் — இயேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமே உந்தன் கூர் எங்கே?
பாதாளமே உந்தன் ஜெயம் எங்கே?
மரணத்தின் கூரை முறித் தெறிந்தே
மகிமையாய் இயேசு உயிர்த்தெழுந்தார் — இயேசு

நித்திரையானோர் யாவரிலும்
முதற் பலனானவர் இயேசு தாமே
நித்திய நம்பிக்கை பெருகிடவே
நீதிபரர் இயேசு உயிர்த்தெழுந்தார் — இயேசு

கர்த்தரில் மாண்ட பரிசுத்தர்கள்
காகளம் தொனிக்கும் வேளைதனில்
கல்லறை திறக்க பறந்திடுவார்
கர்த்தரோடென்றும் வாழ்ந்திடுவார் — இயேசு

# 205

பல்லவி

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்//

சரணங்கள்

பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும் .... இயேசு

பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம் .... இயேசு

வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானோர் துதி வானவர் இயேசுவின் நாமம் ... இயேசு

நேற்றும் இன்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம் ... இயேசு

முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம் ... இயேசு

சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசை துரத்திடும் நாமம் .... இயேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 206

பல்லவி

உமை நம்பினோர் மாண்டதில்லை
மாண்டதில்லை மாண்டதில்லை

சரணங்கள்

துன்பங்கள் பலவாய் நெருங்கி வந்தாலும்
தொல்லைகள் எம்மை அணுகி வந்தாலும்
காக்கவல்லவர் காக்கவல்லவர் காக்கவல்லவர்
காக்கவல்லவர் ... உமை

சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியுற்றாலும்
பக்கம் வரா தென்னை காத்திடுவீரே
ஓங்குமே பெலன் ஓங்குமே எமைத்தாங்குமே
துயர் நீங்குமே ... உமை

நிறுத்திடு வீரென்னைக் களங்க மில்லாமல்
பொறுத்தெந்தன் குறைகள் யாவையுமகற்றி
காப்பீரே என்னைக் காப்பீரே சுத்தம் செய்வீரே
முத்தி சேர்ப்பீரே ... உமை

தாரகை போல் நின்று இலங்கின சுத்தர்
பாதை விட்டோடி மறுத்து வீழ்ந்தாலும்
பாதை காட்டவும் பாதுகாக்கவும் பாதஞ்
சேர்க்கவும் வல்லவர் ... உமை

மாட்சியிலே இன்னும் வந்திடுவீரே
மகிமையிலே என்னைச் சேர்த்துக் கொள்வீரே
மன்னவர் நீரே நல்லவர் இன்றும் நல்லவர்
என்றும் நல்லவர் ... உமை

## 207

கண்ணிகள்

இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே
நேசமூசிப் பாறுதல் இயேசுவின் கண்டேன் யானும்

என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் பசியுடேன மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இதற்காய் உன் தஞ்சம் இயேசிருக்கையில்

வியாதியால் எந்தனது காயங் கெட்டுப் போயினும்
மாய தோற்றத்தை யேசு நாயகன் மாற்றிடுவார்

லோகம் என்னை எதிர்த்து போவென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனே என் ஏகன் எனக்கிருக்க

என்னென்ன மாய லோகக்கன்னல் என் மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாய் யேசு என்னை நடத்திடுவார்

பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்

ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை என்னும்
நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்

## 208

இயேசு வண்டை வாராயோ நீ
நித்திய ஜீவன் உண்டு உனக்கு
நிலையான இன்பம் தந்து
நித்திய மோட்சம் சேர்ப்பார் மெய்யாய்

பாவி எந்தன் பாவம் போக்க
கல்வாரியில் ஏசு மரித்தார்
எல்லையில்லா அவரின் அன்பை
என்ன வென்று சொல்வேன் மாந்தா
வான தூதர் சேனைகள் போற்ற
வேதம் முழுவதும் நிறை வேற்ற
விண்ணோர் யாவரும் தொழுதேற்ற
மானுவேலன் உயிர்த்தார் ஜெயித்தார் ... இயே

துன்பம் எல்லாம் தீர்ப்பார் நம்பு
அன்பு உள்ளம் கொண்ட கிறிஸ்து
கல்வாரியைக் கண்டால் போதும்
கவலை எல்லாம் பறந்தே போகும்
மாயையான உலகம் அழியும்
மாறுத கிறிஸ்தேசுவை இன்றே
மாந்தா ஏற்றுக் கொள்ளுவாயானால்
மீட்டு உன்னை மோட்சம் சேர்ப்பார் ... இயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 209

சரணங்கள்

உலகத் தோற்றம் முன்னே எம்மை
உள்ளத்தில் கண்டு எடுத்தாரே
உன்னத மா அழைப்பிதே
உண்மையுடன் நாம் சேவிப்போமே

பல்லவி

ஆதி அன்பால் உள்ளம் பொங்க
ஆத்தும தாகமே எழும்ப
ஆர்வமுடன் நாம் சேவிப்போமே

தூதர்கள் கூடப் பெற்றிடாத
தூயதாம் பணியும் ஈந்திட்டாரே
பரமனின் தயவிதே
பயத்தோடே நாம் சேவிப்போம் ... ஆதி

மேய்ப்பனில்லாத ஆடுகள் போல்
மேய்ப்பனைத் தேடும் மந்தைகள் போல்
தேவ ஜனம் அலையுதே
தேடி விரைவாய்ச் சேர்த்திடுவோம் ... ஆதி

ஆண்டவரே தம் சம்பத்தையே
ஆவலாய்ச் சேர்க்கும் நாளிலே
தன் மகனைக் கடாட்சிக்கும்
தந்தை போல நம்மைக் கண்டெடுப்பார் ... ஆதி

வேகம் அறுப்பு பெருகுதே
வேலைக்கோ ஆட்கள் குறையுதே
வேண்டிடுவோம் ஊக்கமுடன்
வேளையிதே நாம் சேவிப்போமே ... ஆதி

சேவை நமக்கு செய்வோருக்கும்
சேவை செய்யாதவர்க்கும் உள்ள
வித்தியாசமே காண்போம் அன்றே
வீரமுடன் நாம் சேவிப்போம் ... ஆதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப்பாடுவேன் - இயேசய்யா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

சரணங்கள்

பரிசுத்த பரவசமே
பர னேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்திர் — உம்

புது எண்ணெய்யால் புது பெலத்தால்
புதிய கிருபை புதுக் கவியால்
நிரப்பி நிதம் நடத்துகிறீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர் — உம்

நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசை கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னை தாங்குகின்றீர் — உம்

என் முன் செல்லும் உம் சமுகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னை தேற்றிடுதே — உம்

கனி செடி நீர் நிலைத்திருக்கும்
கொடியாய் அடியேன் படர்ந்திலங்க
கிளை நறுக்கி களை பிடுங்கி
கர்த்தரே காத்தென்னைச் சுத்தம் செய்தீர் — உம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 211

பல்லவி

உமதுண்மை மகா பெரியது
மகா பெரியது, மகா பெரியது

சரணங்கள்

தகப்பனைப் போலவே இரங்கிடுகிறீர்
தாயைப் போலவே தேற்றிடுகிறீர்
மாயையினின்று காப்பாற்றுகிறீர்
காப்பாற்றுகிறீர், ஆற்றுகிறீர் .... உமது

கோழி தன் குஞ்சுகளைச் சேர்ப்பதுபோல்
ஆழியினின் றெடுத்தே அரவணைத்தீர்
நாழிகை எல்லாம் வாழி பாடுவேன்
வாழி பாடுவேன், பாடுவேன் ... உமது

சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்தாலும்
சிங்கக் கெபியிலே போடப்பட்டாலும்
பங்கமின்றியே பாதுகாக்கிறீர்
பாதுகாக்கிறீர், காக்கிறீர் ... உமது

இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்
தருணங்கள் மாறாய்ச் சம்பவித்தாலும்
சரணங்கள் சாற்றவே வைக்கிறீர்
பாட வைக்கிறீர் என்னை வைக்கிறீர் .... உமது

வியாதிகள் பலவிதம் பாதித்தாலும்
உபாதிகள் உள்ளத்தை வாதித்தாலும்
நாதியாயென்னைக் கைவிடுவதில்லை
கைவிடுவதில்லை, விடுவதில்லை ... உமது

வான பரியந்தமும் எட்டுகிறது
வானங்களில் ஸ்தாபித்திருக்கிறது
ஏனன் நான் அதைக் காண வைக்கிறீர்
காண வைக்கிறீர், வைக்கிறீர் ... உமது

மலைகள் இவ்வுலகில் விலகினாலும்
நிலை விட்டுப் பர்வதங்கள் பெயர்ந்தாலும்
விலையில்லாக் கிருபை விலகுவதில்லை
விலகுவதில்லை, அல்லேலூயா ... உமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 212

பல்லவி

உலகமெல்லாம் ஒரு குடும்பமாகுவோம்
உள்ளமெனும் பெத்தலையில் ஏகுவோம்

அனுபல்லவி

அவனியில் பரி அன்னை தந்த பாலனை
அடி பணிந்து பரம கீதம் பாடுவோம் //

சரணங்கள்

தேவ தேவன் பாலனான நாளிலே
செப்புகின்ற பாவ லோகம் மீளவே
ஜீவ வார்த்தை கூறுவோம் இந்நாட்டிலே
தேவ நாமக் கீத மின்பப் பாட்டிலே ... உலக

அன்பும் அருளும் உலகில் வெள்ளமாகவே
அந்தகார லோக அதிபன் சாகவே
உன்னதம் துறந்து வந்த மைந்தனை
உள்ளமுருகி பணிந்துகொள்ள முந்துவோம் ... உலக

சண்டை குண்டு சா நிறைந்த துன்பமாய்
தளருமிந்த உலகை மீட்டு மின்பமாய்
பண்டு சொன்ன மேசியாவைக் காட்டுவோம்
பாரில் தெய்வ ராஜ்யத்தை நாட்டுவோம் ... உலக

சிலுவை நாதர் வருகை மிகச் சமீபமே
தேசமெங்கும் அவர் ஊழியம் பெருகவே
நாடு நகர் காடு மேடு ஓடுவோம்
ராஜா வேக வாராரென்று கூறுவோம் ... உலக

# 213

பல்லவி

எத்தனை நாவால் துதிப்பேன் - எந்தன்
கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து

நினைக்க, நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் உருகும்
நின்னைச் சொல் மாலையால் சூட்டி மகிழும் ... எத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

நம்பினோரல்லோ அறிவார் - எந்தன்
தம்பிரானே உந்தன் கம்பீர குணம்
அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்
சம்பூரண சுவரட்சணை செல்வம் ... எத்

பிரார்த்தனை கேட்கும் பெம்மானே - இந்த
பேதை பலவீனம் பாரா தருள் கோனே!
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
தாவிப் பிடித்துக் கவலை தீர்த்தோனே! ... எத்

துலங்குவாய் என் நெஞ்சே தீவிரமாய் - மிகத்
தொழுது ஆண்டவன் செயல் நினைந்து
எண்ணில் அடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையில் வீரமாய்ச் செல்லு ... எத்

# 214

பல்லவி

உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி கர்த்தாவே
உம் கிரியைகள் அதிசயமானதே
உம்மைத் துதிப்பேன் தேவாதி தேவனே
உம் ஆலோசனைகள் அருமையானதே

சரணங்கள்

என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்
என் நினைவுகளையும் தூரத்தில் அறிவீர்
என் நாவினிலே சொல் பிறக்கு முன்னமே
எந்தன் தேவனே அவையாவும் அறிவீர் — உம்மைத்

உமக்கு மறைவாய் இருளும் மூடாதே
இரவும் பகலைப்போல் வெளிச்சமாகுமே
உமது கரத்தை என் மேல் வைக்கிறீர்
இந்த அறிவு ஆச்சரியமானதே — உம்மைத்

நான் வானில் சென்றாலும் நீர் அங்கே இருக்கிறீர்
விடியற் காலத்து செட்டையில் பறந்தாலும்
நான் பாதாளத்திலே படுக்கை போட்டாலும்
வலது கரத்தால் என்னை பிடிக்கிறீர் — உம்மைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் ஆவிக்கு மறைவாய் நான் எங்கே போவேன்
உம் சமுகத்தை விட்டு நான் எங்கே போவேன்
உமது கண்களும் என் கருவைக் கண்டதே
உருவாக்கப்பட்ட என் எலும்பைக் கண்டீரே — உம்மைத்

என்னை சோதித்து அறிந்து கொள்ளுமே
வேதனை வழி என்னின்று அகல
நித்திய வழியில் என்னை நடத்துமே
உந்தனை எந்தன் உள்ளம் பாடிட — உம்மைத்

## 215

பல்லவி

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்
ஏற்றுக் கொள்ளும் இயேசுவே

அனுபல்லவி

அன்னை தந்தை உந்தன் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது இப்போது
.... என்னை

சரணங்கள்

அந்தகாரத்தி னின்றும் பலப்பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனை மீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன் .... என்னை

ஆத்தும சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ள
காத்திருக்கின்றேன் கருணைசெய் தேவா .... என்னை

நீதியின்யுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை ... என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 216

பல்லவி

எம்மை ஜீவ பலியாய்த் தந்தோம் – ஏசையா
எமதுள்ளம் திறந்தளித்தோமே – என்றும்

சரணங்கள்

பலிபீட கொம்பினில் இணைந்திரல்லோ
பலவீனர் பெலன் கொண்டு எழும்பிடுவோமே
பிரகாசித்திட தயை பெற்றிட
பரன் பாதம் தாழ்த்திடுனும் இரங்கிடுமே – தேவா
எம்மை

குயவனின் கைகளில் களிமண்ணைப்போல்
குறை நீக்கி வனைந்தெம்மை உருவாக்குவீரே
உமது சித்தம் எமது பாக்யம்
உம்மை நம்பி தந்தோமே கிருபை கூருமே – தேவா
... எம்மை

எமதாவி ஆத்துமா சரீரம் எல்லாம்
எமக்கல்ல உமக்கென்றும் உரிதாக்கினீரே
பிழைத் தீருமே பரிசுத்தரே
அழைத்தவர் நடத்துவீர் கடைசிவரை – தேவா
... எம்மை

விசுவாச சோதனை புடமிடவே
விசுவாசம் பெருகிட பரிந்துடைத்தீரே
சுகம் தந்தீரே ஜெயமீந்தீரே
இகத்தினில் நீரே எம் பரிகாரியே – தேவா
... எம்மை

பரிசுத்த பூரண மகிமையுடன்
பரமனின் திரு சாயல் அடைந்திடுவோமே
தரிசனமே அளித்திடுமே
தமதன்பின் ஆவியைப் பொழிந்திடுமே – தேவா
... எம்மை

ஜெயங்கொண்ட தாசர்கள் பறந்திடவே
ஜொலித்திடும் மணவாளன் வருகையின் நாளே
ஜெபத்துடனே விழிப்புடனே
ஜெகத்தினில் காத்தென்றும் தவிக்கின்றோமே – தேவா
... எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 217

பல்லவி

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா!
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே

சரணங்கள்

கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே ... உயிர்

மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே .... உயிர்

எம்மா ஊர் சீஷர்களின்
எல்லா மன இருள் நீக்கினாரே
எம் மனக்கலக்கங்கள் நீக்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே ... உயிர்

மரண முள் கூர் எங்கே?
பாதாளமுன் ஜெய மெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம் .... உயிர்

ஆவியால் இன்றும் என்றும்
ஆ! எம்மையும் உயிர்ப்பிக்கவே
ஆவியின் அச்சாரம் எமக்களித்தாரே
அல்லேலூயா துதி சாற்றிடுவோம் ... உயிர்

பரிசுத்தமாகுதலை
பயத்தோடென்றும் காத்துக்கொள்வோம்
எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோமே மகிமையிலே .... உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 218

பல்லவி

என் ஆத்துமாவே என் முழு உள்ளமே!
உன்னதன் உத்தம நாமத்தை ஸ்தோத்திரி

அனுபல்லவி

வையகத்திலுனக்கு மெய்யன் மனதிரங்கிச்
செய்த உபகாரம் மறவாமல்

சரணங்கள்

பாவத்திலமிழ்ந்திப் பணியினால் வருந்திச்
சாபக்குழியில் வீழ்ந்து ஆபத்தில் நிற்கையில்
மீட்டுனக்கிரக்கம் கிருபை என்னும் முடியைச்
சூட்டிய கர்த்தனை நிதம் நினைத்து ... என்

பெற்ற பிதாப்போல் பரிதபித்தவைப்பார்
பற்றிடும் அடியோர் முற்றும் பயப்படில்
அக்கிரமமெல்லாம் கர்த்தன் கருணையால்
ஆக்கினை யின்றி அகற்றிடுவார் ... என்

மாமிசமெல்லாம் வாடும் புல்தானே
பூவில் வளர்ந்திடில் வயலின் பூவாமே
கர்த்தன் கருணைக்குக் கரையென்பதில்லையே
நித்தியமாக நிலைத்திடுமே .... என்

துதித்திடுவீரே தூதர் கணங்களே
ஜோதியாயுள்ளவர் சேனைகளே
ராஜ்யங்களிலவர் காட்டிய கிரியைக்காய்ச்
சாட்சிகள் நாம் துதி சாற்றிடுவோம் .... என்

## 219

பல்லவி

எப்போதும் நாதனை ஸ்தோத்திரி - நாள்
தப்பாமல் ஆண்டவன் பொற்பாதத்தை பணிந்து

அனுபல்லவி

தப்பான பாதைகளில் சிக்காமல் நீ விலகி — எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

இப்பூதலத்தில் நீ மனுஜென்ம மாகினை
ஏதுக்கென் றுன்னத்தி லெண்ணிக்கையாய் நினை
அப்பா என்னப்பா வென்றழைக்கப் பிறந்தனை
— எப்போதும்

சண்டாளனாகினை உன்தோஷம் நீங்கவே
சாயுச்ய வாழ்வுடன் சந்தோஷம் ஓங்கவே
மண்டல விண்டலன் உன்னைக் கைத்தாங்கவே
— எப்போதும்

கிறிஸ்தேசு நாயகன் கிருபை உன் பூரணம்
கெம்பீரமாக நீ சொல் நாமோச் சாரணம்
பரிச்சேதம் ஜாலம் வேண்டாம் தாழ்மை முதற் காரணம்
— எப்போதும்

வீட்டிலும் காட்டிலும் வெளியிலும் வழியிலும்
பாட்டிலும் படிப்பிலும் தேட்டிலும் செழிப்பிலும்
நாட்டிலும் நகரிலும் ஞான முயற்சிலும் — எப்போதும்

தம்பூர் கின்னரங்கள் ஜாலர் வீணைமிகு
தங்கம் தப்லாவுடன் சங்கீத நாதமாய்
அம்பல சிந்தனை அன்போடு பாடிப்பாடி — எப்போதும்

துன்பங்கள் சூழினும் துக்கத்திலாழினும்
இன்ப மறித்து லேன் என்றே நீ தாழினும்
கண்பஞ்சடைய சாவுக்கென்றே நீ விழினும் — எப்போதும்

## 220

பல்லவி

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறைவுண்டு? நீ சொல் மனமே

சரணங்கள்

என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்
விண்ணுல குயர்ந்தோர் உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே சுகபாத்திர மருளும் .... என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமோ மரணமோ, நரகமோ பேயோ
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்
சஞ்சலமினியேன்? நெஞ்சமே மகிழாய் .... என்

ஆசி செய்திடுவார், அருள்மிக அளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும் .... என்

கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்
கடைசிமட்டுங் கைவிடாதிருப்பார்
பாவ மன்னிப்பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்
பரம பதிவியிலுன் என்றனை எடுப்பார் .... என்

போனது போகட்டும் புவி வசை பேசட்டும்
பொல்லான் அம்புகளெய்திடட்டும்
ஆனது ஆகட்டும் அருள்மழை பெய்திடும்
அன்புமிகும் பேரின்பமெனக்கருள் ... என்

## 221

என் மீட்பர் சிந்தின இரத்தத்தினால்
செய்யும் சுத்தம்!
என் பாவம் நீங்க நான் ஜெபித்தால்
செய்யும் சுத்தம்
முன் பாவச் சேற்றிலே நான் அமிழ்ந்தேன்
அநேக மாயிந்தப்பிதங்கள் செய்தேன்
நீர் தந்த வாக்கை நான் நம்பி வாறேன்
செய்யும் சுத்தம்

நான் வெறுக்கும் உள் வினையினின்றும்
செய்யும் சுத்தம்!
லோக மாம்ச பாசக் கறையினின்றும்
செய்யும் சுத்தம்
மீட்பரே உம் வாக்கை நம்பிவாறேன்
மாய்மாலனாய் உம்மை நோக்கமாட்டேன்
லோகத்தார் செல்லும் பாதை செல்லமாட்டேன்
செய்யும் சுத்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிக்கும் பாவ துக்கத்தினின்று
செய்யும் சுத்தம்!
நாசத்தைக் காட்டும் பயத்தினின்றும்
செய்யும் சுத்தம்
மீட்பரே உம்மால் நான் கழுவப்பட்ட
பிள்ளை போல் நம்பி என் கையை நீட்ட
துணிந்து நீர் என்னை சுத்தி செய்ய
கேட்கிறேன்

லோகத்தர் வீம்புக் கஞ்சாதபடி
செய்யும் சுத்தம்
பயமின்றி உம்மை போற்றும் படி
செய்யும் சுத்தம்.
உம்மை நான் சேர்ந்தவன் என்றறிய
என்னை பலப்படுத்தி நீர் ஆள
சோதனை நாளில் நான் கீதம் பாட
செய்யும் சுத்தம்

# 222

பல்லவி

என்ன என்ன ஆனந்தம்
என்று மில்லா ஆனந்தம் //
இயேசு எந்தன் உள்ளத்தில்
வந்த அந்த ஆனந்தம் //

சத்துருவைத் தொலைக்க
சத்திய வேதம் நிலைக்க //
சந்தியிலும் சந்தையிலும்
சாட்சியாக நிற்போமே // ... என்ன

இயேசு இந்த உலகிற்கு
வரும் நேரமாயிற்றே //
இயேசுவின் பிள்ளைகளே
ஆயத்த மாவோமே // ... என்ன

சாத்தானின் கோட்டைகளைத்
தகர்த்துத் தூளாக்குவோம் //
சர்வாயுதங்களைத்
தரித்து முன்னேறுவோம் // ... என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 223

என் மீட்பர் ரத்தம் சிந்தினார்
மா நீதியும் சம்பாதித்தார்
என் சொந்த நீதி வெறுத்தேன்
இயேசுவின் நாமம் நம்புவேன்

பல்லவி

நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல்தான்

கார் மேகம் அவர் முகத்தை
மறைக்கும் காலம் அவரை
எப்போதும் போல நம்புவேன்
மாறுதவர் என்றறிவேன் — நான் நிற்கும்

மரண வெள்ளம் பொங்கினும்
என் மாம்சம் சோர்ந்து போயினும்
உம் வாக்குத் தத்தம் ஆணையும்
என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும் — நான் நிற்கும்

நியாய தீர்ப்புக் காலமதில்
எக்காள சத்தம் கேட்கையில்
அஞ்சேன் என் மீட்பர் நீதியே
அநீதம் என்னை மூடாதே — நான் நிற்கும்

## 224

பல்லவி

எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார்! - வேகம்

இயேசுவின் வருகை மிகச் சமீபமாகுதே - இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்து வந்தால் - பின்பு
அலறிடுவாயே இயேசு கைவிடும் போது! - வேகம்

பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே
மேலோகம் பார்த்து பார்த்து லோகத்தை வெறு இது
மாய லோகமே உன்னை மோசம் போக்குமே! - வேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்கள் இருதயத்தில் ஏதேனு முண்டோ - சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளிவிடுமே - உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்த மாக்காயோ? - வேகம்

லௌகிக கவலையோடு பெருந்தீனியும் - வெறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே - உனை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே - வேகம்

மேகத்தில் இயேசு ராஜன் வேகம் வரவே - பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய் - அன்று
மேக மேறிட நீயும் ஆயத்தந்தானா? - வேகம்

ஆகாயத்தில் நடக்கும் கல்யாணத்திலேயே - சுத்தர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து - அப்போ
அங்கிருப்பாயோ பூவில் ஓடி ஒழிப்பாயோ? - வேகம்

அந்திக் கிறிஸ்து அரசாட்சி செய்யும் வேளையில் - கோப
அக்கினி பூமியில் சொரியும் வேளையில் - நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக் கொள்வாயோ? - வேகம்

## 225

பல்லவி

எழுந்து வாரும் ஐயனே - நசரேயன் யேசுவே
எழுந்து வாரும் ஐயனே

சரணங்கள்

விண்ணவர் போற்றவே மண்ணவர் பாடவே
மாட்சிமை யேசுவை சொல்லிக் கொண்டாடவே
... எழுந்து

விஸ்வாச கேடகம் கையில் தந்திடவே
பண்டையவர் அடைந்த வெற்றிகள் தந்திடவே ... எழுந்து

எலியாவின் ஆவியை எல்லோர்க்கும் ஈந்துமே
பெலமான ஆவியை நிறைவாக ஈந்திட ... எழுந்து

ஜெபத்தினுல் வல்லமை விமலா நீர் கண்டிட
ஓயாத ஜெபசிந்தை எல்லோருக்கும் ஈந்திட ... எழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்சிமை, மாட்சிமை மாட்சிமை என்றுமே
மகுடா அபிஷேகம் பெற்றவரை போற்ற ... எழுந்து

திவெட்டியி லெண்ணெ ஊற்றுகப் பாய்ந்திட
அட்ட பக்க மெல்லாம் பற்றி யெரிந்திட ... எழுந்து

வெளிச்சத்தின் காட்சிகள் கண்களிற் பட்டுமே
திறவாத கண்களும் திறந்துமே பார்த்திட ... எழுந்து

# 226

பல்லவி

எக்காலத்தும் கர்த்தர் இயேசுவை
எந்தன் துணையாய் ஏற்றிடுவேனே
உயர்வோ தாழ்வோ எந்நிலையோ
எந்தன் தஞ்சம் இயேசுவே

சரணங்கள்

மண்ணின் வாழ்வு மாயையாகும்
மனிதன் காண்பது பொய்யாகும்
மாறிடா நேசர் இயேசுவே
மாறாத அன்பு என்றும் போதுமே .... எக்காலத்

அலைகள் மோதி எதிர்வந்தாலும்
கலங்கிடேனே வாழ்க்கையிலே
அசையா எந்தன் நம்பிக்கை
நங்கூரம் என் இயேசு போதுமே .... எக்காலத்

அவரை நோக்கி ஜெபிக்கும்போது
அருகில் வந்து உதவி செய்வார்
கைவிடாமல் கருத்துடன்
காத்தென்னை என்றும் நடத்திடுவார் .... எக்காலத்

தேவ பயமே ஜீவ ஊற்று
மரணக் கண்ணிக்கு விலக்கிடுமே
தேவ பாதையில் நடந்திட
தேவாவியானவர் உதவி செய்வார் .... எக்காலத்

முன்னறிந்து அழைத்த தேவன்
முடிவு வரையும் நடத்திடுவார்
தேவ சாயலாய் மாறியே
தேவாதி தேவனை தரிசிப்போமே .... எக்காலத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 227

எழும்பிடுவீர் ஓ வாலிபரே!
எழும்பிடுவீர் ஜெய வீரர்களே
பூரண சுவிசேஷ இளைஞர் படை
புறப்படட்டும் எங்கும் அணியணியாய்!

இயேசுவுக்காய் பெரும் சேனை ஒன்றை
இலங்கை நாட்டில் திரட்டிடுவோமே - நாம்
சிலுவைக் கொடி பிடித்தே - அல்லேலூயா
சீயோனின் பாதை செல்வோம்

களைப்பினை மேற்கொள்ள கர்த்தரின் பாதத்தில்
காத்திருந்தே புது ஆசிர் பெறுவோம் - நாம்
கழுகினைப் போல் பறந்தே - அல்லேலூயா
கர்த்தரின் சேவை செய்வோம்

இயேசுவின் பின்னே ஓடிடுவோமே
இயேசுவுக்காய் ஜீவன் வைத்திடுவோமே - நாம்
தியாகத்தின் பாதையிலே - அல்லேலூயா
தினமும் நடத்திடுவோம்

ஆவியினால் எப்பொழுதும் நிறைந்தே
ஆவியின் வரங்களை உடையோராக - நாம்
ஆயத்தமாக நிற்போம் - அல்லேலூயா
ஆர்ப்பரித்தே மகிழ்வோம்

எதிரியின் சேனைக்குள் பாய்ந்தே செல்வோம்
எதிரியின் கோட்டைகள் தகர்த்தெறிவோமே - நாம்
எதிரியை வீழ்த்திடுவோம் - அல்லேலூயா
எழுதின பட்டயத்தால்

பாவத்தின் சிறைகளில் வாடிடும் மக்களை
பாவத்திலிருந்தே விடுதலை செய்வோம் - நாம்
பரிசுத்த கூட்டமொன்றை - அல்லேலூயா
பரனுக்காய் சேர்ப்போம்

எக்காள சத்தம் தொனித்திடும் வேளை
எதிர் கொண்டு இயேசு ராஜனை சந்திப்போம் - நாம்
மேகத்தில் ஏறிச்செல்வோம் - அல்லேலூயா
திமேனியை ஆண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 228

என்னில் இருளை ஆனந்தம் வாழ்வினிலே
என் உள்ளத்தில் இயேசு வந்தபின்
விண்ணின் பிரமைவீசுது ஆன்மாவிலே
உள்ளத்தில் இயேசு வந்த பின்

பல்லவி

என் உள்ளத்தில் ஏசு வந்தபின்
அலைபோல் ஆனந்தம் புரளு தென்னிலே
என் உள்ளத்தில் யேசு வந்தபின்

பாவம் இரத்தாம்பரம் ஆயினும் பாசமாய்
என் உள்ளத்தில் இயேசு வந்த பின்
யாவும் கழுவியங் காட்சி புரிகிறார்
உள்ளத்தில் இயேசு வந்த பின்

சத்திய வாழ்வு பேர்நிட்சயமும் தந்தார்
என் உள்ளத்தில் இயேசு வந்தபின்
அச்சம் சந்தேகமும் முற்று மகற்றினார்
உள்ளத்தில் இயேசு வந்த பின்

காவிருட் பள்ளத்தில் மாநகர் ஜோதியே
என் உள்ளத்தில் இயேசு வந்த பின்
ஆவி விண் காட்சி கண்டானந்தம் கொள்ளுதே
உள்ளத்தில் இயேசு வந்த பின்

சீக்கிரம் வருவதாய் உறுதி தந்தார்
என் உள்ளத்தில் இயேசு வந்த பின்
பாக்கியமாம் பெரும் சாட்சியாய் மாற்றி
உள்ளத்தில் இயேசு வந்த பின்

## 229

பல்லவி

என்று காண்பேனோ என் நேச இயேசு ராஜனை - நான்

சரணங்கள்

மேகமீதில் இன்ப ராஜன் இயேசுவும்
காகளத் தொனியுடனே தோன்றும் வேளையில்
போரில் ஜெயங்கொண்டோர் யாரும் கூடுவாரங்கே ·· என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயரான நாசர் ஆர்ப்பரித்துமே
ஆவி ஆத்துமா சரீர மீட்பின் நாளிலே
மன்னனேஇன் மா மகிமை வண்ணம் மாறுவார் ... என்று

ஆவலாய் விழித்து ஆசையாகவே
ஆவியில் போராடி ஜெயித்த ஜெபவீரரை
அன்னல் இயேசும் ஆதரவாய் அணைத்துக் கொள்வாரே
... என்று

வீரமாய் எதிர்த்துச் சோபித் தேகினோர்
சொல்லொணாத பாடுகளை மண்ணில் சகித்தோர்
கண்ணிமைப் பொழுதிலவர் விண்ணிலேகுவார் ... என்று

நேசத்தால் என் இதயம் பொங்கிப் பாயுதே
நேசரே! நீர் வாருமென்ற ஓசை கேட்குதே
பாசத்தால் நான் சோகமடைந்தேன் ஆ! மணாளனே
... என்று

எல்லையில்லா மகிமை வீசும் தேசமே
செல்லவே நீ ஆயத்தமா? ஓ மணாளியே!
வல்லமையாய் இயேசுவோடு சேர்ந்து ஆளவே ... என்று

# 230

எல்லாருக்கும் மா உன்னதா
கர்த்தாதி கர்த்தரே
மெய்யான தேவ மனிதன்
நீர் வாழ்க யேசுவே

விண்ணில் ப்ரதானியான நீர்
பகைஞர்க் காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்
நீர் வாழ்க யேசுவே

பிசாசு, பாவம், உலகம்
இச் சத்துருக்களை
அழிந்து போக மிரியும்
நீர் வாழ்க யேசுவே

நீர் வென்றபடி நாங்களும்
வென்றே றிப்போகவே
பரத்தில் செங்கோல்
செலுத்தும்
நீர் வாழ்க யேசுவே

விண்ணோர்களோடும் மண்
ணுள்ளோர்
என்றைக்கும் வாழவே
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க யேசுவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 231

பல்லவி

மேக மீதில் ஏசு ராஜன் வேகம் வாராரே

அனுபல்லவி

ஆயத்தமுள்ளோரை ஆகாயஞ் சேர்க்க் அலரே வாராரே

சரணங்கள்

ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே அவனியில் வாராரே
மீண்டவரோ மேலோகமே செல்ல மேதினியை விடுவார்

கிறிஸ்துவுக்குள்ளே மரித்தோரெல்லாம் கிளம்பியே
எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம் மறைந்தே போவாரே

பாடுபட்டோர்க்குப் பலனளிப்பாரே பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லா பலனையே கூவியே
கொடுத்திடுவார்

அவருரைத்த அடையாளங்கள் எல்லாம் தவறுமல்
நடக்கின்றதே
அவர் வரும் வேளையை எவருமே அறியார் ஆண்டவரே
அறிவார்

ஆயிரமாயிரம் அவரது வசனங்கள் அதை அறிவிக்கின்றதே
அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் எல்லாம் அதையே
அறிவிக்கிறார்

ஆயிர வருஷ ஆளுகை செய்வார் ஆண்டவர் இயேசுதாமே
நீதி சமாதானம் நிறைந்தே யிருக்கும் ஜோதியின்
ஆளுகையில்

அல்லேலூயா கீதமே பாடி அகமகிழ்ந்தாடிடுவோம்
வல்லவர் வரும் வேளையும் இதோ மெல்லவே நெருங்கிற்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 232

சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
கர்த்தனே எங்கட்கும் கரம் தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்த ஆவி தந்திடும்
சித்தமோடு இந்த வேளை வந்திறங்கிடும்

வானந்திறந்தருளும் பல தானங்களையிந் நேரமதில்
வானவனே ஞானமுள்ள வல்ல குரு நாதனே
தேனிலும் மதுரம் திவ்ய ஆசீர்வாதங்கள்

என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனூற்றிடும்
இன்றும் என்றும் ஈசனேயும் நல் வரங்களீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமற் கண்மணி போல் காத்திடும்
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே .... வான

சுய ஆடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேண்டுமே
தயவு தாழ்மையின் ஆவி தந்தருள வேண்டுமே
மாயமான யாவினின்றும் மனதைப் பேணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே .... வான

அதிக மதிக அன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மை போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளகற்றியே
இது சமய முன்னத பெலனீந்திடும் .... வான

# 233

பல்லவி

கர்த்தாவே என் பெலனே
உம்மில் அன்பு கூர்ந்திடுவேன்
துருகமும் நீர் கேடகம் நீர்
இரட்சண்ணிய கொம்பும் அடைக்கலம் நீர்

சரணங்கள்

மரணத்தின் கட்டுகள் சூழ்ந்த போதும்
துர்ச்சன பிரவாகம் புரண்ட போதும்
நெருக்கத்தின் மத்தியில் குரல் எழும்ப
உருக்கமாய் வந்து உதவி செய்வார் ... கர்த்தாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயை செய்பவனுக்கு நீர் தயை உள்ளவர்
உத்தமனை நீர் உயர்த்திடுவீர்
புனிதனுக்கு நீர் புனிதரன்றோ
புதிய கிருபையின் உறைவிடமே ... கர்த்தாவே

உம்மாலே ஓர் சேனைக்குள் பாய்வேன்
உம்மாலே ஓர் மதிலைத் தாண்டுவேன்
சத்துருவை நான் தொடர்ந்திடுவேன்
சதா காலமும் ஜெயம் எடுப்பேன் ... கர்த்தாவே

இரட்சண்ய கேடகம் எனக்குத் தந்தீர்
உமது கரம் என்னை உயர்த்தும்
கர்த்தரை அல்லால் தேவன் இல்லை
அவரே எந்தன் கன்மலையாவார் ... கர்த்தாவே

பெலத்தினால் என்னை இடைகட்டி
மான்களின் கால்களை போலாக்கி
நீதியின் சால்வை எனக்குத் தந்து
உயர் ஸ்தலத்தில் என்னை நிறுத்துகின்றார் ... கர்த்தாவே

# 234

சாலேமின் ராஜா சங்கையின் ராஜா
ஸ்வாமி வாருமேன் - இந்தத்
தாரணிமீதினில் ஆளுகை செய்திடச்
சடுதி வாருமேன்

சீக்கிரம் வருவோமென்றுரைத்துப்போன செல்வக்குமாரனே
- இந்தச்
சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற செய்திகேளீரோ

எட்டி எட்டி உம்மை அண்ணாந்து பார்த்துக் கண்பூத்துப்
போகுதே - நீர்
சுட்டிக்காட்டிப்போன வாக்குத்தத்தம் நிறைவேறலாகுதே

நங்கை எருசலேம்பட்டினம் உம்மை நாடித்தேடுதே - இந்த
நானிலத்திலுள்ள ஜீவப்பிராணிகள் தேடிவாடுதே

சாட்சியாகச் சுபவிசேஷசம் தாரணி மேவுதே - இந்தச்
சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 235

கட்டடம் கட்டிடும் சிற்பிகள் நாம்
கட்டிடுவோம் கிறிஸ்தேசுவுக்காய்
சுத்தியல் வைத்து அடித்தல்ல
ரம்பத்தால் மரத்தை அறுத்தல்ல

ஒவ்வொரு நாளும் கட்டிடுவோம்
ஒவ்வொரு செயலாம் கற்களாலே
உத்தமர் இயேசுவின் அஸ்திபாரம்
பத்திரமாக தாங்கிடுவார் ... கட்டடம்

கைவேலை அல்லா வீடொன்றை
கடவுளின் பூரண சித்தப்படி
கட்டிடும் சிறிய சிற்பிகள் நாம்
கட்டிடுவோமே நித்தியத்திற்காய் ... கட்டடம்

பாவமாம் மணலில் கட்டப்பட்ட
பற்பல வீடுகள் வீழ்ந்திடுமே
ஆவலாய் இயேசுவின் வார்த்தைக் கேட்போம்
அவரே மூலைக்கல் ஆகிடுவார் ... கட்டடம்

## 236

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலேமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு! அல்லேலூயா !!

பாவத்தின் சுமை அகற்றி கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மை கரம் நீட்டி காத்த
பரிசுத்த தேவன் அவரே .... கர்த்தாவின்

நீதியின் பாதையிலே – அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப
புது வாழ்வைத் தருகின்றாரே .... கர்த்தாவின்

மறுமையின் வாழ்வினிலே – இயேசு
மன்னவன் பாதத்திலே
பசிதாகமின்றி துதிகானம் பாடி
பரனோடு நிதம் வாழ்வோம் .... கர்த்தாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 237

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்பு தாருமே இறைவா
மன்னிப்பு தாருமே இறைவா

ஆண்டவர் ஆன்மாவை விரும்புகின்றார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகின்றார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் - நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார் — மன்னிப்பு

என் சொத்தைத் தந்திடும் என்று கேட்டான்
தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான்
தன் இஷ்டம் போலங்கே செலவு செய்தான் - அவன்
தன் வாழ்வை பாலத்தில் மூழ்கடித்தான் — மன்னிப்பு

பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்
தன் தந்தை அன்பினைக் கனவு கண்டான்
மன்னிப்புக் கேட்டங்கே ஓடி வந்தான் - தந்தை
மன்னித்து மகனாக அணைத்து ஏற்றார் — மன்னிப்பு

ஆண்டவர் ஞானத்திற் கினிமையுண்டு
கண்டிக்கக் காலத்தைக் கடத்துகின்றார்
கண்டித்துக் கருணை சொல் கூறுகின்றார் - பாவி
திருந்திட அரும் கொடை வழங்குகின்றார் — மன்னிப்பு

குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால் - தேவன்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார் — மன்னிப்பு

## 238

என் மீட்பர் சென்ற பாதையில் போக ஆயத்தமா?
கொல்கதா மலை வாதையில் பங்கைப் பெறுவாயா?

சிலுவையை நான் விடேன்
சிலுவையை சிலுவையை நான் விடேன்

ஊரார் இனத்தார் மத்தியில் துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவே திடனாய் நிற்பாயா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகத்தாலும் பசியாலும் நோய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும் சிலுவை சுமப்பாயா?

பாவாத்துமாக்கள் குணப்பட நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடப்பட மெய்யுத்தம் செய்வாயா?

லோகத்தார் மாண்டு போகிறார் மெய்வீரர் இல்லாமல்
பார் மீட்பர் ஜீவனை விட்டதால் தொங்கச் சிலுவையில்

வாழ்நாளெல்லாம் நிலை நின்று சிலுவை சுமப்பேன்
தேவ அருளினுல் வென்று மேல் வீட்டைச் சேருவேன்

# 239

கண்ணிகள்

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே – நான்
தாழ்ச்சி அடையேன் என்றுமே
அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்

ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை – தம்
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தினிமித்தம் அவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார்

மரணப்பள்ளத்தாக்கில் நடந்திடினும் – நான்
எப்பெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே

சத்துருக்கள் முன்பில் எனக்காகவே – அவர்
பந்தி யொன்றுயத்தஞ் செய்தார்
என்னை தம் எண்ணெயால் அபிஷேகித்து
என் பாத்திரம் நிரம்பியே வழியச் செய்தார்

ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும் – என்னை
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 240

பல்லவி

என்ன செய்வேன் ஏது செய்வேன்
இந்தப் பாடு பட்டதற்காய்
என்ன பதில் செய்திடுவேனையா
எம்பரனே இயேசு நாதா

அனுபல்லவி

வண்ண மலர்க்காவதனில்
மனவருத்த முடன் நொந்தே
உன்னைப் பலியாகத் தந்தே
உதிர வேர்வை சொரிந்ததற்காய் — என்ன

சரணம்

பாதகம் மிகப்புரிந்த
பாவி கொடியேனிருக்க
யாதும் ஒரு குற்றமற்ற
எந்தையே நீ கட்டுண்டாயே — என்ன

கண்ணை மறைத்தே யொருவன்
கன்னத்திலறைந்து மிகச்
சன்னை பண்ணி வைதபோது
தாங்கி நின்றாய் தயாபரா — என்ன

முள்ளின் முடியைச் தரித்து
முழுச் சிவப்பங்கி சாத்தி
துள்ளிக் குதித்தே சேவகர்
தூஷணிக்கக் கேட்டாயே — என்ன

வாரினாலடித்தும் மற்றும்
வாதைகள் மிகப்புரிந்தும்
பாரச் சிலுவை சுமத்திப்
பாடுகள் படுத்தினாரே — என்ன

கல்வாரி மலையதனில்
கள்வரிரு பேர் நடுவில்
பொல்லாச் சிலுவை மீதினில்
பொன்றினாயே புண்ணியரே — என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 241

பல்லவி

ஐயையா நான் வந்தேன் — தேவ
ஆட்டுக்குட்டி வந்தேன்

சரணங்கள்

துய்யன் நீர் சோரி பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் என்னை அழைத்தீர் - தயை
செய்வோம் என்றே இதை அல்லாது போக்கில்லை
தேவாட்டுக்குட்டி வந்தேன் — ஐயையா

எண்ணம் வெளியே போராட்டங்கள் உட்பயம்
எத்தனை எத்தனையோ! - இவை
திண்ணம் அகற்றி எளிஞனை ரட்சியும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் — ஐயையா

ஏற்றுக் கொண்டு மன்னிப்பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும் - மனம்
தேற்றிக் கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி வந்தேன் — ஐயையா

மட்டற்ற உம் அன்பினாலே தடை ஏதும்
மாறி அகன்றதுவே - இனி
திட்டமே உந்தன் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் — ஐயையா

# 242

கரை ஏறி. உமதண்டை
நிற்கும் போது ரட்சகா
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டுப் போவேனோ!

பல்லவி

ஆத்மா ஒன்றும் ரட்சிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா
வெறுங்கையனாக உம்மை
கண்டுகொள்ளல் ஆகுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்க்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நிர்ப்பந்தராய் .... ஆத்மா

தேவரீர் கைதாங்க சற்றும்
சாவுக் கஞ்சி கலங்கேன்
ஆயினும் நான் பலன் காண
உழைக்காமற் போயினேன் ... ஆத்மா

வாழுள் எல்லாம் வீணுளாகச்
சென்று போயிற்றே! ஐயோ!
மோசம் போனேன்! விட்ட நன்மை
அழுதாலும் வருமோ! ... ஆத்மா

பக்தரே! உற்சாகத்தோடு
எழும்பிப் பிரகாசிப்பீர்
ஆத்துமாக்கள் இயேசுவண்டை
வந்து சேர உழைப்பீர் ... ஆத்மா

## 243

கல்வாரியின் மாமலையில் கள்வர்கள் நடுவினிலே
சிலுவையின் மீதினிலே சிந்திய இரத்தமே

ஜீவன் ஈந்தார் சாபம் போக்க
பாவியாய் மாறினுர்
ஜெயம் பெற்றே ஜீவித்திட
சிலுவை ஏகினுர் ... கல்வாரி

பாவக்கறை நீக்கிடவே
பலியாய் மரித்தார்
பாதம் சேர ஜீவ வழி
பாதையைக் காட்டினுர் ... கல்வாரி

தாகமுடன் ஏகியுந்தன்
தாகத்தைத் தீர்த்திடவே
தாரணியில் மானிடனே
தன்னிடம் சேர்த்திடவே ... கல்வாரி

மாசில்லாத ஆட்டைப்போல
மேசியா பலியாமே
மாயமான உலகினை
தூயதாய் மாற்றிடவே ... கல்வாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

கானகப்பாதை கடும் பழையும்
காரிருளே சூழ்ந்திடினும்
மேக ஸ்தம்பம் அக்கினி தோன்றும்
வேகம் நடந்தே முன் செல்லுவோம்

பல்லவி

பயப்படாதே கலங்கிடாதே
பாரில் ஏசு காத்திடுவார்
பரம கானான் விரைந்து சேர்வாய்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவாய்

எகிப்தின் பாவ வாழ்வை வெறுத்தே
இயேசுவின் பின்னே நடந்தே
தூய பஸ்கா நீ புசித்தே
தேவ பெலனாய் முன் செல்லுவாய் ... பயப்

கடலைப்பாரும் இரண்டாய்ப் பிளக்கும்
கூட்டமாய் சென்றே கடப்பாய்
சத்துரு சேனை மூழ்கி மாளும்
ஜெயம் சிறந்தே முன் செல்லுவாய் ... பயப்

குளிர்ந்த ஏலீம் பன்னீரூற்றும்
காணுவாய் பேரீச்ச மரம்
கன்மலையில் தாகம் தீர்த்து
மன்னா ருசித்தும் முன் செல்லுவாய் .... பயப்

கொடுமை யுத்தம் உன்னை மடக்கும்
கோரப் போர்தான் வந்தெதிர்க்கும்
தாங்கும் கர்த்தர் ஓங்கும் கையால்
தூக்கிச் சுமப்பார் முன் செல்லுவாய் .... பயப்

கசந்த மாரா உன்னைக் கலக்கும்
கஷ்டத்தால் உன்கண் சொரியும்
பின் திரும்பி சோர்ந்திடாதே
நன்மை அருள்வார் முன் செல்லுவாய் .... பயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 245

பல்லவி

என்ன என் ஆனந்தம் என்ன என் ஆனந்தம்
சொல்லக்கூடாதே //
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே //

சரணங்கள்

கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் நன்ருய்
மகிழ் கொண்டாடுவோம் //
நாடியே நம்மைத் தேடியே வந்த நாதனைப்
போற்றிடுவோம்// — என்ன

பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே //
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே // — என்ன

அட்சயன் பட்சயமாய் இரட்சிப்பை
எங்களுக்கருளினதாலே //
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே // — என்ன

வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக்கொடியுடனே //
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனை ஸ்தோத்தரிபோம் // — என்ன

## 246

என் பாவந்தீர்ந்த நாளையே
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷ மாய்க் கொண்டாடுவேன்

இன்ப நாள்! இன்ப நாள்
என் பாவந்தீர்ந்து போன நாள்
பேரன்பர் என்னை ரட்சித்தார்
சீராக்கி இன்பம் நல்கினர்
இன்ப நாள் இன்ப நாள்
என் பாவந் தீர்ந்து போன நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மானுவேல் இப்பாவியை
தம் சொந்த மாக்கிக் கொண்டனர்
சந்தேகம் நீக்கி மன்னிப்பை
தந்தென்னை அன்பாய்ச் சேர்த்தனர்

என் உள்ளமே உன் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழுவாய்
ஆருயிர் தந்த நாதரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய்

ஆட்கொண்ட நாதா என்தனை
நாடோறும் தத்தச் செய்குவேன்
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னோசையாலே பாடுவேன்

# 247

நான் நேசிக்கும் தேவன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர்

நான் பாடி மகிழ்ந்திடுவேன்
என் இயேசுவை துதித்திடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம்
அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்

கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில்
படகாய் வந்திடுவார்
இருள் தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார் ... நான்

பாவ நோயாலே வாடும் வேளையில்
மருத்துவராகிடுவார்
மயங்கி விழும் பசிதனிலே
மன்னாவைத் தந்திடுவார் ... நான்

தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனை
தேற்றிட வந்திடுவார்
கால் தளரும் வேளை தனில்
ஊன்றுகோல் ஆகிடுவார் ... நான்

நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனி கலங்கிடேனே
எந்தனுக்கே காவல் அவர்
நான் உடல் அவர் உயிரே ... நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 248

பல்லவி

கர்த்தர் பெரியவர் அவர் நமது
தேவனுடைய நகரத்திலும்
தமது பரிசுத்த பர்வதத்திலும்
மிகத் துதிக்கப்படத் தக்கவர்

சரணங்கள்

வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமும்
சர்வ பூமியின் மகிழ்ச்சியாயிருக்கிறது
அது மகா ராஜாவின் நகரம்

அதின் அரண்மனைகளில் தேவன் உயர்ந்த
அடைக்கல மாயறியப்பட்டுள்ளார்
இதோ ராஜாக்கள் கூடிக்கொண்டு ஏகமாய்க்
கடந்து கொண்டு வந்தார்கள்

அவர்கள் அதைக் கண்டபோது பிரமித்துக்
கலங்கி விரைந் தோடினர்கள்
பிரசவ வேதனைப்படும் ஸ்திரீயைப் போல
நடுங்கி வேதனைப் பட்டார்கள்

கீழ் காற்றினல் தர் ஷீசினுடைய
கப்பல்களை நீர் உடைக்கிறீர்
சேனைகளுடைய கர்த்தரின் கிரியையை
மகா நகரத்திலே கண்டோம்

தேவனே உமது ஆலயத்தின் நடுவில்
உம்முடைய கிருபையை
நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்
உம் நாமம் விளங்குகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

249

சரணங்கள்

பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா?
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினால்
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா?
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

பல்லவி

மாசில்லா சுத்தமா?
திருப் புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிட குணம் மாறிற்றா?
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

பரலோக சிந்தை அணிந்தீர்களா?
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறுஜென்ம குணமடைந்தீர்களா?
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

மாசு கறை நீங்கும் நீசப் பாவியே
சுத்த ரத்தத்தின் சக்தியினால்
முக்தி பேறுண்டாகும் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

மணவாளன் வரக்களிப்பீர்களா?
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்சகரை ஏற்றுச் சுகிப்பீர்களா?
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 250

சரணங்கள்

திவ்ய அன்பின் சத்தத்தை ரட்சகா!
கேட்டு உம்மை அண்டினேன்
இன்னும் கிட்டிச் சேர என் ஆண்டவா
ஆவல் கொண்டிதோ வந்தேன்

பல்லவி

இன்னும் கி...ட்...டச் சேர்த்துக் கொள்ளுமேன்
பாடுபட்ட நாயகா!
இன்னும் கிட்டக் கிட்டச் சேர்த்துக் கொள்ளுமேன்
ஜீவன் தந்த ரட்சகா!

என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கிக் கொள்ளுமேன்
உம்மை வாஞ்சையோடெந்தன் உள்ளத்தில்
நாடித் தேடச் செய்யுமேன்

திருப்பாதத்தில் தங்கும் போதெல்லாம்
பேரானந்தம் காண்கிறேன்
உம்மை நோக்கி வேண்டுதல் செய்கையில்
மெய்ச் சந்தோஷ மாகிறேன்

இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்
திவ்ய அன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராதனை நேரங்கள்

| | |
|---|---|
| ஞாயிறு ஆராதனை | ஞாயிறு காலை 8-30 மணிக்கு |
| கிறிஸ்தவ வளர்ச்சி கல்வி | ஞாயிறு காலை 10-30 மணிக்கு |
| வேதப் பாடம் | புதன் மாலை 4-30 மணிக்கு |
| உபவாச ஜெபம் | வெள்ளி காலை 9-00 மணிக்கு |
| வாலிபர் கூட்டம் | வெள்ளி மாலை 4-00 மணிக்கு |
| கிறிஸ்தவ சாரணியப் (Royal Rangers) | சனி மாலை 3-00 மணிக்கு |

வியாதி, பில்லிசூனியம், பாவம் ஆகிய கட்டுகளில் இருந்து விடுதலை பெற ஜெபிக்கப்படும்.

யாவரும் வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org